sky தமிழ் NEWS

ISSN 2792-1026

skytamil.lk@gmail.com
www.news.skymediasl.com

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜுன் 2021 | @skytamil.lk



## இலங்கையில் தேயிலைச் செய்கையின் வரலாறு



## தொழில்-வர்த்தகத்துக்கு ஆங்கிலம் ஏன் இன்றியமையாததாகிறது?



## பிறந்த தின கொண்டாட்டம் பொதுவான பார்வை!!




## கொஞ்சம் திருந்துங்கள்

The Great Indian Kitchen



# இந்தியாவின் பிரபல சர்வதேச வாழ்வியல் மற்றும் மணநல ஆலோசகர்

# Dr. ஃபஜிலா ஆசாத்

## அவர்களுடனான நேர்காணல்


ISSN 2792-1026
sky தமிழ் NEWS
துணிந்தெழு
எமது வாசகர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க அடுத்த
எமது துணிந்தெழு சஞ்சிகை
ஆண் ஆளுமைகளுக்கும்
வாய்ப்பளிக்கும் ஓர் களமாக
மாற்றப்பட உள்ளது...


RAHMATH FOUNDATION
sky தமிழ் TV CHANNEL
ஸ்கை தமிழ் நடாத்தும்
கல்முனை மாநகரசபை பிரதிமேயர் ரஹ்மத் மன்சூர் அவர்களின்
வழிகாட்டலில் ரஹ்மத் பவுண்டேசன் அனுசரணையில்
மாபெரும் கட்டுரைப் போட்டி
தலைப்பு
கொரோனா நோயினை கட்டுப்படுத்துவதில்
வக்சீன் (தடுப்பூசி) பாவனையின் முக்கியத்துவம்
COVID 19
ஆரம்ப நாள்:
10 June 2021
முடிவுத் திகதி:
30 June 2021
முடிவு அறிவிப்பு நாள்:
5 July 2021
Rs.15,000/-
Rs.10,000/-
Rs.5,000/-
பணப்பரிசை வெல்லுங்கள்
ஆறுதல் பரிசாக தெரிவு செய்யப்படும் சிறந்த கட்டுரைகள் அனைத்திற்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
MORE DETAILS
0776810800
rahmathfoundationsl@gmail.com
PRINT MEDIA PARTNER
துணிந்தெழு



பிறந்த தின கொண்டாட்டம் பொதுவான பார்வை!!
11 பக்கம்

21 பக்கம்
இந்தியாவின் பிரபல சர்வதேச வாழ்வியல் மற்றும் மணநல ஆலோசகர்
Dr. ஃபஜிலா ஆசாத் அவர்களுடனான நேர்காணல்





இலங்கையில் தேயிலைச் செய்கையின் வரலாறு
34 பக்கம்

40 பக்கம்
கொஞ்சம் திருந்துங்கள்
The Great Indian Kitchen







தொழில்—வர்த்தகத்துக்கு ஆங்கிலம் ஏன் இன்றியமையாததாகிறது?
45 பக்கம்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

**பிரதம ஆசிரியர்:**

ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**

நுஸைலா பதுர்தீன்
பாத்திமா ஷிப்னா ஆதம்

**நிர்வாக குழு:**

றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி

**ஆசிரியர் குழு :**

எம்.நஸ்றீன் பானு
பாத்திமா சிரோணி
பஹ்ரியா பாயிஸ்
பாஷிரா ஜுனைடீன் - ஊடகவியலாளர்
முஹம்மட் ஹாசில் - ஊடகவியலாளர்
நியாஸ் பரீட் (சிராஜி) - கத்தார்
அகீப் நஸீர் - Graphic Designer
ஷஹ்னா ஸப்வான்
மஹ்ரூப் பௌமியா
பாத்திமா ஸஹ்ரா - மாத்தளை
எம்.ஐ.எம். முபீத்
எம்.பஹ்த் ஜுனைட் - ஊடகவியலாளர்
ஷகீனா ஷாகிர்

**ஆலோசகர்கள் :**

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
ரிம்ஸா முஹம்மத் - எழுத்தாளர்
அமின் மொஹமெட் (தமிழ்நெஞ்சம்)
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் எ ஹமீது - UK
வாக்கிர் பாரிஸ் - Faby's Product

இறை ஆசியுடனும்,
வாசகர்கள்,
நண்பர்களின்
ஆத்மார்த்தமான
அன்பும், ஆதரவுடனும்
தொடர்ந்து பயணிப்போம்.
**ஸ்கை தமிழின்
சொந்தங்கள்
அனைவருக்கும்
நன்றிகள்!**



Basith jm
Director - Sky Tamil Media

**www.skymediasl.com**
**skytamil.lk@gmail.com**
**+94776391188**

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனில் மேலே குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

@skytamil.lk

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
முறை | இதழ் - 10 | 20 ஜூன் 2021





# முதுமையில் தனிமை ஓர் கொடுமை

என் ஆருயிரே!!
என்னை தன்னந் தனியே தவிக்கவிட்டு
மரணமில்லா தேசம் நோக்கி
சென்றாயோ??

உன் பேச்சும் சிரிப்பொலியும்
நிறைந்த இக்குடிலோ

இன்று நிசப்தத்தில்...
நீ நித்தமும் சமைத்த அடுப்படியோ
இன்று வெறுமையாய்...

இம் முதியவனோ அநாதரவாய் இங்கு...
எங்கு பார்ப்பினும் இருள் சூழ்ந்த தனிமையே
என்னை அழைக்கிறது

மனம் விட்டுப் பேச உறவுமில்லை
பெற்ற பிள்ளைக்கு அக்கறையுமில்லை
உற்ற துணைவியோ நிலையான உலகை
நோக்கி சிட்டாகிப்போனாள்
தனிமையில் பித்தனாகிப் போகிறேன்

தினம்..தினம்..
ஏனிந்த சோதனை
இறைவா!!

நானும் வந்திடவோ
நிலையான உலகை நோக்கி!!!

**அப்ரோசா முபாரக்**
**கல்பிட்டி**

# சில வேளைகளில் சில நிஜங்கள்

சில வேளைகளில்
காற்றின் மென்மை கூட
கனமாகி போகிறது
மனதுக்கு....

சில வேளைகளில்
கற்பாறையுடன்
மோதும் விரல்கள் கூட
உளியாகிப் போகிறது
அதிசயமாய்...

சில வேளைகளில்
காலத்தை வரைய
கண்ணீர் கூட
தூரிகையாகிறது
வித்தியாசமாய்.....

சில வேளைகளில்
எதிர்பார்க்கும் எண்ணங்கள் கூட
பாலைவனத்து மணல்களுடன்
ஸ்நேகமாகிறது ஒரு
பெருந்தாகத்திற்காக...

சில வேளைகளில்...
பார்வையின் தேடலில்
மாயைகளின் நிழல்கள் கூட
கைப்பிடிக்க வருகிறது
இரவின் ஒளிருக்கு
நிஜத்தை கொடுத்து விட்டு...

ஆனால்....
வாழ்வியல் ஒரு
அழகான நேசமென்று
ஒரு கனவு வந்து
அடிக்கடி
முத்தமிட்டு செல்லும் போது
அனைத்தும் துச்சமாகிறது...

**பாத்திமா நளீரா**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜுன் 2021

# ஹைக்கூ கவிதைகள்
ஹைக்கூத் தூரிகை கவிஞர்கள் இணையம்

பசுமையிழக்காத கிளைகள்
ஆடிக் களிக்கின்றன ..
ஆண் பறவைகள் !/

**பொத்துவில்**
**மீராசாகிபு சமூன்**



ஆடையில்லா தேகம்
அசுத்தம் நிறைந்திருக்கிறது
குப்பைத்தொட்டி ...

**மலர் மைந்தன்**



படிக்கும் சிறுவர்கள்
குப்பையில் புதையுண்டு
கிடக்கின்றன
பாடப் புத்தகங்கள் !/

**இளம்பிறையு இக்பால்**



வயல் நிலம்
இன்று ஆச்சரியமாகவே
இருக்கிறது
உழவனின் கோவணம் !/

**வன்னித் தமிழ் மறவன்..**



ஒளிரும் நிலவின் வெளிச்சம்
முற்றம் முழுவதும்...
உதிர்ந்த இலைகள் !/

**றாபீ புத்தளம்**



எரியூட்டியும் குப்பைக் கிடங்கு
புகைந்து கொண்டிருக்கிறது
அனாதைப் பிணம் !/

**லா. பெனிஸ் தமிழ் மருத்துவர்**



புழுதி மண்
வாசம் கிளம்பி வருகிறது
கருவாட்டுக் குழம்பு !/

**எம் ஐ எம். அஷ்ரப்**



வயல்வெளித் தோற்றம்
வசீகரமாகவே இருக்கிறது
பசுவின் அழகு !/

**முனைவர் கவியருவி**
**ஜோதிபாரதி, தேனி.**



வயலின் விளைச்சல்
இந்த ஆண்டும் ஏமாற்றுகிறது
பருவ மழை !/

**கரு.கிருஷ்ணமூர்த்தி**



சுகாதாரச் சீர்கேடு
கூடிக்கொண்டே இருக்கிறது
நோய்த் தொற்று !/

**கலாராணி லோகநாதன்**



ஓடும் நதி
சலசலக்கும் சத்தத்துடன் ..
வயலில் யானை !/

**எஸ். செல்வி**
**இலங்கை கலஹா**



பசுமையான வயல்வெளி
நிறைந்து போய்த் தெரிகிறது
கிணற்றில் நீர் !/

**ரேணுகா ஸ்டாலின்**



தேடலில் ஆர்வம்
நாளுக்கு நாள் அதிகரிக்கிறது
உணவுப் பற்றாக்குறை !/

**நஷீரா ஹஸன்**



**ஹைக்கூ கவிதைகள்**
ஹைக்கூத் தூரிகை கவிஞர்கள் இணையம்



# ஆன்மாவின் செய்தி

என் இறப்பின் போது
யாரும் கண்ணீர்
சிந்தாதீர்கள்

என் இறப்பின் போது
யாரும்
கருணை கொள்ளாதீர்கள்

என் இறப்பின் போது
யாரும் என்னை
சூழ்ந்து கொள்ளாதீர்கள்

என் இறப்பினை
யாரும்
யார் யாருக்கும்
தெரியப்படுத்தாதீர்கள்

நான்
இருக்கும் போதே
என்னை
கடந்து சென்றதை போல்

என்
இறப்பினை
கடந்து விடுங்கள்

நான்
இருக்கும்போதே
தனிமையில்
இருப்பதைப் போல்
என்
இறப்பும் தனிமையாகவே
இருக்கட்டும்

என்
உயிரற்ற சடலத்தின்
மீது
யாரும் தலைகோதி விடாதீர்கள்
நான்
இருக்கும் போது
எனக்கு அது
தேவைப்பட்டிருக்கலாம்

என்
உயிரற்ற சடலத்தின்
மீது
யாரும் விரல்களை
கோர்த்துக் கொள்ளாதீர்கள்
நான் இருக்கும் போதென்றால்
அது ஆறுதலாக இருந்திருக்கும்

என்
உயிரற்ற சடலத்தை
யாரும்
அணைத்துக் கொள்ளாதீர்கள்
நான்
இருக்கும் போதென்றால்
அது வாஞ்சையாகவிருந்திருக்கும்

நான்
இருக்கும்போது
என்னை
கடந்ததுபோல்
என் இறப்பினையும்
எளிதாகவே
கடந்துவிடுங்கள்

ஆன்மாவின்
செய்தி
அப்படியே
கடந்துவிடுங்கள்.

மயிலிறகு மனசு
**சிபானா அஸீம்**
**மருதமுனை**



# அவலம்

தெருவெல்லாம் உறங்கிற்று
ஊரெல்லாம் அடங்கிற்று
உண்ணவழி ஏதென்று
வீட்டிலெங்கும் ஒலித்திற்று
தொழில்கள் ஏதுமின்றி
வீட்டினிலே அடைபட்டு
சேர்த்துவைத்த சல்லியெல்லாம்
ஊரடங்கில் கரைந்திற்று

குழந்தைகள் பசியினால்
குரலெடுத்து அழும் சத்தம்
அன்னையவள் நெஞ்சினிலே
ரணகளமாய் பதிந்திற்று

பிஞ்சு மனம் கொண்ட தாயும்
பச்சரிசிச் சோறாக்கி அதனோடு
சேர்த்துண்ண கறியிங்கு இல்லையென
தன் கணவன் முகம் பார்க்க
பாசம் கொண்ட தந்தையும்
ஒரு வேளை சோற்றுக்கும்
ஒரு நாளும் பஞ்சமின்றி
ஒருக்காளும் விட்டதில்லை

வீட்டு முற்றத்தில்
நாட்டி வைத்த வெண்டியிலே
முற்றலோடு பிஞ்சும்
வெட்டி வந்து தான் கொடுக்க
பக்குவமாய் சமைத்தெடுத்து
பசியாற்றி மகிழ்ந்திட்டாள்

தொடர்ந்து பெய்த மழை நீரும்
வீசிய சுழற் காற்றும்
இரவு பகலாய் தொடர்ந்திருக்க
வெள்ள நீரும் வீட்டோடு
சங்கமித்துப் போகயிலே
உணவோடு உறையுளுக்கு
வழியேது வென
ஏங்கித் திணறும்
ஏழைக் குடும்பங்கள்
எம் நாட்டில்
எத்தனை எத்தனை? ?

**முல்லை ஹிமா**
**மதுங்குளி - புத்தளம்**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜுன் 2021



# மத சகிப்புத் தன்மை

## காலத்தின் கட்டாயத் தேவை

பல வகையான மதங்களையும், பல வகையான கலாச்சாரங்களையும் வாழ்வியல் நெறியாகக் கொண்டு வாழும் குடிகளையுடைய நாடுகளில் மனித உறவுகளைப் பேணுவதற்கும், மனித உறவுகளை விஸ்தரிப்பதற்கும், மனித வாழ்வை மனிதம் நிறைந்ததாக சீரமைப்பதற்கும் ஏற்ற சிறந்த மூலைக்கல் "மத சகிப்புத் தன்மையே" என்பது பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.

கடந்த காலங்களில் மத சகிப்புத் தன்மையற்ற செயற்பாடுகளினால் இடம் பெற்ற தீயபல சம்பவங்களின் காரணத்தினாலேயே, இன்று அதுபற்றிப் பேச வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

இறந்த காலங்களிலும், நிகழ்காலத்திலும் இந்த மத சகிப்புத் தன்மையற்ற போக்கினால் இடம் பெற்ற, இடம் பெறுகின்ற வன்முறைகளையும், காழ்ப்புணர்ச்சிகளையும் ஒருவர் பார்க்கின்ற போது இந்த மத சகிப்பற்ற தன்மை ஒரு நீடித்த வாழ்வின் நிச்சயத்தை அச்சுறுத்தும் மிக மோசமான செயல் என்று அறிந்து கொள்ள முடியும்.

மத சகிப்புத் தன்மை என்பது ஒருவர் தன்னுடைய நம்பிக்கைகள், கொள்கைகள், வழிமுறைகள் வணக்க வழிபாடுகள் என்பன குறித்து வெளிப்படையாக பேசக் கூடாது என்பதல்ல. மாறாக மற்றவர்களுடைய நம்பிக்கைகள், கொள்கைகள், வழிமுறைகள், வணக்கவழிபாடுகள் என்பவற்றை அற்பமாக எண்ணி குறைகூறி நையாண்டி செய்து அவர்களை அழிக்க முனைவதே மத சகிப்புத் தன்மையற்ற நிலையின் ஏற்றமான விளக்கமாகும்.

பலவக்கிரங்கள் நிறைந்த போராட்டங்களுக்கும், துவேஷங்கள் நிறைந்த செயற்பாடுகளுக்கும், ஒடுக்க வேண்டும் அழிக்க வேண்டும் என்பவற்றை நோக்காக கொண்ட கலகங்களுக்கும் மூலகாரணம் இந்த மத சகிப்பற்ற தன்மையின் உச்சமேயாகும். உலகின் பெரும்பாலான மக்களால் சரி, பிழை, விஞ்ஞான பூர்வமான கேள்விகள், விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதாகவே "மதச் சுதந்திரம்" நோக்கப்படுகின்றது.

அந்தந்த மதங்களினுடைய அனுஷ்டானங்கள் தமக்கு எவ்விதம் தோன்றினாலும் அதை சகித்துக் கொண்டு "அது அவர்களுடைய நம்பிக்கை " என்ற அடிப்படையில் அதற்குண்டான மரியாதை வழங்கப்பட வேண்டும்.

அப்படி மதிப்பும் மரியாதையும் வழங்கப்படுகின்ற போது "மதத்தின்" பெயரால் மனிதன் மனிதனை புசிக்கத் துடிக்கும் வக்கிரமான சிந்தனைகள் அத்தனையும் இல்லாதொழிந்து. எமக்கு பசிப்பதைப் போன்று தான் அவர்களுக்கும் பசிக்கும் எமக்கு வலிப்பதைப் போன்று தான் அவர்களுக்கும் வலிக்கும் அவர்களும் எம்மைப் போன்ற மனிதர்கள் தான் என்ற மனிதம் நிறைந்த நல்ல சிந்தனைகள் தோற்றம் பெற்று மனித வாழ்வு வளம்பெற வழிசமைக்கும், எதிர்கால சந்ததிகளின் வாழ்வு ஒற்றுமை நிறைந்ததாக மனிதத் தன்மைகள் நிறைந்ததாக மாறும்.
மக்களுடைய மத சுதந்திரம் குழி தோண்டி புதைக்கப்பட்டுவிடுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

"உலகின் எல்லா பாகங்களிலும், கிட்டத்தட்ட எல்லா பொருளாதார, சமூக, கொள்கை அமைப்புகளிலும், மத அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் பாகுபாடு நிலவுகிறது" என்று மனித உரிமைகளுக்கான ஐ.நா கமிஷனால் நியமிக்கப்பட்ட முன்னாள் சிறப்பு நிருபர் "ஆன்ஞ்சலூ டால்மேடா ரிபேரோ" குறிப்பிடுகிறார்.

**1997-ல் பிரசுரிக்கப்பட்ட, மத மற்றும் நம்பிக்கையின் சுதந்திரம் - ஓர் உலக அறிக்கை (ஆங்கிலம்) என்ற புத்தகத்தில், பதிப்பாசிரியர்கள் "கெவன் பாய்ல்" மற்றும்" ஜூலியட் ஷீன்" இவ்வாறு கூறுகின்றனர்:**

"சிறுபான்மை மதத்தொகுதியினர் துன்புறுத்தப்படுவதும், மேலும் மத நம்பிக்கைகளை சட்ட விரோதமானதென தடை செய்வதும், மதப் பாகுபாடு ஊடுருவுவதும்.
இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசியிலும் தினசரி நிகழ்ச்சிகளாகி விட்டன."
இருப்பினும், மதப் பாகுபாடு சிறுபான்மை மதத் தொகுதியினரை மாத்திரம் பாதிக்கவில்லை.

**"எந்த மதமுமே தாக்கப்படுவதில் இருந்து தப்ப முடியவில்லை" என மனித உரிமைகளுக்கான ஐ.நா கமிஷனின் மத சகிப்பின்மை பற்றிய சிறப்பு நிருபர் "** அப்துல்ஃபடாக் ஆமோர்" கருத்து தெரிவிக்கிறார்.

எனவே எல்லா மதங்களும் ஏதோ ஒருவகையில் ஏதோ ஒரு இடத்தில் நசுக்கப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் ஒரு சில நாடுகளில் உலகில் பெரும்பான்மை மதத்தினருள் ஒருவராய் இருந்தும் உள்நாட்டில் எண்ணிக்கையால் குறைவாக இருப்பதனால் அவர்களை நசுக்குவது, நசுக்க முனைவது கவலைக்குரிய, கண்டனத்திற்குரிய விடயமாகும்.

மத சகிப்புத் தன்மையின் சிந்தனை விதைகள் குடும்பம் என்ற அலகில் தொடங்கி பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்வியல் கூடங்கள், மதக்கூடங்கள், அரசியல் மேடைகள், கூட்டங்கள் என்பவற்றினூடாக ,தற்கால நவீன சாதனங்களின் மூலம் சமூக வலைத்தளங்கள் மூலமும் விதைக்கப்பட வேண்டும். இதனை மனிதத் தன்மையோடு மனுவின் மீது அக்கறை கொண்டு மேற்கொள்ள வேண்டும். அப்படி மேற்கொள்கின்ற போது இறந்த காலங்களைப் போல் அல்லாமல் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மதசகிப்புத் தன்மை வலுப்பெற்று மனிதம் தலைவிரித்தாடி ஒற்றுமை ஓங்கி, மதப்பாகுபாடு இல்லாத நேசம் கொண்ட சமுதாயம் உருவாகும்.

பிறரது சமய நம்பிக்கைகளை மதிக்கத் தவறும் போது மகிழ்ச்சியின் வழி போராட்டக்களமாக மாறக்கூடும் .

**சுமைல் ஹரீஸ்**



# சமூக மாற்றத்தின் பெண்களின் பங்களிப்பு

சமூக மாற்றம் என்பது இஸ்லாம் காட்டித் தந்த முறைப்படி ஏற்படுமானால் அது உண்மையான மாற்றமாக இருக்கும். எனவே மாற்றம் முதலில் நம்மிடம் இருந்தே தொடங்கவேண்டும். "எந்த சமூகம் தன் பண்புகளை மாற்றிக்கொள்ளவில்லையோ அந்த சமூகத்தை அல்லாஹ் மாற்றுவதில்லை."
(13:11)

இறையச்சமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதில் பெண்களின் பங்கு மிக அதிகமாக இருக்கிறது.

சமூக மாற்றம் என்பது குடும்பங்களின் மாற்றமாகும். இதற்கு வித்திடுபவர்கள் இல்லத்து பெண்கள் ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பமே பல்கலைக்கழகம் போன்றதாகிவிடும். இன்று உலகத்தில் "அரைவாசிக்கு மேல் பெண்களின் எண்ணிக்கையே காணப்படுகின்றன".

ஹாபிழ் இப்ராஹீம் என்ற அறிஞரின் ஒரு கருத்து:
"தாய் என்பவள் ஒரு பாடசாலை
நீ அவளை சரியாக உருவாக்கினால்,
நீ சிறந்த சமூகத்தையே உருவாக்குவாய்.."
இதன் மூலம் ஒரு உண்மை புரிகிறது ஒரு பெண் சரியாக இருந்தால் அந்த சமூகமே சிறந்து விளங்கும்...

**பொதுவாக இன்றைய உலகில் முஸ்லிம் பெண்களை இரண்டாக பிரித்து பார்க்கலாம்.**

01. கல்வியை, மார்க்கத்தை பூரணமாக கற்று வீட்டிற்குள் கட்டுப்பாடுகளுடன் எந்த முயற்சிகளிலும் சமூகத்திற்குள் காலடி வைக்காமல் வீட்டிற்குள் அடைந்து காணப்படும் பெண்கள்.

02. மார்க்கத்தை விளங்கியும் விளங்காமல் ஏனோ தானோ என்று மனோ இச்சைக்கு கட்டுப்பட்டு மேற்கு நாகரீகங்களை பின்பற்றும் முஸ்லிம் பெண்கள்.

எனவே இந்த இரு நிலைகளிலும் பெண்கள் வாழ்வது ஆபத்தானது ஏனெனில் சமூக மாற்றத்திற்கு பெண்களின் பங்கு அளப்பரியது இன்றைய பெண்களைப் பார்த்தால் குழந்தையை பராமரிப்பதும் சமைப்பதும் தான் பணி என்று நினைத்து அதிலே முடங்கிக் கிடக்கிறார்கள்.

சமூக விடயங்களுக்காக பெண்களைக் காண்பது அரிது ஆனால் ஆரம்ப கால பெண்மணிகள் கற்றது மட்டுமில்லாமல் பிறருக்கும் கற்றுக் கொடுத்தார்கள்.

'உதாரணமாக குறிப்பிடலாம் அன்னை ஆயிஷா ரலி அவர்கள் பல போர்களில் பங்கு பற்றிய ஸஹாபிப் பெண்மணிகள் தஃவா பிரச்சாரங்களில் பங்கு பற்றி இருக்கிறார்கள்." இதில் ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சூரா அஹ்ஷாபில் 33 ம் வசனத்தில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

"நபியுடைய மனைவியரே..
நீங்கள் உங்கள் வீடுகளில் தங்கியிருக்கலாம்" என்று கூறியுள்ள வசனத்தை நாம் பார்த்தால் இதற்கு மாற்றமாக அவருடைய மனைவிமார் நடந்திருக்கிறார்கள் என்று தோன்றுமே.!!
தோன்றலாம் தப்பில்லை ஆனால் இந்தக் குர்ஆன் வசனம் எதை உணர்த்துகிறது என்றால் தேவைக்கு இல்லாமல் சீர்கேட்டில் செல்லாமல் வீட்டில் இருப்பதையே வலியுறுத்துகிறது...

**நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களே சமூக மாற்றத்திற்கு ஈடு பட்டார்கள் என்றால் ஏன் நம் பெண்களுக்கு முடியாது ..?**

அந்த அடிப்படையில் ஸஹாபிப் பெண்களின் வாழ்க்கையைப் பார்த்தால் சமூக முன்னேற்றத்துக்கு பெண்கள் கல்வி பயில்வது சேவை, செய்வது அவசியம் என்பது தெளிவாகிறது. ஆனால் அது மார்க்க எல்லையை தாண்டிச் செல்லக்கூடாது. இஸ்லாம் காட்டித்தந்த வரையறைக்குள் கல்வி கற்று சேவை செய்ய வேண்டும்.

வெறுமனே கல்வி கற்று மாத்திரம் இருக்கக்கூடாது இன்று எம் சமூகத்தில் இருக்கின்ற பாரிய பின்னடைவு தான் மார்க்கத்தை கற்று அவர்களின் வாழ்க்கையை சீரமைப்பதில் மாத்திரமே இன்றைய பெண்கள் கரிசனை செலுத்துகின்றனர்.

இதனை இஸ்லாம் விரும்பவில்லை தான் மாத்திரம் இஸ்லாமிய நெறிமுறைகளில் வாழ வேண்டும் என்று இஸ்லாம் கூறவில்லை குடும்பம், சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்பதையே உணர்த்துகிறது .

எனவே இஸ்லாம் பெண்களுக்கு கல்வி கற்பதை கடமையாக்கியுள்ளது சமூக மாற்றத்திற்கு பெண்களின் பங்கு முக்கியம் என்பதை உணர்ந்து இஸ்லாமிய வரையறைக்குள் இருந்து கல்வி கற்று ஒரு நல்ல குடும்பத்தை உருவாக்கி சமூகத்தின் எழுச்சியை மிளிரச்செய்வோமாக...

**பஸ்லான் ஹாஷிம் - (பன்னவ)**
**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.**



# தேவதைகள்

நரக பூமியின் வாடகை வீட்டைப்போல
காற்றிருக்கமாய் ஒரு அறை– வியர்வைக்
குளியலோடு, சுவாசப்பையும் சுருங்கிவிடுவதாய்
வலி மணித்தியாலங்களாய்ப் போராட்டம்–
மறிக்கொழுந்தே மகளாகப் பிறந்தாள்...
உன் ஒற்றை அழு குரலிலேயே! ஓராயிரம்
புன்னகைப் பூக்களை மலரவிட்டாய்

உன் முண்டக்கண்ணின் முன்னும், பின்னுமான
பிதுக்கலில் தொலைந்து என் வறுமை
உன் கண்ணக்குழியும்,தெத்துப்பல்லும் நியுற்றன்
எழுதாத ஈர்ப்புவதி

மனச்சுமை குறைக்கவந்த மந்திரப்புத்தகம் நீ
சிரிப்பதை தேசியகுற்றமாய் கருதும் உன் அப்பன்
கடைவாயின் கடைசிப்பல் தெரியச் சிரிக்கிறானே!!
உன்னால்...

தொலமியின் வரைபடமே வாழ்க்கை என்ற உன்
சித்தப்பன் வாசல்படியேறி வந்ததும் உன்னால்...

பருப்பையும், கீரையும் தின்று பிழைத்த பாட்டன்.
தள்ளாடும் வயதிலும் கறியும், மீனுமாய்
தூக்கிவருகிறாறே அதுவும் உன்னால்...

சடங்கு வீடுகளில் கூட என்னை குறை பேசியவர்கள்
இன்று சந்திக்கடைகளில் கண்டாலும் சுகம் கேட்பதும்
உன்னால்...

முத்தும், பவளமும் சிதற நீ சிந்தும் அத்தனை
வார்த்தைகளும்தான்
நான் இரசித்த முதற்கவிதை

தேவதையே!!!
சிந்தனையை சிற்பமாக்குவாய்...
கரித்துண்டங்களால் கிறுக்கியதையும் சுவரோவியம்
ஆக்குவாய்...
ஆயிரம் பொற்காசுகள் கொடுத்தாலும் கிடைக்காத
நிவாரணத்துளி நீ

**சனூசியா**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



# கசக்கும் மாத்திரைகள்

எந்த உறவுகளுடன் காலந்தோறும் ஒன்றாக
வாழ நினைத்திருப்போமோ அந்த
உறவுகளையே
சில நிகழ்வுகள் எதிரியாக்கி விட்டிருக்கும்.

யாரையெல்லாம் தலைமேல் தூக்கி வைத்துக்
கொண்டாடி இருப்போமா அவர்களெல்லாம்
கால் தூசுக்கும் பெறுமதி அற்றவர்கள் என
சில சந்தர்ப்பங்கள் நமக்கு வெட்டவெளிச்சமாக்கி
விட்டிருக்கும்.

யாருடைய முகத்தைக் கூட இனிப் பார்க்கக்
கூடாது என்று நினைத்திருப்போமோ
சில சம்பவங்கள் அவர்களின் முகத்தில் தான்
தினம் தினம் விழிக்கும் படியாக
செய்துவிட்டிருக்கும்

யாருடைய கையால் ஒரு புடி சோறு கூட
சாப்பிடக்கூடாது என்று நினைத்திருப்போமோ
சில எதிர்பாராத செயற்பாடுகள் காலம் முழுக்க
அந்த உணவை மென்று விழுங்க வைத்திருக்கும்

விருப்பங்கள் இங்கே நம் விருப்பப்படி மட்டும்
நிறைவேறி விடுவதில்லை நமக்கு மேல் உள்ள
சக்தி தான் அதை நிர்ணயம் செய்கிறது
அவ்வளவே!

இதைப் புரிந்தவன் வென்றான்.
புரிந்து கொண்டும் ஏற்றுக்கொள்ளாமல்
இருப்பவன் வீழ்ந்தே போனான்

**சப்னா நஸீர்**
**கெலிஓயா**





# பிறந்த தின கொண்டாட்டம் பொதுவான பார்வை!!

**அத்னான் காசிம்**
**இஸ்லாமிய ஆய்வுகள் பீடம்**

பிறந்த நாள் என்பது ஒரு மனிதனின் வாழ்நாளை ஞாபகப்படுத்தும் முக்கியமான தினம்!!

ஏன் இவ்வுலகிற்கு அனுப்பபட்டேன் நான் யார்?? எனது கடைமை இவ்வுலக நோக்கம் என்பவற்றை மீட்டிப்பார்க்க உகந்த தினம்!!

எல்லோரும் தற்போது கொண்டாடும் பிறந்த தின கொண்டாட்டம் என்பது பிழையான விடயம் ஒன்று!!

நடு நிசியில் எழும்பி வட்சாப்பில் வாழ்த்து அட்டை, பாடல் , போன்றவற்றை அனுப்புதல்,கேக் வெட்டுதல் களியாட்ட நிகழ்வு நடாத்துதல் என மேற்கத்திய சாயலில் சென்று கொண்டிருக்கின்றது!!

இப்படி இருக்கும் பிறந்த தின கொண்டாட்டம் என்பது அடிப்படையிலேயே தடுக்கப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது!!!

இயல்பான சிந்தனையில் சிந்தித்தால் ஒரு பிறந்த தினத்தில் இருந்து இன்னொறு பிறந்த தினம் என்பது வாழ்வில் ஆயுள் குறைந்து செல்கிறது!!

மரண காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது!!
இதனை நாம் எப்படி கொண்டாடுவது??

மரணத்திற்கும் நிரந்தர வாழ்வுக்குமாக தயாராகும் மீட்டி திருத்திக் கொள்ளும் நாளாகவே நாம் பிறந்த நாளை நோக்க வேண்டும்!!

பிறந்த தினத்தில் தாய் தந்தையிடத்தில் மன்னிப்பு கேட்டு தனக்காக பிராத்திக்குமாறு கேட்டுக் கொள்ளல்!!

அடுத்தவர்களின் பெறுமதியான பிராத்தனைகளில் இணைக்க கோருதல்
வீட்டில் மரம் ஒன்றை நாட்டுதல்
நூலகத்திற்கு புத்தகங்களை வழங்குதல்

இவ்வாறு நிலையான வாழ்க்கைக்கு பயனுள்ளதாக அமையும் செயற்பாடுகளை பிறந்த நாளில் அமைத்துக் கொள்வது மார்க்கத்தில் அனுமதி அளிக்கபட்ட ஒன்று!!

இவ்வாறான பிறந்த நாள் நிகழ்ச்சி நிரல் சமூகத்திற்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பயனுள்ள ஒன்று!!

பிறந்த நாள் கொண்டாடுபவருக்கு வாழத்துக் கூறுதலை அவதானித்தால் ஹெப்பி பேர்த் டேய் என சொல்வதை விட்டும் தவிர்ந்து கொள்ளுதல் அமோக வரவேற்புக்குறியது!!!

உங்களது ஆயுளை அல்லாஹ் நீட்டுவானாக (ஸாதகல்லாஹ் உம்ரூக்) நோய் நொடியில்லாத வாழ்வை தருவானாக என வாழ்த்துக்களை பிராத்தனையாக சொல்லுதல் அனுமதிக்கபட்ட ஒன்று!!

அன்றைய தினத்தில் பரிசுப் பொருளாக அவருக்கு நூல் ஒன்றை வழங்குதல் ஆகுமான ஒன்றாக காணப்படுகிறது!!!

மாற்று சகோதரர்களுக்கு வாழ்த்துக் கூறுதலை பொறுத்தமட்டில் ஏற்கனவே கூறிய வாழ்த்தை கூறுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை!!

பிறந்த நாளின் யதார்த்தத்தை அவர்களுக்கு உணர்த்துவது முஸ்லிமாகிய எமது கடமையாகும்!!

அவர்களின் கலியாட்ட நிகழ்வில் கலந்து கொள்வதை விட்டும் தவிர்வது நல்லது!! காரணம் இஸ்லாத்தின் வரையறை பேணப்படாத களியாட்ட நிகழ்வுகளாகவே தற்போதைய நிகழ்வுகள் காணப்படுகிறன!! மது மாது ஆண் பெண் கலப்பு வீண் கேளிக்கை போன்றனவற்றில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வது எம்மீது பொறுப்பாக காணப்படுகிறது!!

வலியுருத்தி அழைத்தால் செல்வதோடு அந்த நிகழ்வில் பாவ செயல்களில் இருந்து விலகியே இருக்க வேண்டும்!!!

இறுதியாக பிறந்த நாள் கொண்டாடலாமா எனக் கேட்டால் இல்லை என்பதே எனது பதில்!!!
அங்கு கொண்டாட ஒரு காரணமும் இல்லை!!
கவலைப்படவே நிறைய காரணங்கள் உள்ளன!!
.இவ்வளவு காலமும் எனது வாழ்க்கை எப்படி கழிந்துள்ளது!!

நான் இறைவன் வகுத்த வழியில் வாழ்ந்துள்ளேனா?
நாளை மறுமை வாழ்க்கைக்கு என்ன சேர்த்து வைத்துள்ளேன் ??

**இவ்வாறான கேள்விகளுக்கு விடை தேடும் நாளே இந்த பிறந்த தினம்!!**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜூன் 2021



# முன்னேறுவது எப்படி?

## எம்.எல்.எப். லுப்ரா - கொழும்பு பல்கலைக்கழகம்

“முன்னேறு” என்ற சொல்லின் பயன்பாடு சிறு வயதில் இருந்தே நாம் கேட்டு வரக்கூடிய ஒரு அம்சமாகும். யாவரும் கூறுவர் “முன்னேறிச் செல்” என்று, ஆனால் எப்படி? எவ்வாறு? என்பது தான் அங்கு கேள்விக்குறியாகிறது. நவீன இவ்வுலகில் மக்கள் அதிகம் ஏன் பாடுபடுகின்றனர், எதற்கு யுத்தம், போர், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுகின்றனர், இதற்குக் காரணம் என்ன தெரியுமா? ஒருவர் மற்றொருவரை விட முன்னேறிச் செல்ல விடாது தடுக்க நினைப்பது தான்.

ஆனால், நாம் எல்லாவற்றிற்கும் முன்பதாக ஒரு விடயத்தை தெரிந்திருப்பது அவசியம் ஆகும். என்னவெனில் நாம் முன்னேறிச் செல்ல அதாவது ஒருவருடைய முன்னேற்றத்திற்கு மைல் கல்லாக அமைவது அவர் பிறந்த குலக் கோத்திரம் அல்ல. மாறாக அவரின் சுற்றுச் சூழலே காரணமாகிறது. இதற்கு சிறந்த உதாரணம் தான் “ஒரு சிறுவன் காட்டில் விடுபட்டு நரியுடன் வாழ்ந்து வந்தவன் நரியைப் போன்று நான்கு கால்களால் நடந்தமை” என்ற அம்சம் உலகில் பிரபலயமாக பேசப்பட்டது. எனவே சுற்றுச் சூழல் ஒருவரின் வளர்ச்சியில் பங்குதாரராக இருக்கின்றது.

சிலர் எவ்வளவோ முயற்சி செய்வர் பாடுபடுவர் ஆனால் எடுத்த காரியம் எதிலும் வெற்றியடைவதில்லை. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. அதில் முக்கிய ஒரு விடயம் தான் நூல்களை வாசிக்கத் தவறுவதும் தீயவர்களுடன் பழகுவதும் ஆகும். நாம் முன்னேற்றம் அடைய நிச்சயமாக நல்லவர்களுடைய பழக்க வழக்கங்களை நாமும் பின்பற்றுவது அவசியமாகும். மேலும் நல்ல நூல்கள் ஒரு மனிதனுடைய முழு வாழ்வையும் மாற்றக் கூடியதாகும்.

நல்ல நூல்களை வாசித்து தற்போது உலகமே போற்றும் வகையில் பெயர் போனவர்களில் பலர் இருக்கின்றனர், எடுத்துக்காட்டாக :
புளூட்டார்க் எழுதிய “வரலாறுகளும்” என்ற நூலானது நெப்போலியன் விரும்பிப் படித்த நூலாகும். மக்கியவல்லியின் இளவரசன் என்ற நூல் ஹிட்லர் கற்ற நூலாகும். அது மட்டுமன்றி, ஒரு கொலைக்காரச் சிறுவனிடம் ஆய்வு ஒன்றை மேற்கொண்ட போது அவன் கூறியது தான் “நான் இக் கொலைத் தொழிலில் ஈடுபடுவதற்குக் காரணம் கொலை பற்றிய கதைகளைப் படித்தது தான்” என்று.
தற்போதைய இளைஞர்களின் சீர் கேடுகளுக்குக் காரணம் தான் “ஆபாசப் புத்தகங்களும் செய்தித்தாள்களும் பற்றாக்குறைக்கு ஆபாசப்பட காட்ச்சிகளும் வந்து இன்று இளைஞர்களைத் தவறான வழியில் அழைத்துச் சென்றுள்ளமை யாவரும் அறிந்த விடயமே.

மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டுகள் எந்தளவிற்கு ஒரு மனிதனுடைய முன்னேற்றத்திற்கு செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது “முன்னேறுவது எப்படி” என்ற கேள்விக்கு நல்லவர்களுடன் பழகுவதும் நல்ல நூல்களை வாசிப்பதும் அவசியம் என்ற விடயம் என்னையும் உங்களையும் தெளிவுப்படுத்துகின்றது.

மனிதனைப் பொறுத்த வரையில் முடியாது என்ற ஒன்று கிடையாது. மாறாக “முயற்சி என்ற ஒன்று இல்லை அல்லது தம் முயற்ச்சி போதாது” என்றே அர்த்தப்படும். ஏந்தளவிற்கு ஒரு மனிதன் குறித்த ஒரு விடயத்தில் ஆசையும் அவாவும் கொள்கின்றானோ அது அவனது முன்னேற்றத்தின் முதல் படியாக அமைந்து விடுகின்றது. ஆசை, ஆவல் என்பது தீவிரமாக இருக்கும் பட்சத்திலேயே அது அடைவு என்ற வழியை பிறப்பிக்கக் கூடியதாக அமைகின்றது. இதை அறியாத எமது மக்கள் ஓர் முயற்சியுடன் “இயலாது” என முடங்கி ஓர் மூளையில் கிடக்கின்றனர்.

ஒரு தொழிலை செவ்வனே செய்யும் போது, அது அவனது

முன்னேற்றத்தை நிச்சயம் தீர்மானித்தே தீரும். அதை மேலும் தெளிவாக குறிப்பிடுவோமானால் நாம் செய்யக்கூடிய தொழிலை காதலிப்போர்களாக நாம் மாற வேண்டும். ஒருவர் மைக்கல் ஏஞ்ஞலோவிடம் ஏன் நீர் திருமணம் செய்து கொள்ளவில்லை எனக் கேட்டதற்கு அவர் “சிற்பக்கலையே எனது மனைவி தான் செதுக்கிய சிற்பங்களே எனது மக்கள்” எனக் கூறியிருக்கிறார். இதன் மூலம் எமக்கு விளங்குவது என்ன வெனில் தான் செய்யும் தொழிலை தெய்வமாக கருதி தீவிர ஆசை அவா கொண்டு செய்யும் போது அது நிச்சயமாக அவரது முன்னேற்றத்திற்கு துணையாய் அமையும் என்பதாகும்.
மற்றொரு விடயம் தான் தன்னால் முடியும் என்ற தன்நம்பிக்கை மிக முக்கியமாகும். தன்னை நம்புவதே இலக்கின் அடையாளமாக காணப்படுகின்றது. “நான் சந்தித்தவற்றில் ஒரு பாகமே நான்.” என்ற ஒரு கவிஞரின் கவி வரிசை வெறும் கற்பனை என நினைத்து விட முடியாது. அது ஆயிரம் அர்த்தங்களைக் கொண்ட மாசு மறுவற்ற பத்தரை மாற்று உண்மை என்பதை மறுக்க முடியாது.
புதிய காரியங்களை செய்வதற்கு முன்வர வேண்டும். பொதுவாக மனிதர்கள் எவ்வளவு அறிவு ஆற்றல் இருந்த போதும் சமயோசிதமாக பேசவோ நடந்து கொள்ளவோ தெரியாது. முன்னேற்றத்திற்கான மற்றுமொறு வழிதான் சமயோசிதமாக பேசுதல், சாடை அறிந்து செயலாற்றல் மற்றும் மனிதர்களின் தராதரம் அறிந்து உரையாடல் என்பனவாகும். “சாடை அறியாதவன் சண்டாளன்.” என்ற ஒரு நாடோடிப் பழமொழியும் உண்டு. அடம்ஸ்மித் தம்முடைய புகழ் பெற்ற நூலாகிய wealth of nations என்பதில் உலக பொருளாதாரம் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றார். ஆனால் அவருக்கோ தம்முடைய வீட்டின் வரவு செலவை நிர்வகிக்கத் தெரியாதாம். ஏன நாம் புத்தகங்களில் பத்திரிகைகளில் வாசித்திருக்கின்றோம்.

நான் அறிந்த மற்றுமொரு சம்பவத்தை உங்களோடு பகிர்ந்துக் கொள்ள விரும்புகின்றேன். நாம் செய்யும் வேலைகள் அனைத்தையும் திருத்தமாகவும் ஒழுங்காகவும் செய்யும் போது நிச்சயம் அது தன் வாழ்வின் முன்னேற்றத்திற்கு துணையாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. மனிதன் பல இடங்களில் அஜாக்கிரதையாக இருப்பதனால் தான் தோல்வி தன் தலை மீது குடிகொள்கின்றது.

ஜான் வானாமேக்கர் என்னும் அமெரிக்க கோடீஸ்வரரின் அலுவலகத்தில் மட்டும் ஊழியர்கள் செய்யும் தவறுகளால் ஆண்டொன்றிற்கு இருபத்தையாயிரம் டாலர்கள் வீணாய் போகின்றனவாம். அதுமட்டுமல்லாமல் சிகாகோ நகரத்தில் மனிதர்கள் செய்யும் சிறு சிறு தவறுகளினால் ஒரு நாளைக்குப் பத்து இலட்சம் டாலர்கள் வீணாகின்றன என ஆய்வுகள் தகவல் வெளியிட்டிருந்தன. இவற்றுக்கெல்லாம் காரணம் செய்கின்ற தொழிலை அல்லது கடமையைச் சரிவர, திருத்தமாக செய்யாததே ஆகும்.

முன்னேற்றத்திற்கான மற்றுமொறு காரணம் நேரத்தை வீணாக்காமல் இருப்பது. “நேரம் விலைமதிப்பற்றது” எனக்கூறுவர் சென்ற காலம் திரும்ப வரப்போவதில்லை எனவும் கருதுவர். இதன் பொருள் என்ன தெரியுமா? தொடர்ந்து கொண்டிருக்கும் நேரத்தை இனிவரும் காலங்களிலாவது வாழ்வில் வெற்றிகானும் விதத்தில் செலவழிப்பது மிக அவசியமாகின்றது.
செய்யப்போகும் வேலையை நாளைக்கு என பிந்திப்போட்டுக்கொண்டுசெல்வது எம்மை துன்பப்படும் வழியில் தள்ளக்கூடியதாகும். வாழ்வின் முன்னேற்றத்திற்கு “பிறகு பார்ப்போம்.” ஏன்பதற்கு இடமே இல்லை.

“இவ்வளவு குறுகியே நேரத்தில், இவ்வளவு அதிகமான வேலையை தங்களால் எவ்விதம் செய்ய முடிகின்றது?” என்று வால்ட்டர் வரலேயிடம் கேட்கப்பட்டபோது “நான் எதையும் செய்ய வேண்டியிருந்தால் அதனை உடனே செய்து முடிக்கின்றேன்.” என கூறினாராம். மேலும் ஒருவர் தன் வாழ்வில் முன்னேறிச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கக் கூடிய ஒன்றுதான் உடலாரோக்கியமாகும்.

உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் எந்த காரியத்தினையையும் வெற்றியுடனும் முன்னேற்றத்துடனும் செய்ய முடியும். “ஓடி விளையாடு பாப்பா……” என்ற பாரதியாரின் பாடலினை அறியாதோர் இருப்பினரோ?, அவர் பாடிய அப்பாடல் வரிகள் தேக ஆரோக்கியம் எவ்வளவு முக்கியம் என்பதனை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

சக்தி குன்றிய சரியான பயிற்சி பெற்ற ஒரு படைத்தளபதிற்கு எங்கனம் தனது படையை போர் களத்திற்கு கொண்டு செல்ல முடியும் என்பதனை சற்று சிந்தித்துப் பாருங்கள். வைத்தியர்களின் கருத்தும் இதுதான். “ஒருவன் நீண்ட நாள வாழ விரும்பின் அவனுடைய மூளையானது தூக்கத்தின் போது ஓய்வாகவும் ஏனைய நேரங்களில் சுறு சுறுப்பாகவும் இருக்க வேண்டும். அத்தோடு ஒருவர் ஒரு பொழுது போக்கில் சுவாரஸ்யமுடையவராகவும் இருக்க வேண்டும்”. என்கிறார்.
எனவே அன்பார்ந்தவர்களே!

உலகில் தனது பெயரை நிலை நிறுத்தி விட்டுச் செல்வதுதான் நாம் வாழ்ந்ததற்கு அடையாளமாகும். எந்தளவிற்கு நாம் முன்னேற்றம் காண வேண்டுமாயின் நாம் தம்மினுள் ஒரு மாற்றத்தை கொண்டு வர வேண்டுமே ஒழிய அடுத்தவரின் துன்பத்தில் இன்பம்காண என்னவோ அடுத்தவரின் வாழ்வினை பார்த்து துவண்டு விடவோ கூடாது. மற்றவர்களுக்கு முடியும் என்றால் ஏன் என்னால் முடியாது? என்ற ஒரு வெறித்தனத்தை தம்மினுள் புதைக்க வேண்டும். நிச்சயம் வாழ்வில் வெற்றி மாலை சூட்டப்படும் என்பதில் சந்தேகமே இல்லை.

**“முன்னேற்றத்திற்கும் இறக்காத ஓர் ஆன்மா உண்டு.”**
**“ஒரு முறை வந்தால் அது கனவு இரு முறை வந்தால் அது ஆசை பல முறை வந்தால் அது இலட்சியம்” - Dr.அப்துல் கலாம்**



# வான் ஏந்தும் கருமை

## என் வாழ் தொட்ட பொறுமை..!

காதல் தோல்வியால் தனிமை...!!!
கடல் போன்று வருகிறது வறுமை...!!!
நான் உண்டு வளர்ந்த ஒன்றே ஒன்று எளிமை...!!!
எது வந்தாலும் ஏங்காது என் பொறுமை...!!!

பொறுமை கொள்...!!!
காத்திருந்தால் திரவத்தை கூட குழந்தையாய் ஏந்தலாம்,
அது கருவிலே சேருகின்ற வரை...!!!

இழந்தவன் இழந்தவன் எதை இழந்தவன்..???
எல்லாமே பொறுமையை இழந்த பின் இறந்தவன்...!!!

பொறுமை இல்லையேல்...!!!
பனிக்கட்டியை கையில் ஏந்த முடியுமா...??
பஞ்சு தந்த நூல்களை துணியாக்க முடியுமா...??
சமுத்திரம் போன்ற வாழ்வைக் குடிக்க
சூத்திரம் சொன்னது பொறுமை மட்டுமே...!!!

கரு மேனியும் கற்பூரமானது,
பாலோடு என்று பொறுமையால்...!!!
சிறு குழந்தையும் சிகரம் ஏறியது,
முடியும் என்ற பொறுமையால்...!!!
கண்ணற்றவனும் காதல் கொண்டான்,
கிடைக்குமென்ற பொறுமையால்...!!!
நுண்ணங்கிகளே நுகர்வோரானது,
விஞ்ஞானம் என்ற பொறுமையால்...!!!

தேடியது கிடைக்கப் பொறுமை வேண்டும்...!!!
தேவைகள் முடிக்க பொறுமை வேண்டும்...!!!
சரித்திரம் படிக்க பொறுமை வேண்டும்...!!!
சாதனை படைக்க பொறுமை வேண்டும்...!!!
நறுமுகை மணக்க பொறுமை வேண்டும்...!!!
நல்லவை திறக்க பொறுமை வேண்டும்...!!!
மழலைகள் அறிய பொறுமை வேண்டும்...!!!
மனிதனாய் இருக்க பொறுமை வேண்டும்...!!!

ஒரு வண்ண ஓவியமும் பலவண்ண ஓவியமும், கையினால்
வரையப்பட்டவை தான்...!!!
ஆனால் பல வண்ண ஓவியமோ
பொறுமையால் செதுக்கப்பட்டது...!!!

பொறுமைக்குமுண்டோ பெருமை கிரீடம்–பொண்
பருமை உனக்குத் தலை...!!!

என்ற என் வாக்கை பொறுமையோடு முடிக்கிறேன்...!!!

**எம்.எப்.அப்ரி அஹமட்**
**மாணவர்**
**ஈஸ்ட் சிலோன் அராபிக் கல்லூரி - நிந்தாவூர்**



# Covid-19 பற்றிய கண்ணோட்டம்

**கொரோனா என வைரஸ்க்கு பெயரிட காரணம்?**
**Covid-19 என்று ஏன் பெயர் வைக்க வேண்டும்?**
**முகக்கவசம் அணியக்காரணம் என்ன?**
**கொரோனா வைரஸின் வகைகள் எத்தனை?**

இப்படியெல்லாம் மனிதனின் உள்ளத்தில் பல வினாக்கள் எழுகின்றன. இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டவர்கள், உயிரிழந்தவர்கள் பலரும் உண்டு.
இன்று உலகையே உலுக்கிக்கொண்டிருக்கின்றது இந்த கொரோனா வைரஸ். இதனால் பல பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கின்றனர் மக்கள்...

கொரோனா என வைரஸ்க்கு பெயரிட காரணம் என்னவென்றால் வைரஸின் மேற்பரப்பிலுள்ள கிளைகோடிரோட்டீன் ஒரு கிரீடம் போல் தோற்றமளிப்பதனாலாகும். லத்தின் மொழியில் கொரோனா என்றால் கிரீடம் என பொருளாகும்.இதனால் தான் இந்த வைரஸ்க்கு கொரோனா என பெயரிட காரணமாகும்.

இந்த வைரஸ் ஏழு வகைகளாகும். இதில் நான்கு வகைகள் மனிதர்களுக்கு குறைந்தளவு தாக்கம் செலுத்தக்கூடியவைகளேயாகும். மீதமான மூன்று வகைகளும் அதிகம் தாக்கம் செலுத்தக்கூடியவைகளேயாகும்.

இது முதன் முதலில் 2019 டிசம்பர் சீனாவின் /ஹபேயில் வுஹானில் அடையாளம் காணப்பட்டது. இதன் விளைவாகவே தொடர்ந்து தொற்று நோய் ஏற்பட்டுள்ளது.

இதற்கு **covid-19** என பெயரிட காரணம் என்னவென்றால் கொரோனாவிலிருந்து **co** பின்னர் வைரஸ்க்கு **vi** பின்னர் நோயிலிருந்து **(Disease)**னு மேலும் 2019 இல் இருந்து 19. இதுவே **covid-19** என பெயர் வரக் காரணமாகும்.

முகக்கவசம் அணியக்காரணம் முகக்கவசத்தால் 00005 மைக்ரோ மீட்டர் அளவில் இருக்கும் தூள்களை கூட வடிகட்டக்கூடியது. இது வைரஸையும் வடிகட்டக்கூடியது. இதனால் தான் முகக்கவசம் அணியக்காரணம் ஆகும்.

எனவே முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை பேணி வீடுகளிலிருந்து இந்த வைரஸிலிருந்து பாதுகாப்போம்......



**அக்ஸான் முஹம்மட்**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜூன் 2021



# வாழ்ந்து பார்த்திடுங்கள்!

நிம்மதி தேடி ஓயாது ஓடியதில்
ஓய்வையே தொலைத்தவர்கள் தான் அதிகம்.

இப்போதெல்லாம் பெரும்பாலோர் துக்கத்திற்கு
உடைந்தழுவதில்லை.
சந்தோஷத்திற்கும் பெரிதாய் சிரிப்பதில்லை.
தம்மிடம் தொலைந்தது எதுவெனக் கூட
உணர்வதேயில்லை.

இலட்சங்கள் கண்டிட இலட்சியம் என பெயர்
சூடிக்கொள்கின்றனர்.
அருகிலிருக்கும் மகிழ்ச்சியை பாதாளத்தில் கிடத்தி
வெற்றுப் புன்னகைக்கு முன் மண்டியிட்டுக்
கிடக்கின்றனர்.
உணர்வுகளின் விளிம்பில் அனைத்தையும் புதைத்து
கண்ணீருக்கு பதில் குறுஞ் செய்தியெல்லாம்
அனுதாபத்தை முடித்துவிடுகின்றனர்.

எதற்காக இந்த ஓட்டம்!
எது வரை இந்த ஓட்டம்!
எல்லையைத் தொட்டதும் திரும்பிப் பார்த்து
திருத்திக்கொள்ள இரண்டாவதாய் ஒரு தெரிவை
வாழ்க்கை தருவதே இல்லை.
பருவம் தவறிடும் பயிரில் பயனில்லை
என்பதை உணர்வதே
வாழ்வின் பாதியை கடந்த பின்பு தானே!

ஒருநாள் எல்லாமும் கடந்துவிடத்தான் போகின்றது.
தீர்ந்து போய்விட முன் வாழ்வை வாழ்ந்து பார்த்துவிட
எத்தனியுங்கள்.
வறண்ட கைகளினாலும் தினம்
மலர்ந்தப் பூங்கொத்தை ஏந்திக் கொள்ளுங்கள்.
இன்பத்தில் திகட்ட திகட்ட வாழாவிடினும்
பரவாயில்லை. குறைந்தபட்சமாக உயிரோடிருப்பதே
கசந்திடாத ஓர் வாழ்க்கையேனும் வாழ்ந்துவிட.

**ரிஸ்னியா ஆப்தீன்**
**கெலிஓயா**



# பாரதம் போற்றும் பாரதி

உன்னை பற்றி பிறர் சொல்லிக் கேட்கையில் என்
மனத்திலே ஊற்றெடுக்கும் மகிழ்ச்சிக்கு கரை
காணவே முடியவில்லை..!

உன் கவி பலரின் சிந்தையை மட்டுமில்லாது
மனதையும் வென்றுள்ளது..!
உனது பெண்விடுதலை பற்றிய கவிகள் எனது
மனதிலும்

நீ எதிர்பார்த்த புதுமை பெண்ணாய் மாறிட
வேண்டும் என்ற ஆசையை விதைக்கிறது..!

உன் கவிகளை படித்த பின் என்னை பார்த்து கண்
சிமிட்டும் மலர்களிலும் சங்கீதம் பயிலாமல்
ஸ்ருதி மாறாது இன்னிசை இசைக்கும் குயிலின்
பாட்டிலும் கலங்கம் எதுவுமில்லாமல்

சோளப்பொறிகளுக்குள் சுட்டு வைத்த தோசை
போல முப்பத்திரெண்டு கலைகளை தன்னுள்
அடக்கி சத்தமில்லாமல் பிரகாசிக்கும்
வெண்மதியிலும் நான் கண்டது நின் முகம்

தவிர்த்து வேறொன்றுமில்லை...!
இன்றும் கூட நீ விட்டுச்சென்ற உன் கவிகளின்
உன் விம்பமே காண்கிறேன்..!

ஈற்றில் உன் கவி வெற்றிக்கொண்ட
உள்ளங்களின் வரிசையில் என் உள்ளமும் என்
அனுமதியின்றியே போய் இணைந்து
கொண்டது..!

**அப்ஷா ருமைஸ்**
**புத்தளம்**



## குளத்தோர தென்றலிலே
# காதல்

உன்னை எண்ணி பார்க்கையிலே
உடனிருக்க தோனுதடி
வாழும் வாழ்க்கை உனக்கென்றே
வாட்டம் கொள்ள தோனுதடி

மெய் மறந்து நான் சிலிர்த்தேன்
மெய்யதா மன்மத லீலையிலே

கார்மேகம் சூழுதடி உந்தன்
காலோசை கேட்டதனால்

குளத்தோர தென்றலிலே குந்திடுவேன்
குலமுகம் பார்கழித்திடவே

பாராளும் வேந்தன் வரினும்
தாராளம் மயங்கிடுவான் உன்னழகில்

வான் நிலவு வராது பகலினிலே
உன் முகம் பார்ப்பதனால்

உன் முகமே பார்த்திடவே
பகலவனும் வருகின்றான்
மன்மதனின் இரையாகி

என்னவளே உனக்காக
எப்பொழுதும் விரைந்திடுவேன்
பகலவனாய்

**இளம்கவி**
**எம்.எல்.பைஜ்அஹ்மட்**

# விமர்சனம்



உன்னை மற்றவர்கள்
விமர்சிக்காவிட்டால் உன்னை
யாரென்டு உலகிற்கு தெரியாமலே
போய்விடும்.

நாணயத்தின் இரு பக்கங்களைப்
போல வாழ்கையில் உன்னை
நேசிப்பவர்களை போல
விமர்சிப்பவர்களும் வேண்டும்.

இன்று உன்னை ஏளனம் செய்தவன்
நாளை உனக்கு வெற்றிமாலை
அணிவிக்கப் போகிறான்.

உலகம் நீ வாழ்ந்தாலும் பேசும்
தாழ்ந்தாலும் பேசும்.


**இளம் கவி மருதமுனை**
**பாத்திமா பஸ்மி**



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜூன் 2021



கவிப்பொய்கை
-ஜவ்சன் அஹமட்-



# புகைத்தலற்ற பிரஜைகளை உருவாக்குவோம்

உலக புகைத்தல் தவிர்ப்பு தினம் வருடம் தோறும் மே 31 ம் திகதி உலகளவிய ரீதியில் அனுஸ்டிக்கப்படிகிறது.

ஒவ்வொரு வருடமும் புதுப்புது தொனிப்பொருள்களில் இதற்கான வேலைத்திட்டங்களை உலக சுகாதார ஸ்தாபனம் முன்னெடுத்து வருகிறது.

இதற்கமைவாகவே வருடம்தோறும் நம் நாட்டு அரசும் பல செயற்த்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இச் செயற்திட்டங்களின் அடிப்படையிலேயே மதுபான தேசிய அதிகார சபையுடன் மருத்துவ சங்கங்களும் இணைந்து பொதுமக்களிடையே புகையிலை மற்றும் மதுபான பாவனையை ஒழித்து தேக ஆரோக்கியம் உள்ள நற்பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் பெயரில் பல விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் ஆலோசனைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் புகைத்தல் பழக்கத்திலிருந்து ஆண்களை விடுவிக்கும் ஐந்தாண்டு வேலைத் திட்டமொன்று சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகளின் படி ஆண்களில் இருவரில் ஒருவர் புகைத்தல் பழக்கமுடையவர்கள் என உள்நாட்டில் இனம் காணப்பட்டுள்ள நிலையில் 2030-ம் ஆண்டு அந்த விகிதத்தை 5 சதவீதமாக குறைப்பதே இதன் நோக்கம் என சுகாதார அமைச்சு கூறுகின்றது.

ஆண்களை புகைத்தல் பழக்கத்திலிருந்து விடுவிக்கும் வகையில் 15 நாடுகளில் ஐந்தாண்டு வேலைத் திட்டம் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது. இலங்கை அதில் முதலிடத்தில் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது.

உள்நாட்டில் புகைத்தல் பழக்கம் காரணமாக வருடாந்தம் 25,000 பேர் மரணமடைகின்றார்கள். 5 சதவீதமான பிள்ளைகளும் அதனால் பாதிப்புக்குள்ளாகுவதாக கூறுகின்றார் சுகாதார அமைச்சரான டாக்டர் ராஜித சேனாரத்ன. இவ்வாறு புகைத்தல் காரணமாக அதிகமான மக்கள் தினந்தோறும் இறப்பதன் காரணமாக அந்நிறுவனம் பொதுவாக இளைஞர்கள் யுவதிகள் மற்றும் சிறுவர்களை புகைத்தலின் பக்கம் ஈர்ப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் புள்ளி விபரங்களின் அடிப்படையில் சர்வதேச ரீதியில் புகைத்தல் பாவனையினால் 8 மில்லியன் நபர்கள் மரணமடைகிறார்கள்.

இவற்றுள் 9 இலட்சம் பேர் இரண்டாம் நிலை புகைத்தலினால் மரணமடைகிறார்கள்.

இன்றைய உலகின் மனித சமுதாயத்தின் மத்தியில் இதுபோன்ற கொடூரமான மரணங்களுக்கு உள்நாட்டு யுத்தங்கள் அல்லது வேறு எந்தக் காரணிகளும் தாக்கம் செலுத்தவில்லை என்பது நன்கு புலப்படுகிறது.

இவ்வாறாக உயிரிழப்புக்களையும் பாரிய சேதங்களையும் எதிர்நோக்கும் நாடுகளுக்கு இதன் மூலமாக எந்தவிதமான இலாபங்களோ வருமானங்களோ கிடைக்காது மாறாக இதன் மூலமாக வளர்ந்த வல்லரசு நாடுகளே இலாபத்தை தனதாக்கிக் கொள்கிறது.

புகைத்தல் மூலமாக ஏற்படும் சமூக ரீதியான மற்றும் நாடளாவிய ரீதியான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வேண்டி 2003ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனம் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டது இதில் இதுவரை 168 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தில் 2003 ஆம் ஆண்டோ இலங்கை கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

புகையிலை நிறுவனத்தின் குறித்த வழிகாட்டலில் இருந்து இளைஞர்களையும் யுவதிகளையும் சிறுவர்களையும் பாதுகாப்பது எமது இன்றியமையாத கடமையாகும்.

சிறு வயது தொடக்கம் பிள்ளைகளின் மனதில் சிகரட் பாவனை தொடர்பான சாதகமான சிந்தனைகளை ஏற்படுத்தி அவர்களை தங்களின் வாடிக்கையாளர்களாக மாற்றுவதற்கு பல்வேறு வியாபார நுணுக்கங்களையும் விளம்பரங்களையும் சிகரெட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இதன் விளைவாகவே திரைப்படங்களிலும் கூட இன்றைய சமூகத்தின் முன் மாதிரிகளாக உலகம் நம்பி ஏமாந்து கொண்டிருக்கும் நடிகர்கள் மூலமாக இந்தப் பாவனையை அரங்கேற்றுகிறார்கள். இவ்வாறாக விளம்பரங்களுக்கு சிகரெட் நிறுவனம் 23 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருடாந்தம் செலவிடுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.
மேலும் சிகரெட் புகைப்பது இளைஞர்களின் உரிமை என்ற போலியான கூற்றை நம்ப வைப்பதற்காக வருடாந்தம் 8 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவிடப்படுகின்றது எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

இதே தோரணையில் எமது இலங்கை நாட்டில் இயங்கிவரும் பல்தேசிய புகையிலை நிறுவனம் (CTC) எமது நாட்டின் சிறுவர்களையும் இளைஞர்களையும் ஏமாற்றுவதை நோக்கமாக கொண்டு பல்வேறு தந்திரோபாயங்களை பயன்படுத்துகின்றது.

அவை சமூக வலைத்தளங்கள் ஊடகங்கள் வாயிலாக இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் புகையிலைபாவனை கவர்ச்சிகரமான ஒன்றாக சித்தரித்தல்.

இளைஞர்களை இலக்கு வைத்து புகையிலை நிறுவனத்தில் ஊதியம் பெறுவோரினால் சமூக வலைத்தளங்களில் பல்வேறு விளம்பரங்கள் அரங்கேறுகிறது.

வெவ்வேறு பெயருடைய சிகரெட் வகைகள் வெவ்வேறு வகையான சுவைகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டு புகைத்தல் பாவனை கவர்ச்சிகரமாக்கப்படுகிறது.

குறைந்த விலையில் சிகரெட் வகைகளை அறிமுகம் செய்தல் மற்றும் விலையை அதிகரிக்காமல் தக்க வைக்கப்படுகிறது.

இளைஞர்கள் சிறுவர்கள் அதிகம் செல்லும் இடங்களில் "வயது குறைந்தோருக்கு விற்பனை தடை". என்னும் வாசகத்தை காட்சிப்படுத்துவதன் மூலம் புகைத்தல் மீது மேலும் குதூகலத்தை ஏற்படுத்துகின்றனர்.

எனவே இப்படியாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் இருந்து இளைஞர் யுவதி மற்றும் சிறுவர்களை பாதுகாப்பதற்கு பல்வேறு முயற்சிகள் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகிறது இதில் எமது பங்களிப்புக்களையும் சமூகம் மற்றும் மதங்கள் சார்பாகவும் முன்னெடுக்க வேண்டும்.

எமது செயற்பாடுகளாக.

சிகரெட் மற்றும் புகைப் பொருட்களின் விற்பனையை எமது வியாபார நிலையங்களில் முற்றாகத் தவிர்த்தல்.

கல்வி நிறுவனங்களிலிருந்து நூறு மீட்டர்களுக்கு இடைப்பட்ட தூரத்தில் புகைப் பொருட்களின் விற்பனையை தடை செய்தல்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் வைத்திய அதிகாரிகள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்கள் மூலமாக விழிப்புணர்வு கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்.

புகைத்தல் மற்றும் போதை வஸ்துக்களின் சட்ட நடவடிக்கைகளை பற்றி இளைஞர்களுக்கு மத்தியில் ஒப்புவித்தல்.

இளைஞர்களை
புகைத்தலுக்கு ஆளாக்கும் ஒருவர் அவர் எவராக இருந்தாலும் இனம்கண்டு இன மத கட்சி பேதமின்றி சட்டத்துக்கு முன் நிறுத்துதல்.

இவ்வாறு எமது பங்களிப்புக்களையும் செய்து இலங்கை திருநாட்டை இளைஞசர்கள் ஊடாக சாதி மத பேதம் இன்றி புகைத்தல் மற்றும் மதுபானம் அற்ற நாடாக மாற்றியமைக்க ஒன்றிணைவோம்.



# முகில்வெண்பா

நீ படிப்பாய் என்கிற போது
எழுத வேண்டும் என்ற என் ஆசை
அபிலாஷை ஆகிறது

எழுத நினைக்கும் பாஷை
பரிபாஷை ஆகிறது

இப்படித்தான் முகில் எழுதும் வெண்பாவிற்கு
மழை என்று பெயர் வைத்திருக்கிறேன்

பெயர் சரிதானா என்பதை
நனைந்து விட்டுச் சொல்
என் வழுக்களை எல்லாம்
வழுவமைதிகள் ஆக்கும் வழாநிலையே

நளினங்களின் நவீனமே
விசும்பின் துளி விழுந்து பூத்த
பசும்புல்லாய்
உன் பார்வை விழுந்து
பூத்துக் கிடக்கிறது என் காதல்

ஒயில்களின் ஒய்யாரமே
சொக்கித் தான் போகிறேன்
நீ என் சொற்களை வைத்துச்
சொக்கட்டான் ஆடும் போது

நம்மை முத்தமிட்ட மழையை
நீ முத்தியது என்று சொல்லிய போதே
தொடங்கி விட்டது
நம் காதலின் குழூஉக்குறி.



**மு.ஆறுமுகவிக்னேஷ்,**
**சத்திரப்பட்டி,**
**விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு.**



# அப்பன்களுக்கு

நாளெல்லாம் நல்லா ஒழச்சி
நடு நெசில ஊடு வந்து
ஒவ்வொரு பிள்ளையாத்
தலை தடவி ஒரு பெரும் மூச்சு
விட்டெறிஞ்சி

மனையாள மனம் தழுவ
நேசம் கொஞ்சி வேர்வை விட்ட
நோவினைய கொரட்டை விட்டு
தூங்கி நல்ல சோம்பல் முறிச்சி

காலங்காத்தால எழுந்து மறுகாவும்
மறுகாவும் மறுக்காம மாடா
ஒழச்சி ஓடாத் தேயிறீக.....

சொற்ப நேர சொகமெண்ணா
மக்கள் முகம் மலருகையில்
தானுன்னு அலுக்காம
அள்ளி அள்ளிச் செலவு செய்து
அம்புட்டு பாடும் உம்ம முதுகோட
சொமக்குறீக

அம்மையவள் அடுப்படிக்கும்
அப்பன் நீங்க உழைப்பதற்குமுன்னு
அற நெறிய அங்க இங்க அயத்து
மறந்து விட்டு விடுறீக

கொழுப்பெடுத்த சில புள்ளைங்க
கொணக்கெடுத்து ஊரு சுத்த
கடப்படியில் நொழையயில
கமுக்கமாக சுழுக்காத நடையில
சுருண்ட சாரையாட்டம்
ஊட்டுக்குள் ஊமக் கொட்டான்

அடுத்த ஊட்டு குழியலறை
அவள் புடவை நுகர்வதும்
கடுக்கான் குத்தி வில்லனாட்டம்
கடைத் தெருவில் களவெடுக்க
காதுக்கு கேளாம
மறச்சி மனையாளும் அதையொழிக்க

அம்புட்டு சண்டித்தனத்தையும்
தோள் மேல ஏத்திக்கிட்டு
சொழண்டு சண்ட போடப் போகுமுன்னே
அரண்டு கேளுங்க அப்பன்களே

நீங்க விரண்டு விரண்டு
ஒழச்சி என்ன பயனிருக்கு
நல்ல அரன் அற்ற புள்ளைக்குனு!

(சிலருக்கு மட்டும் பொருந்தும்)

**க.ஷியா**

# அம்மா நீ எங்கே...!



என் உயிரோடு உயிராகக் கலந்து
என் உணர்வுகளோடு உறவாடி மகிழ்ந்து
என் உடலுக்குள் ஊடுருவிச் சென்று
என் உணர்வுகளை உரசிச் செல்லும் உன்
நினைவுகளை
எண்ணி எண்ணி பார்க்கிறேன்
அம்மா நீ எங்கே...!??

உன் விரல் பிடித்து நடந்த நாட்கள்...!
உன் கரம் பிடித்து கடந்த பாதைகள்...!
உன் முந்தானை சேலைக்குள்
முகம் மறைத்த நிமிடங்கள்...!
எண்ணி எண்ணி பார்க்கிறேன்
அம்மா நீ எங்கே...!??

கருவோடு என்னைச் சுமந்து
கண்ணிமைக்காது காத்து வளர்த்து
தூளியிட்டு தாயாகி
தோளிலிட்டு தாலாட்டி
உன் இரத்தத்தை பாலாக்கி
என் உயிர் காத்தாயே அம்மா...!

இருக்கும் பிடிக்கும் சோறும்
எனக்கென தந்து
என் பசி தீர்த்து
உன் பசி மறந்து
கண்ணை இமை காப்பது போல்
காத்து நின்றாயே... !
எண்ணி எண்ணி பார்க்கிறேன்
அம்மா நீ எங்கே...!??

பஞ்சணை இல்லாத போதும்
உன் நெஞ்சணையில் சுமந்தாயே...!
பாலும் பழமும் இல்லாத போதும்
பாசத்தையும் நேசத்தையும்
ஊட்டி ஊட்டி வளர்த்தாயே...!
தோளில் சாயும் போதெல்லாம்
தாங்கிய கைகள் எங்கே...!??
வாடிய முகம் கண்டு
பதறிய கண்கள் எங்கே...!??

சத்தமின்றி மனதும் துடிக்குதம்மா!
சித்தமும் கொஞ்சம் சிதறுதம்மா!
புத்தியும் கொஞ்சம் கலங்குதம்மா!
உன் பக்தியால் கண்களும் கலங்குதம்மா!

நிலை மாறும் உலகில்
நீ மட்டும் நிஜமென நினைத்தேன் அம்மா!
இன்று நிழலாய்ப் போன மாயம் தான் என்ன
அம்மா...!??
நீ நடந்த பாதையெல்லாம்
நானிருந்து வாடுகிறேன்...!
உன் நினைவுகளோடு
போராடுகிறேன்...!
அம்மா நீ எங்கே...!???

என் கண்களுக்குள் கனவாக
என் கற்பனைக்குள் கவியாக
என் கவிக்குள் கருவாக
என் வாழ்வுக்குள் வசந்தமாக
என்றும் என் நினைவுகளில்
நிலைத்திருப்பாய் அம்மா...!!

நான் மட்டும் தனியாக
நாளெல்லாம் உன் நினைவுகளோடு
ஊர்க்கோடியில் நிற்கும்
ஒற்றை பனை மரமாய்
ஓலையில்லா மொட்டை மரமாய்

விதியின் கையில் விளையாட்டு
பொம்மையாய்
விம்மி அழுகிறேன்!
உன் அரவணைப்பை
எண்ணி எண்ணி பார்க்கிறேன்...
அம்மா நீ எங்கே...!!??

மின்மினிகள் வாழ்க்கைப் பாதைக்கு
வழிவகுப்பதில்லை...!
வேதாந்தம் வேதனை தீர்ப்பதில்லை...!
விதியின் பாதை விழிகளுக்குத்
தெரிவதில்லை...!
வறுமை தேடி உறவுகள்
வருவதில்லை...!
ஆதரவில்லா வாழ்க்கையிலே
ஆயிரம் உறவுகள் வந்து நின்றாலும்
அம்மா உனக்கு ஈடாகுமா...!???

மண்ணில் என் நாட்கள் அழகானது!
என் கனவுகள் சுகமானது!
ஆனால் நான் மட்டும்
பூமியில் தனியாக உணர்கிறேன்...!!

நீ விட்டுச் சென்ற சேலை தானம்மா
இன்றும் எனக்கு நெஞ்சணையாக
உள்ளதம்மா...!
உன் வாசனை இன்னும்
எனக்கு மறக்கவில்லையம்மா...!
உன் ஆராரோ தாலாட்டு
இன்றும் என் காதுகளில்
கேட்குதம்மா...!
என் தனிமையும் தொடருதம்மா...!
அம்மா நீ எங்கே...!???
எண்ணி எண்ணி பார்க்கிறேன்...
என் பேனாவும்
எழுத மறுக்குதம்மா....!!
அம்மா நீ எங்கே...!???

**பேனா முனையில்**
**ஆளுமைகளைத் தேடும் இவள்:**
**"கவித் தாரகை"**
**நிப்ரா நிஜாம்**
**( நீர்கொழும்பு )**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜூன் 2021



# ஆணாக நான் பிறந்தேன்...

அப்பனுக்கு மூத்தவனாய் ஆணாக நான் பிறந்தேன்...

தமக்கைக்கும்,தங்கைங்கும் அண்ணன் தம்பியாய் நான் பிறந்தேன்...

பிள்ளையில்லா சித்தப்பனுக்கு மறுபிள்ளையாய் நான் பிறந்தேன்...

புயல் வீசும் குடிசையில் புதுமகனாய் நான் பிறந்தேன்....

பொத்தான்கள் சட்டையிலின்றி கூச்சம் நிறைந்த ஆண்மகனாய் நான் பிறந்தேன்....

சில்லரை போடும் அளவிற்கு துளைகொண்ட ட்ரௌசர் கொண்டு விளையாட வறுமைக்கு ஆண்மகனாய் நான் பிறந்தேன்...

அழகிய குச்சமிட்டாய் வீசி சென்றவனின் எச்சில் எடுத்து உண்ட ஆண்மகனாய் நான் பிறந்தேன்...

அன்னை தந்தை இல்லாமல் அனாதை இல்லம் கூட ஏற்காத ஆண்மகனாய் நான் பிறந்தேன்...

மாடை மாளிகைகளில் மூத்தவனாய்....
மக்கு வம்சத்தில் முதலும் கடைசியுமாய்..

வேண்டாம் என்ற கருக்கலைப்பில் தவறி வந்த பிண்டமாய் ஆண்மகனாய் நான் பிறந்தேன்....

எல்லாம் கொண்ட இல்லத்தில் ஒன்று அரைகுறையாய்.. மற்றொன்று மதி நிறைவாய் இரட்டை ஆண்மகனாய் நான் பிறந்தேன்....

அத்தியாயம் முடிந்தாலும் ஆண்களின் அந்தாதி முடிவதில்லை.....

தொடரும்
ஆணாக நான் பிறந்தேன்...

**கார்கவி கவிதைகள்**
**நாகப்பட்டினம் - இந்தியா**



# காணாமல் போனோம்

நெஞ்சாங் கூட்டில்
வந்து வந்து போகும்
நினைவலைகள்
குளத்தின் விரால் மீன்கள் போல...

முட்டி முட்டிப் பால் குடிக்கும்
பசுக் கன்றின்
பசியும் பரவசமும்
உடலெங்கும் வியாபித்து...

பலாத்காரமாய் பிடுங்கியெறிந்த
தடாகத்துத் தாமரைத் தண்டின்
தசை நார்கள்
சொட்டுச் சொட்டாய்
சிந்தும் கண்ணீர்த்துளிகள்...

நீரில் – அமுக்க அமுக்க
மேலெழும் பந்தில்
ஊசியளவு ஓட்டை விழுந்ததால்,
பந்து நிறைந்து
அடியில் புதைகிறது...

இறை தேடிச் சென்ற
காகம்
கூடு மீண்ட போது,
முட்டைகளைக் காணாது
அலறிய அலறல்
அந்தக் குயிலுக்கும் கேட்டது...

வீதியையும் வீட்டையும்
மரத்தையும் மடுவத்தையும்
சுற்றிச் சுற்றி
கதறிக் கதறி
தொண்டை வரண்டு போன
பசுவின் – நாசியில் சளியும்
கண்களில் இரத்தமும்...

கன்று
காணாமல் போய் விட்டது!!!..

**ஓய்வு பெற்ற ஆசிரியர்**
**கலைவாதி கலீல்**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜூன் 2021


# இந்தியாவின் பிரபல சர்வதேச வாழ்வியல் மற்றும் மனநல ஆலோசகர் Dr. ஃபஜிலா ஆசாத்

## அவர்களுடனான நேர்காணல்



இம் மாதத்திற்கான துணிந்தெழு சஞ்சிகையில் அதிதியாக பங்கேற்றிருக்கிறார் இந்தியாவின் பிரபல சர்வதேச வாழ்வியல் மற்றும் மனநல ஆலோசகர் Dr. ஃபஜிலா ஆசாத். தற்போது துபாயில் வசித்து வரும் இவர் இராமநாதபுர மாவட்டம் கீழக்கரையைச் சார்ந்தவர். கல்லூரியில் மாணவிகளின் தலைவியாகத் திகழ்ந்து, கல்லூரியின் முதல் மாணவியாக தங்கப்பதக்கம், கல்லூரி விருது என பெற்ற இவர் பள்ளிக் கல்லூரிகள் மற்றும் இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் பலமுறை மாநில முதல் இடம் பெற்றவர்.


Haco minerals (பெல்லாரி, இந்திய) Prosoft (சிங்கப்பூர்) Mubsira Jewellers (துபாய்) IBFI (துபாய்) ஆகிய நிறுவனங்களில் உயர் பதவி வகித்த இவர் தற்போது Free Lance - Business Consultat & Counsellor ஆக இருக்கிறார்.

'Global Happiness Academy' யில் வாழ்வியல் குறித்த பயிற்சி பெற்ற இவர் அந்த Academy யுடன் இணைந்த வாழ்வியல் ஆலோசகராகவும் செயலாற்றுகிறார். சிறந்த மனநல ஆலோசகராகரான டாக்டர் அப்துல்லா (பெரியார் தாசன்) இவரை வாரிசாக கருதினார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் எழுதிய அடிப்படை எழுத்துப் பயிற்சி நூலை மணிமேகலை பிரசுரம் வெளியிட்டது. இதை தமிழக அரசு பல்லாயிரம் பிரதிகள் வாங்கி இராமநாதபுர மாவட்டத்தில் பாலர் பள்ளிகளின் அடிப்படை புத்தகமாக வைத்து சிறப்பித்தது. தனது புதிய முயற்சிக்காக அன்று **ஜனாதிபதியாக இருந்த டாக்டர் அப்துல் கலாமிடமிருந்து பாராட்டுக் கடிதம் பெற்ற இவரை "சிறந்த குழந்தை நல எழுத்தாளர்" என தமிழ் இலக்கிய பேரவை (துபாய்) விருது வழங்கி சிறப்பித்தது.**

நிலவு ததும்பும் நீரோடை எனும் இவரது கவிதை நூல் கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் வெளியாகி பாராட்டுப் பெற்றது மனிதநேயச் சிந்தனைகள் பேசும் இந்தக் கவிதை நூல் எண்ணூற்றுக்கும் மேற்பட்ட நூலகங்களில் இடம் பெற்றது.

தினத் தந்தி ஞாயிறு மலரில் வாரா வாரம் சிறப்புக்கட்டுரையாக வெளி வந்த இவரது "ஹைக்கூ சிந்தனை" என்ற வாழ்வியல் கட்டுரை வாசகர்களிடையே சீரிய வரவேற்பை பெற்றது.



காணொளி நேர்காணல்
**நுஸைலா பதுர்தீன்**



சஞ்சிகை நேர்காணல்
**பாத்திமா ஷிப்னா ஆதம்**

## கேள்வி - 1

### வாழ்வியல் மற்றும் மனநல ஆலோசகராக உங்களை வரத் தூண்டிய விஷேட காரணிகள் ஏதும் உள்ளனவா?

95% ஒரு மனிதனுடைய செயல்கள் அவன் ஆழ்மனதையே சார்ந்து இருக்கிறது. உடல் மற்றும் உள்ளம் எப்பொழுதும் இணைந்து தான் இருக்கின்றது யார் மனது ஆரோக்கியமாக இருக்கின்றதோ அவரின் உடலும் ஆரோக்கியமாகத் தான் இருக்கும்.

எந்த வைத்தியரிடம் சென்றாலும் கவலை இல்லாமல் இருங்கள் மனதை பார்த்துக்கொள்ளுங்கள் என்று அனேகமாக அறிவுரை கூறுவார்கள். ஆக உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் நம்மால் எதையும் செய்ய முடியும். உடலளவில் ஒரு மனிதன் எவ்வாறு தான் உறுதியாக இருந்தாலும் மனதளவில் சிறிதளவேனும் கவலையோ அல்லது கஷ்டமோ ஏற்பட்டால் அந்த உறுதி உடலில் இல்லாமல் போய்விடும்.

ஆக எம்முடைய மனம் தான் எல்லாவற்றிற்கும் ஒரு மூலதனமாக இருக்கின்றதால் இந்த மனம் பற்றிய படிப்பின் மேல் எனக்கு ஆர்வம் வந்தது. என்னுடைய மன ஆரோக்கியத்திற்காகவும் என்னைச் சுற்றி உள்ளவர்களின் மன ஆரோக்கியத்திற்காகவும் நான் ஒரு கருவியாக உதவ வேண்டும் என்ற ஒரு எண்ணம் தான் நான் உளவியல் துறையைத் தெரிவு செய்ததற்குக் காரணம்.





## கேள்வி - 2

### என்ன காரணங்களால் உளவியல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன?

எந்தக் காரணங்களினால் உளவியல் பிரச்சினை வருகின்றது என்று சொன்னால் சாதாரணமாக நம்முடைய எதிர்பார்ப்பிற்கும் இந்த உலகத்தின் எதிர்பார்ப்பிற்கும் இருக்கும் அந்த இடைவெளி எமது மனதில் ஒரு பிளவு அல்லது ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. ஏனென்றால் இந்த உலகம் நீ இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சில விடயங்களை எம்மிடம் திணிக்கிறது.

சிலர் அதனை அப்படியே ஏற்றுக் கொள்கின்றார்கள் சிலர் இல்லை எனக்கு இப்படித்தான் வேண்டும் என்று அதனை மாற்றி எடுத்துக் கொள்கிறார்கள். இது ஒரு தவறான விடயம் அல்ல ஏனென்றால் அவ்வாறு நாம் எடுத்த விடயங்கள் நம்மளை உற்சாகப்படுத்தி ஒவ்வொரு படியாக நம்மை அந்த இடத்தை அடைவதற்கு உதவி செய்யக் கூடியதாக இருந்தால் நிச்சயமாக அது நல்லதுதான். ஆனால் நாம் அந்த விடயத்தை எடுத்தவுடனே நாம் நினைப்பது இது என்னிடம் இல்லையே அதாவது எனக்கு அது வேண்டும் என்று நினைக்கக் கூடிய அதே நேரத்தில் என்னிடம் இது இல்லையே என்று நினைத்து நாம் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றோம். அதனால் ஒரு உற்சாகத்தோடு அந்த விடயத்தை அடைந்து கொள்ள முடியாமல் ஒரு பாரத்தோடு அதை அடைய முயற்சிக்கின்றோம். இங்கு தான் வித்தியாசம் உள்ளது எல்லாவற்றிற்கும் ஆசைப்படலாம் தவறில்லை.

நாம் ஆசைப்படுவது எமக்கு வேண்டும் என்ற எண்ணத்தோடும் மகிழ்ச்சியோடும் முயற்சித்தால் அங்கு எவ்விதமான ஒரு உளவியல் பிரச்சினையும் வராது. அதேநேரம் இது எமக்கு வேண்டும் என்று எண்ணம் வரும் போது இது நமக்கு இல்லையே என்ற எண்ணம் வருவதால் தான் உளவியல் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. அதனால் அந்த எண்ணங்களை நேர்மறையாக மாற்றும் பொழுது இவ் உளவியல் பிரச்சினைகள் வருவதை தவிர்த்துக் கொள்ளலாம்.




**கேள்வி - 3**

## இந்தத் துறைக்கு வந்த பிறகு தங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவம் ஒன்றை சொல்ல முடியுமா?

இந்தத் துறைக்கு வந்த பிறகு பல அனுபவங்கள் எனது மனதில் பதிவாகி இருக்கின்றது. அதிலிருந்து ஒன்றை துணிந்தெழு சஞ்சிகையின் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தோழி ஆரம்பத்தில் இவர் என்னுடைய க்ளைன்ட் ஆக இருந்தார் பின்பு என்னுடைய தோழியாக மாறினார். இவர் திருமணம் முடித்து விட்டு வேறொரு நாட்டிற்கு அவருடைய கணவருடன் சென்றிருந்தார். அவருடைய திருமணம் ஒரு காதல் திருமணம். அவர் தன் கணவனின் இல்லத்தில் தான் வசித்து வந்திருந்தார். கணவனின் இல்லத்திற்கு சென்ற பிறகு அங்கு ஏற்பட்ட சில பிரச்சினைகள் மற்றும் தனது மாமியாருடன் ஏற்பட்ட சில பிரச்சினைகளை கையாள முடியாமல் புகைப்பிடிக்கும் பழக்கம் மற்றும் ஒரு சில கெட்ட பழக்கங்களில் ஈடுபட்டிருந்தார். பின்பு இவருக்கு குழந்தைகள் பிறந்தது அவங்களுக்கு குழந்தை பிறந்த பிறகும் அந்தக் கெட்ட பழக்கத்தை தொடர்ந்தார்கள்.

அந்த பழக்கம் இவருடைய குழந்தைகளுக்கு பிடிக்கவில்லை. காரணம் புகைப்பிடிக்கும் அந்த வாசம் அது குழந்தைகளுக்குப் பிடிக்காமல் குழந்தைகள் இவருடன் நெருங்குவதை தவிர்த்துக் கொண்டார்கள். அதனால் இன்னும் மனநிலையில் பின்தங்கிப் போன அவர் தான் தனித்து விட்டதாக நினைத்தார். ஒரு தனிமையான உணர்வு அவருக்கு இன்னும் அதிகரித்தது. தன்னுடைய கணவர், தன்னுடைய குழந்தைகள், தன்னுடைய குடும்பம் எல்லோருமே தன்னை விட்டு விலகி இருந்ததால் அவர் இன்னும் மன அழுத்தத்திற்கு ஆளானார். கெட்ட பழக்கங்களுக்கு ஆளாக இருந்த இவர் யாரோ ஒருவரின் ஆலோசனைக்குக் கீழ் என்னிடம் வந்திருந்தார். அவங்களுக்கு நான் முதலில் புரிய வைத்தது ஒரு தீய பழக்கம் எப்படி ஒரு பிரச்சினைக்குத் தீர்வு ஆகும் என்பதைத்தான்.

நான் கூறினேன் அவரிடம் சிறிது யோசித்துப் பாருங்கள் இந்த தீய பழக்கம் இன்னும் இன்னும் வாழ்க்கையில் பிரச்சினைகளை அதிகரிக்கும். நல்ல பழக்கங்கள் நல்ல சிந்தனைகள் வாழ்க்கையில் நல்ல விடயங்களைக் கொண்டு வரும் என்பதை புரிய வைத்து ஒரு நாள் இந்தப் பழக்கங்களை எல்லாம் விட்டுவிட்டு உங்கள் குடும்பத்துடன் ஒருநாள் சந்தோஷமாக இருந்து பாருங்கள் என்று கூறினேன். அவங்களும் அந்த ஒரு நாள் அவங்க குடும்பத்துடன் மனசுவிட்டுப் பேசி சந்தோஷமா இருந்தாங்க.



அது அவரை அந்த கெட்ட பழக்கத்திலிருந்து மீண்டு வர உதவியது. இது போல ஒவ்வொருவரும் தன்னுடைய குடும்பத்துடன் இணைந்து மனசுவிட்டு பேசும்பொழுது நம்முடைய மனதில் உள்ள கவலைகள் கஷ்டங்கள் குறை நிறைகளை அந்த இடத்திலேயே தீர்த்துக் கொள்வதோடு வேறு எந்தக் கெட்ட பழக்கங்களிலும் ஈடுபடாமல் எமது வாழ்க்கையை அழகான முறையில் வாழலாம்.



## கேள்வி - 4

### வேறு எந்தத் துறையில் உங்களுக்கு ஈடுபாடு உள்ளது?

நான் MBA Finance படித்திருக்கிறேன். Jewellery Designing படித்திருக்கின்றேன். இது தவிர Computer System Engineering முடித்திருக்கின்றேன்.

எனக்கு ஓவியம் மற்றும் கலைப் பொருட்கள் செய்வதில் ஆர்வம் இருக்கின்றது.

இதுதவிர கவிதைகள் ஆர்ட்டிகல்ஸ் போன்றவையும் எழுதுவேன் எனக்கு இலக்கியத்தில் அதிக ஆர்வம் இருக்கிறது.

## கேள்வி - 5

### மன அமைதியான வாழ்க்கை, இது சாத்தியமாகுமா? ஆகும் எனில் எப்படி சாத்தியமாகும்?

அது எப்படி என்றால் நீங்கள் மன அமைதி இல்லாமல் இருக்கும் சந்தர்ப்பங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். கவலைகள் கஷ்டங்கள் சின்ன சின்ன மன சங்கடங்கள் மற்றும் ஏற்றத்தாழ்வு இவை அனைத்தும் சேர்ந்ததுதான் வாழ்க்கை என்கின்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளும்போது அந்த உண்மை எமக்கு மன அமைதியைத் தரும்.

இதற்கு நான் ஒரு சிறிய உதாரணம் கூற விரும்புகிறேன். அலை ஓங்கி ஓங்கி அடிக்கின்ற அந்தக் கடல் தான் கீழே அமைதியாக உள்ளது.

அதனால் எண்ணங்கள் என்பது சில நேரம் நேர்மறையாகவும் சிலநேரம் எதிர்மறையாகவும் உருவாகும்.
அதை ஒன்றையும் உற்று உற்று பார்த்துக் கொண்டிருக்காமல் அதையும் தாண்டி ஒரு அமைதியை எமக்குள் உள் நிறுத்தி அதை நோக்கிய பயணமே நிச்சயமாக ஒரு மன அமைதியான வாழ்க்கையைத் தரும்.



**கேள்வி - 6**

## நீங்கள் எழுதிய நூல்கள் மற்றும் உங்களின் சேவைகளுக்கு கிடைத்த விருதுகள் பற்றி குறிப்பிடுங்கள்.

ஆம் பல நூல்களை எழுதியுள்ளேன். ஆரம்பத்தில் மனித மனம் சிக்கலுக்கு தீர்வாக **"திறந்திடு மனசே"** என்ற நூலை எழுதி இருந்தேன்.

அது **"ஆனந்த விகடன்"** பிரசுரமால் வெளியிடப்பட்டு சில கல்லூரிகளில் பாடப்புத்தகமாகவும் ரெபரன்ஸ் புத்தகமாகவும் வைக்கப்பட்டுள்ளது.

அடுத்து குமுதத்தில் **"மனசே மகிழ்ச்சி பழக"** என்று தொடர் ஒன்றை எழுதி இருந்தேன். அது சுமார் 100 வாரங்கள் தொடர்ந்து வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

மாலை மலர் பத்திரிகைக்கு **"புரிந்துகொள் மனமே"** என்ற தொடரையும் எழுதியுள்ளேன்.

ஆம் எனக்கு கிடைத்த விருதுகள் பற்றி கூறப்போனால் சங்கமம் தொலைக்காட்சி (துபாய்) சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு **'கலைப் பேரரசி'** என்று பட்டம் வழங்கி கௌரவித்தது.

அமீரக தமிழ் இலக்கிய மன்றங்கள் **'மகிழ்ச்சி தூதுவர்'** ஆழ்மன சிற்பி என்ற பட்டங்கள் வழங்கி கௌரவித்தது.

அதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் உலகத்தமிழ் பல்கலைக்கழகம் **கௌரவ டாக்டர் பட்டம்** கொடுத்து சிறப்பித்தது.

என்னுடைய **'திறந்திடு மனசே'** நூலுக்கு அமெரிக்காவின் உலகத்தமிழ் பல்கலைக்கழக **'Enlightment award'** வழங்கி சிறப்பித்தது.

வசந்த் தொலைக்காட்சி **"அழகிய நேர்மறையாளர்"** **(Positive Beauty)** என்ற பட்டம் தந்து கௌரவித்தது.

2017 சர்வதேச மகளிர் தினத்தில், அமீரக **( U.A.E )** தமிழ் சங்கம் **"women Excellency Award"** கொடுத்து கௌரவித்தது.

சமீபத்தில் தமிழ் நாடு கவர்னரிடமிருந்து **Achievement Award** எனக்குக் கிடைத்தது மற்றுமொரு சிறப்பாகக் கருதுகிறேன்.



## கேள்வி - 7

## ஆசை இல்லாமல் வாழ வேண்டும் என்கிற எண்ணம் நடைமுறையில் சாத்தியமாவதில்லை ஏன்?




ஆசை என்பதில் நாம் எதை சொல்ல வருகிறோம் என்பதுதான் இதில் ஒரு முக்கியமான விடயம். உண்மையில் எங்களுடைய படிப்பின் படி பார்த்தால் கூட உங்களுக்குள் ஏதேனும் ஒரு விடயத்தில் ஆசை வந்தால் அதை அடைந்து கொள்வதற்கான சக்தி உங்களிடம் இருக்கின்றது என்பதுதான் அர்த்தம்.



நான் ஒரு கணினி பொறியியலாளர் ஆக வேண்டும் என்ற ஆசை வருகிறது என்றால் அதற்குரிய அந்த திறமை உங்களிடம் அடிப்படையில் இருக்கின்றது என்றுதான் அர்த்தம். அந்தத் திறமையை நீங்கள் வளர்த்துக் கொள்ளுங்கள் மற்றும் அதற்கான முயற்சிகளை எடுங்கள். ஒரு ஆசை நம்மை நல்ல ஒரு வழியில் கொண்டு சென்றால் அது நிச்சயம் வெற்றி அளிக்கும் .ஆனால் ஒரு ஆசை நம்மை வழிகேட்டிற்கு விட்டுச்செல்லும் என்றால் அந்த ஆசை இல்லாமல் இருப்பது நல்லது. நாம் ஆசைப்படுவது நடைமுறைக்கு தேவையான ஒன்று மற்றும் நடைமுறையில் இருந்தால் அது உங்களை முன்னேற்றக் கூடிய ஒன்றாகத்தான் இருக்கும்.

## கேள்வி - 8

## மனிதர்களிடம் எதிர்பார்ப்புகளும் தேவைகளும் அதிகரித்து வருவதாலேயே பல பிரச்சினைகளில் சிக்கிக் கொள்வதாக தெரிகிறது, இது சரியா?


நேரடியாகச் சொல்லப்போனால் இது ஒரு சரியான கூற்று அல்ல. ஏனென்றால் எதிர்பார்ப்புகளும் தேவைகளும் அதிகரிப்பதனால் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை அதைப்பற்றிய புரிதல் இல்லாமல் இருப்பதனாலேயே பிரச்சினைகள் ஏற்படுகின்றது. என்னுடைய தேவை என்ன? என்னுடைய எதிர்பார்ப்புகள்? என்னுடைய முக்கியமான இலக்கு என்ன? எதை நோக்கி நான் நகர்ந்து கொண்டிருக்கிறேன்? இப்படி எனும் புரிதல் எம்மிடம் இருத்தல் அவசியம். ஒரு மனிதனுடைய அடிப்படை மனநிலையை மூன்று விதமாக பிரிக்கலாம்.

இவர் ரொம்ப aggressive ஆன ஒரு மனநிலை உடையவர், ரொம்ப submissive மனநிலை மூன்றாவது இவை இரண்டிற்கும் இடைப்பட்ட ஒன்று இருக்கிறது அது assertive. எந்த விடயத்திலும் நாம் aggressive ஆக இருந்தாலும் அது நம்முடைய நிதானத்தை இழக்கச் செய்து விடும். அதே நேரம் எந்த ஒருவர் விடயத்திலும் submissive ஆக இருந்தாலும் நம் தேவைகளை தியாகம் பண்ண வேண்டிய நிலை ஏற்படும்.

இதில் நாம் assertive மனநிலையில் இருக்க வேண்டும் என்கின்ற போது அந்த assertive என்கின்றதை எப்படி சொல்வோம் என்று சொன்னால் 80% ஒரு நல்ல மனநிலை அல்லது ஒரு பக்குவப்பட்ட மனநிலையாக இருத்தல் வேண்டும். ஒரு 10% துணிவுடனும் தைரியத்துடனும் எதையும் முன்னின்று சொல்லக்கூடிய ஒரு மனநிலை இருக்க வேண்டும். ஒரு 10% நாம் submissive ஆகவும் இருக்க வேண்டும்.

சில நேரங்களில் பணிந்து போய் அமைதி காத்து பொறுமையாகக் கையாளக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த மாதிரியான ஒரு மனநிலையுடன் தன்னை சுற்றியுள்ள சூழலையும் தன்னுடைய திறமை பற்றிய புரிதலையும் தன்னுடைய மனது என்ன சொல்கின்றது என்பது பற்றிய புரிதலும் இருந்தால் அந்தப் பயணம் பக்குவப்பட்ட பயணமாக இருக்கும்.






## கேள்வி - 9

### எல்லா வசதிகளும் இந்த நவீன காலத்தில் இருந்தும் மனிதன் ஏன் உளவியல் பிரச்சினையில் சிக்கிக் கொள்கிறான்?

எல்லா வசதிகளும் இன்று மனிதர்களுக்கு கிடைத்ததனால் அவனின் தேர்ந்தெடுப்புகளும் (choice) எல்லாவற்றிலும் அதிகமாக இருக்கின்றது. தனக்கு ஒரு உணவு வேண்டும் என்றால் எந்த உணவை எடுத்துக் கொள்ளலாம் என்று அவனுக்கு முன்னாடி பல தேர்ந்தெடுப்புகள் (choice) இருக்கின்றது.

பொதுவாக தான் எடுக்கக்கூடிய அடிப்படையான விடயங்களில் choices அதிகமாக இருந்து அதிலிருந்து எதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற மனநிலை மற்றும் எனக்கு வேண்டியது மட்டும்தான் எனக்கு வேண்டும் என்ற மனநிலை மனிதனுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனால் சில விடயங்களில் தான் இதைக் கட்டாயமாக செய்தே ஆக வேண்டும் என்கின்ற விடயங்களில் தன்னை அதற்குள் உட்புகுத்திக் கொள்ளமுடியாமல் ஒரு மனிதருக்கு நிச்சயமாக அவ்விடத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்படுகிறது.

அந்தத் தடுமாற்றமே ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. அதுதான் ஒரு அடிப்படையான விடயமாக இருக்கின்றது.

## கேள்வி - 10

### துணிந்தெழு சஞ்சிகை பற்றி உங்களது கருத்து என்ன?

பொதுவாக எல்லோருக்குள்ளும் ஒரு கவலையான விடயம் இருந்தால் நம்முடைய வார்த்தைகளை யார் கேட்பார்கள்? நமக்காக யார் பேசுவார்? நமக்காக யார் இருக்காங்க? இப்படியாக ஒரு தனிமைப்படுத்தப்பட்ட உணர்வு எமக்குள் எழும்.

இந்த துணிந்தெழு சஞ்சிகையில் கலந்துகொள்ளும் அதிதிகளின் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகள், அதை எவ்வாறு அவர்கள் முகம் கொடுத்து வெளியே வந்தார்கள், வாழ்வில் கஷ்டமான நேரங்கள் வரும் போது எவ்வாறு உறுதியாக இருந்தார்கள்? இதுபோன்ற அவர்களின் அனுபவத்தை பகிர்ந்து கொள்வதன் மூலம் அது பார்ப்பவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கையை கொடுக்கின்றது.

இச் சஞ்சிகையை நான் ஒரு தன்னம்பிக்கைத் தூணாகத்தான் பார்க்கின்றேன்.

## கேள்வி - 11

## இந்த நேர்காணலின் ஊடாக நீங்கள் விஷேடமாக கூற விரும்பும் செய்தி என்ன?

உங்களை நீங்கள் நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எப்பொழுதும் எந்தப் பிரச்சினைகள் வாழ்க்கையில் வந்தாலும் உறுதியாக இருங்கள். நீங்கள் எதை செய்யும்போதோ அல்லது எதையாவது கூறும்போதோ அது உங்களுக்கு வெற்றிகரமாக அமையவில்லை என்றால் நீங்கள் சொல்ல நினைத்த விடயமோ அல்லது செய்ய நினைத்த விடயமோ தவறு அப்படி என்று இல்லை. நீங்கள் செய்யக்கூடிய முறை மற்றும் சொல்லக்கூடிய முறையில் கொஞ்சம் மாற்றம் ஏற்படுத்தினால் அது வெற்றிகரமாக அமையலாம்.

நீங்கள் ஒரு விடயத்தில் உறுதியாகவும் இருக்க வேண்டும் அதேநேரம் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடனும் இருக்க வேண்டும்.

## கேள்வி - 12


## எமது வாசகர்களுக்கு இந்த நேர்காணலின் ஊடாக என்ன பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்கள்?

நான் வாசகர்களுக்கு கூற விரும்புவது குறைகளோடும் நிறைகளோடும் உங்களையும் உங்களைச் சுற்றி இருக்கும் உறவுகள் மற்றும் சூழல்களை அப்படியே ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள்.

குறை நிறைகளை ஏற்றுக்கொள்ள பழகிக் கொள்வதன் மூலம் உங்களால் ஒரு விடயத்தை சுமூகமாகக் கையாள முடியும். ஏன் இது இப்படி இருக்கிறது என்று கேள்வி கேட்டால் நம்மால் ஒரு விடயத்தை கையாளுவது கடினமாக இருக்கும். இது இப்படித்தான் இருக்கும் என்று புரிந்து கொண்டால் எதையும் சரியாகக் கையாள முடியும். அன்றாடம் எமது வீட்டை நாம் சுத்தம் செய்யவது போல் நமது மனதையும் சுத்தம் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

உங்களது வீட்டில் இருக்கும் வேண்டாத ஒரு பொருளை எப்படி நீங்கள் தூக்கி வீசுவீர்களோ அது போன்று உங்கள் மனதில் இருக்கும் வேண்டாத மற்றும் உங்கள் மனதிற்கு இதமளிக்காத விடயங்கள் மற்றும் எண்ணங்களை ஒரு குப்பையாக நினைத்து தூக்கி வீசுங்கள். ஒரு சுத்தமான இடம் பார்ப்பதற்கு பிரகாசமாகத் தெரியும். அதேபோன்று தான் சுத்தமான உள்ளம் நமது வாழ்க்கைக்கும் ஒரு பிரகாசத்தை வழங்கும்





















இலங்கை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நேர்காணலில் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.













# பேருவளை நலீம் ஹாஜியார்



ஆயிரம் ஆயிரம் தலைவர்கள்...
அதில் அர்பணிப்புக்கு அகராதியாய்
மறைந்தும் மறையாத உத்தமர்...
நலீம் ஹாஜியார் நீர் ஒரு சகாப்தம்..!!

ஏழ்மை மகனாய் பிறந்தீர்..
ஏழை பசியை உணர்ந்தீர்..
வயது எட்டை எட்டும் முன் தந்தையை தான் இழந்தீர்..
வாரி வழங்கும் வள்ளலாய் திகழ்ந்தீர்...

நீர் செய்த சேவையும்,
புரிந்த பணிகளையும் பட்டியல்
படுத்த என் பக்கங்களும் போதாது..
உம்மை வாழ்த்தும் வாய்களும் ஓயாது..

பேருவளையின் சொத்துகளான முத்துக்களில் நீர் பவளங்களாக,
பளிங்குகளாக இன்றும் என்றும் மின்னுவதற்கான காரணங்கள் அது மாகா
காவியங்கள்..

ஐந்து வரைதான் படித்தீர் ஆயினும் ஆயிரம் ஆயிரம் மாணவர்கள் இன்று
இறை அருளால் உம் தயவால் ஆலிம்களாக, அறிஞர்களாக சமூகத்தில்
சஞ்சரிக்கிறாகள் நீர் கட்டிய நலீமியாவின் நலீமீக்களாய்...

நலீம் ஹாஜியார் நீர் ஒரு சகாப்தம்..!!

அடிக் காணிக்கு அண்ணண் தம்பி அடித்துகொள்கையில்
அன்பளிபாக நீர் கொடுத்த ஏக்கர் காணிகளில் துஆ ஏந்திய கரங்கள்
இன்றும் இன்பம் பெருக உம்மை வாழ்த்தி வாழ்கிறார்கள்..

தலைவர் எனும் தகுதியைத் தாண்டி தந்தை எனும் அந்தஸ்தத்தை
அடைந்தது அநாதைகளை அரவணைத்து கொண்டது தானோ காரணம்???

நலீம் ஹாஜியார் நீர் ஒரு சகாப்தம்..!!

ஏழை மாணவர் வாழ்வில் எழில் பொங்க உதவுவதை ஏகபோக
உரிமையாய் உணர்ந்து உதவிய விதைகள் இன்று மரமாகி, கிளையாகி,
நாட்டின் நல்ல பல துறைகளில் கனிகளாய் காய்த்து குளுங்குகின்றன
பயனுள்ள விதமாய்...

பர்ளு கிபாயாக்களை பார்த்து பார்த்து செய்யும் பக்குவம் நீர் அண்ணனாய்
ஆற்றிய அனைத்து திருமணங்களில் தெளிவாகத் தான் தெறிகிறது...

எத்தனை எத்தனை பள்ளிகள் ...
எங்கெங்கும் கல்விக்கான கட்டங்கள்..
என சேவையின் செதுக்கல்கள் சிற்பி எனும் உம்மை சிறப்பித்து
நிற்கின்றன இன்றும் கம்பீரமாய்..

இங்கிலாந்து இரானியின் திருமண அழைப்பில் இலங்கை பிரதமருக்கு
இல்லா பிரேரனைகள் உமக்கு இருந்தமை, இஹ்லாஸ்ம், இறையச்சமும்
இங்கிலாந்து வரை இட்டுச் சென்றதில் ஆச்சரியம் தான் ஏதும் இல்லை...

உம்மை பற்றிய தேடல்களில் தேங்கிக் கிடந்ததெல்லாம்
நீர் கொடுத்த கொடைகளில் மலர்ந்த முகங்களின் துஆக்கள் தான்..

ஒன்றை கொடுத்து நூறை சொல்லும் மக்கள் மத்தியில் மகானாய்...
ஏழை வாழ்வில் ஏற்றம்காண கோடிகளை கூடி இறைத்த உம் பணிவை
அலை அலையாய், அலை கடலலையாய் உம் அடக்கம் காணவந்த மக்கள்
கூறும் ...

நலீம் ஹாஜியார் நீர் ஒரு சகாப்தம் என்று...

**M.FAZEEM FAHAM**
Dampillawala - Kaleliya.



# கொரோனா படிப்பு

கொரோனா கொரோனா என்ற நோயொன்று,
வாழ்வில் வந்து நின்றது அது தீவிரமென்று,
கல்லூரி படிப்பும் இல்லாமல் போனதன்று,
வீட்டில் கிடக்கிறோம் நிம்மதியின்றி,

கனவுகள் பல வைத்துக்கொண்டு,
அதை அடைய வேண்டும் என நினைத்துக்கொண்டு,
மாடாய் படித்தோம் கனவுக்கென்று,
இன்று முடியாமற் கிடைக்கிறோம் நோயைக்கொண்டு,

படிக்கும் மாணவர்கள் ஆன்லைன்னுடன்,
அவர்களின் வாழ்வும் போகுது செல்போன்னுடன்,
படிக்கும் பாடமெல்லாம் **zoom** கிளாஸ் என்று,
வகுப்பும் நடக்கின்றன இருந்து நின்று,

படிப்புக்கள் பாதி முடிந்துவிட்டது,
ஆன்லைன்னுடன் காலம் சென்று விட்டது,
பரீட்சைகள் எப்போது முடியுமென்று,
ஆவலோடு பார்க்கிறோம் கற்றுக்கொண்டு,

சிறந்த பெறுபேறு பெற்று பட்டதாரியாக ஆசையொன்று,
கொரோனாவினாலே காலம் செல்லுது என பயந்து
கொண்டு,
இருந்தாலும் வெகுமதி பெற்றிட உணர்ந்து கொண்டு,
முயற்சி விடாமல் முயற்சி செய்கிறேன் தங்கிக்கொண்டு,

கொரோனா என்னும் நோய் என்று தான் விட்டிடுமோ?,
என்று தான் எம் கனவுகள் ஜெயித்திடுமோ?,
கண்டகனவெல்லாம் நிஜமாக பழித்திடுமோ?
அவா கொண்ட எம் படிப்பு வென்றிடுமோ?

பல்கலைக்கழகம் மீண்டும் திறந்து தந்து,
எமக்கான பட்டம் கிடைக்க வேண்டும் பட்டதாரியாக
நின்று,
வெளிவர வேண்டும் என பேராசை கொண்டு,
பதவி தான் வகித்திடனும் சிறந்த ஆளுமை கொண்டு,

எந்நாளும் கவலையாக இருந்து கொண்டு,
கொரோனா எனும் இந்நோய் விடுபட வேண்டும் என்று
இறைவனிடம் வேண்டுகின்றேன் ஐ வேலை தொழுது
நின்று.

**வளர் கவிஞன் ஹுஸ்னி இப்ராஹீம்**
**இஹல கினியம.**



# அவனுக்கு எப்படித் தெரியும்?

"உம்மா......உம்மா...."

என்று குழந்தை அழும் சத்தத்தில் அன்வர் எழும்பினான்.கிழிந்த பாயில் உறங்கிக் கொண்டிருந்த நான்கு பிள்ளைகளையும் பார்த்து அவன் பெருமூச்சு விட்டான்.சைனப் அழும் குழந்தையை சமாதானப்படுத்த வழியின்றி நிலை தடுமாறினாள்.

தனது கணவனின் முகத்தைப் பார்த்த சைனப் "என்னங்க ரெண்டு நாளா பிள்ளைகளுக்கு சரியான சாப்பாடு இல்ல.சீனி ஒரு மணியும் வீட்டிலில்ல.என்ன செய்றது" என்று கேட்டாள். அன்வர் பதில் எதுவும் சொல்ல முடியாமல் தலை குனிந்தான்.

வானத்தைப் பார்த்தவாறு சிறிது நேரம் உட்கார்ந்திருந்த அன்வர் குசினிக்குள் சென்று தண்ணீர் ஒரு கோப்பையை எடுத்து மடமடவென்று குடித்தான். இரவும் எதுவும் சாப்பிடாத வயிறு கடகடவென்று சத்தமிட்டது. வயிற்றை அழுத்திப் பிடித்த அன்வர் ஆணியில் கொழுவியிருந்த சேர்ட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே வந்தான்.

முகத்தில் மாஸ்க்கைப் போட்டுக் கொண்டு பொலிஸ் எங்காவது நிற்கின்றனரா என நோட்டமிட்டவாறு நடந்தான்.எங்கு செல்வது என்று அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.பக்கத்திலுள்ள காசிம் ஹாஜியார் வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.

தோட்டத்தில் மெல்ல நடை பயின்று கொண்டிருந்தார் காசிம் ஹாஜியார்."அன்வர் என்ன இந்தப் பக்கம்" எனக் கேட்டார். தலையை சொரிந்தவாறு அன்வர்" ஹாஜியார் வீட்டில கொஞ்சம் கஷ்டமா இருக்கு. பிள்ளைகள் பசியில் அழுகிறார்கள். நாளைக்கு லொக்டவுன் எடுக்கியாமே வீட்டுக்குத் தேவையானது வாங்கோனும். அதுதான் ஹாஜியார் நான் முன் தோட்டத்த கொஞ்சம் வெளிசாக்கிப் போடவா " என இறைஞ்சுவது போல கேட்டான்.

"ம்...ம்....கொஞ்சம் தொரமா வெளிசாக்கிப் போடு ஏதாவது பார்த்துத் தாரன்"என்று சொன்னதைக் கேட்ட அன்வரின் வயிற்றில் பால் வார்த்தது போல் இருந்தது. பிள்ளைகள் பசியில் அழுவார்கள் கொஞ்சம் பணம் கேட்போம் என யோசித்த அன்வர் "இன்னும் வேலயே தொடங்கல்ல அதுக்குள்ள உனக்கு காசா" என்று ஹாஜியார் ஏசினா என்று பயந்து இன்னும் கொஞ்சத்துல கேட்போம் என எண்ணியவாறு மண்வெட்டியையும் விளக்குமாறையும் எடுப்பதற்காக பின்பக்கமாகச் சென்றான்.

ராபியா தாத்தா பின் பக்க குசினியில் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தார்.ராபியா தாத்தா அன்வரின் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்.கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாய். மூத்த மகள் திருமணம் செய்து விட்டாள். இன்னும் இரண்டு குமர்ப் பிள்ளைகள் இருக்கின்றனர்.காசிம் ஹாஜி யார் வீடுதான் அவளின் அடைக்கலம்.அங்கு மிகுதியாகும் சாப்பாடுகளையும் சொற்ப சம்பளத்தையும் கொண்டுதான் அவள் காலம் தள்ளிக் கொண்டிருந்தாள்.

அன்வரைக் கண்ட ராபியா தாத்தா சினேகமாக புன்முறுவல் செய்தாள். அன்வர் மண்வெட்டியையும் விளக்குமாறையும் எடுத்துக் கொண்டு முன் பக்கமாகச் சென்றான். சுறுசுறுப்பாக அவன் வேலையை ஆரம்பித்தான். சுமார் இரண்டு மணித்தியாலங்களாக ஓடி ஓடி வேலை செய்தான். அவனது கை பட்டதும் முற்றம் துடைத்துப் போட்டாற் போல் ஆகியது. ஹாஜியாரைச் சந்தித்துக்காசு கேட்போம் என நினைத்து இரண்டு மூன்று முறை சென்று பார்த்து விட்டான். ஹாஜியார் மும்முரமாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். ஏமாற்றத்துடன் அவன் வேலையை செய்து கொண்டிருந்தான்.

அழும் குழந்தைகளின் முகம் அவன் மனக்கண்ணில் தோன்றியது. சரியாகச் சாப்பிடாததால் அவனுக்கும் தலை சுற்றுவது போல் இருந்தது. பெருமூச்சு விட்டவாறு பக்கத்திலிருந்த கல்லில் அமர்ந்து விட்டான்.

ராபியா தாத்தா இடியப்பமும் பால் தேநீரும் எடுத்துக் கொண்டு அன்வரை நோக்கி வந்தார். "அன்வர் முதல்ல சாப்பிடுங்க பிறகு வேலய பாருங்க " என்று கூறி இடியப்பத்தை நீட்டினார்." இல்ல ராபியா தாத்தாஎனக்கு வேணாம். பிள்ளைகள் நேத்தைல இருந்து பசியோடு இருக்காங்க. ஹாஜியார்ட்ட கொஞ்சம் சல்லி கேட்போம் என்று பார்த்த அவர அகப்படவே ஏலா" என்றான்." அன்வர் இன்டைக்கு ஹாஜியார்ட பிறந்த நாள் வீட்டில பகலக்கி சாப்பாடு.பிரியாணி சமைக்கச் சொல்லியிருக்கார். அவர்ட பிரண்ட்ஸ்மார் வாராங்களாம். இன்டைக்கு உங்களுக்கு ஹாஜியார அகப்பட கிடைக்காது "என்றார் ராபியா தாத்தா.

பெருமூச்சு விட்ட அன்வர் ராபியா தாத்தாவின் கையிலிருந்த பால் தேநீரை மட்டும் வாங்கிக் குடித்தான். ராபியா தாத்தா அவ்வளவு கெஞ்சியும் அவன் சாப்பாட்டை சாப்பிட மறுத்து விட்டான். ராபியா தாத்தா தனது வேலையைப் பார்க்கச் சென்றுவிட்டார். அன்வர் மீண்டும் மும்முரமாக வேலையை ஆரம்பித்தான். ராபியா தாத்தா பிரியாணி சமைக்கும் வாசம் அவனது மூக்கில் நுழைந்து அவனது பசியைத் தூண்டிக் கொண்டிருந்தது.

பகல் ஒரு மணியாகும் போது காசிம் ஹாஜியாரின் நண்பர்கள் பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு மோட்டார் சைக்கிள்களில் வரத்தொடங்கினர். வீட்டில் பர்த்டே பார்ட்டி கலை கட்டத் தொடங்கியது.சிரிப்பும் பாட்டும் கும்மாளமுமாக வீடு கலகலப்பாகியது.

அவன் வியர்க்க விறுவிறுக்க வேலை செய்து கொண்டிருந்தான். அவன் மனக்கண் முன் பிள்ளைகளின் முகமும் சைனபின் முகமும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது. அன்வரின் கை பட்டதும் தோட்டம் பளபளவென்று மின்னியது. அவன் குப்பைகளை எல்லாம் ஓரிடத்தில் ஒன்று சேர்த்தான்.

நேரம் மூன்று மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. ராபியா தாத்தா பீங்கான் நிறைய பிரியாணியை எடுத்துக் கொண்டு அன்வரை நோக்கி வந்தார்."அன்வர் காலையிலும் சாப்பிடல இத இப்ப சாப்பிடு" என்று கூறி பிரியாணியை நீட்டினார். ஆனால் அன்வர் " பிள்ளைகள் சாப்பிட்டிருக்க மாட்டாங்க வீட்டில் ஒன்றுமே இருக்கல்ல. நான் மட்டும் எப்படி சாப்பிடறது "என்று கேட்டான்.

சிரித்துக் கொண்டே ராபியா தாத்தா" அன்வர் ஒரு மணிக்கே நான் உங்க வீட்டுக்கு சாப்பாடு ஒரு சகன் அனுப்பிட்டேன். பிள்ளைகள் எல்லோரும் இந்நேரத்துக்கு சாப்பிட்டு இருப்பாங்க" என்று கூறினார். "உண்மையா? ராபியா தாத்தா" என மகிழ்ச்சியுடன் கேட்டான் அன்வர்.

"ஓ...அன்வர் உண்மையாகவே அனுப்பிட்டேன். இத நீ இப்ப சாப்பிடு" என்று அன்வரின் கையில் பிரியாணிப் பீங்கானைத் திணித்தார். பசியோடு இருந்த அன்வர் ஆவலோடு பிரியாணியை சாப்பிடத் தொடங்கினான்.

அவனுக்கெங்கே தெரியப் போகிறது பிள்ளைகள் சாப்பிட்டது ராபியா தாத்தா வீட்டிலிருந்து சமைத்து அனுப்பிய சோயா மீட்டும் பருப்பும் சோறுமென்று?

முற்றும்.

**ஹஸனியா இர்பான், (ஆசிரியை)**
**ஸாஹிறா ஆரம்பப் பாடசாலை,**
**தர்கா நகர்.**



# சிறகிழந்த தேவதை அவள்

பெண் பிள்ளைகளுக்கு எப்பவும் அப்பா மேல தான் ஓர் ஈர்ப்பு, தாயின் அன்பை புரிந்து கொள்ளும் போது வாழ்வில் ஒரு கட்டத்தை தொலைத்தே இருப்போம்.. தாயின் அன்புக்காக ஏங்கும் அவளுக்கு இன்று தாய் உயிருடன் இல்லை என்பதை மனது ஏற்க மறுப்பது ஏனோ??

வாழ்க்கை என்பது போராட்டக்களம்..
சிறுபிராயம் தொட்டு சொல்ல முடியா இன்னல்களையும் கஷ்டங்களையும் அனுபவித்த அவளுக்கு வாழ்க்கை எனும் புத்தகம் அனுபவத்தினால் நிறம்பி வழிந்து கொண்டு தான் இருந்தது..

வாழ்க்கை எல்லா இடத்திலும் முட்டியது.. வாழ்வில் முக்கியமான கட்டமது, தனியாகத் தான் போராடியாகனும்..
மோதினாள்.. வீழ்ந்தாள்... தொடும் அனைத்தும் தோல்வியில் தான் போய் முடிந்தது.. வீழ வீழ முயற்சி எனும் ஊன்று கோள் தாங்கி எழத் துடித்தாள்.. இதற்கு மேல் தன்னால் முடியாது என்று தோல்வியை ஏற்கும் மனநிலை வரும் ஓர் கட்டத்தில் இறைவனுடன் துஆ எனும் ஆயுதம் ஏந்தி மன்றாடினாள்..

ஆம், அவளது அனைத்துப் போராட்டங்களிலும் அவளுடன் கூடவே அனைத்து உறவுகளும் அவளுக்கு துணையாய் இருந்தது.. அவளது தந்தையின் வழிகாட்டல்கள், தாயின் ஏக்கமும் துஆவும், அன்பான உறவின் ஆறுதலும் வார்த்தையில் அளவிட முடியா உதவிகளும் அவளுக்கு உற்சாகமூட்டியது, தைரியத்தை கொடுத்தது எனலாம்..
இதனாலேயே அவள் வெற்றிப்படிகளை தாண்டும் வரையில் தோல்வியை எதிர்த்துப் போராடினாள்..

உறவுகள் என்பது சாதாரணமான ஒரு பிணைப்பு அல்லவே அல்ல, வாழ்வை ஒளிமயமானதாக மாற்றி அமைக்கும் வல்லமை வாய்ந்த சக்தி உறவு என்ற வார்த்தைகுள் ஒளிந்து கிடக்கிறது.. உறவுகள் தான் உயிர் கொடுக்கிறது.. வெற்றியை தனதாக்கிக் கொள்ளும் கடைசித் தருவாயில் தந்தை எனும் உறவில் ஒரு விரிசல், தாய் அவளை தனியாக விட்டு இறைவனிடம் போய் சேர்ந்து விட்டாள்.. அன்பான உறவு அவளை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து சென்று விட்டது.. பிரிவுகள், இழப்புக்கள், நிராகரிப்பு, தோல்வி இவை அனைத்தையும் ஒன்றாகவே அனுபவித்தாள்..

உறவுகளை இழந்த காயங்கள் ரணங்களாகின.. அன்பை இழந்து துடியாய் துடித்தாள்.. எல்லாம் கைவிட்டுப் போனது..

அன்பு ஒன்று தான் அநாதை என்பது நிதர்சனமே..!!! இந்த உலகத்தில் எது இல்லாமல் வேணாலும் வாழ்ந்திடலாம் ஆனால் நம் மேல் பாசம் காட்ட ஒரு உறவு கூட இல்லாமல் வாழ்வதென்பது கொடுமையிலும் கொடுமை.. அதற்குப் பெயர் தான் அநாதை என்பேன்.. மனம் விட்டுப் பேசக் கூட ஒரு உறவு இல்லாத, நினைவுகளினால் வதைக்கப்படும் போது ஓரிரு வார்த்தைகளில் கூட ஆறுதலுக்கேனும் ஓர் உறவு இல்லாமல் போகும் போது... தனது சந்தோஷம், துக்கங்களை பகிர்ந்து கொள்ள மனம் ஒரு நட்பைத் தேடும் போது... தோள் கொடுக்க யாரும் இல்லாமல் போகும் போது... அன்பை இழந்து அன்புக்காக ஏங்கிக் கொண்டு இருப்பது, தனிமை எனும் ஆட்கொள்ளி உயிரை பறிக்காமலா விடும்???

இப்படியான வேதனைகளில் தவித்துக் கொண்டிருக்கின்ற உள்ளங்களின் வேதனைகளை காயங்களின் வடுக்களை சொல்ல வார்த்தைகள் கிடையாது என்பேன்.. அவர்களின் உணர்வுகளை யாராலும் புரிந்து கொள்ளவும் முடியாது.. நாம் தேடிப்போய் பேசுகின்ற உறவுகள் அனைத்தும் நம்மை ஊதாசீனம் செய்கின்றன... இளகிய மனம் என்பது பெண்ணுக்கு அதுவும் ஒரு வகை வதை தான்...

தோல்விகள் ஒருவரை வீழச் செய்யாது, எழுந்து தலை நிமிர்ந்து வாழச் செய்யும்.. ஆனால் உறவுகளின் இழப்புக்களும் பிரிவும் வாழ்வையே இருளாக்கி விடும்... இன்று அவளது போராட்டம் வெற்றியடைந்து, எதிர்பார்ப்பு நிறைவேறியது ஆனால் அவளின் வெற்றியைக் காண துடித்துக் கொண்டிருந்த உறவுகள் இன்று அவள் கூட இல்லை..

உண்மையான வீழ்ச்சி,தோல்வி என்பது இது தானோ??
இன்று உடல் மட்டும் தான் உயிர் வாழ்கிறது, உள்ளம் என்றோ இறந்து விட்டது..

சோதித்து விடாதே யாரப்பே..!!!
தோற்றுக் கொண்டே இருக்கிறேன்..
வாழ்வையே நொந்து கொண்டிருக்கும் உடைந்த உள்ளங்களை உங்கள் பிரார்த்தனைகளில் சேர்த்துக் கொள்ள மறவாதீர்..!!!

**முப்(F)ரா பின்த் கமர்தீன்**
**தங்காலை**



# பெற்றோர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம்

பெற்றோர்களுக்கு வாழ்க்கையில் ஏற்படும் கடுமையான மனஅழுத்தத்தில் குழந்தை வளர்ப்பும் ஒரு காரணியாக உள்ளது. குழந்தைகளின் படிப்பு, பொருளாதார வளர்ச்சி, சமூகத்தில் அந்தஸ்து பெறுதல் போன்ற காரணிகளால் பெற்றோர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.

இந்த மன அழுத்தங்களை குறைக்க வேண்டுமானால் குழந்தை வளர்ப்பில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன் வர வேண்டும். உதாரணமாக துணியில் ஒரு பகுதி கிழிந்துவிட்டால் அது பெரியதாக கிழியும் முன் சிறியதாக இருக்கும் போதே தைப்பது அவசியம். ஆங்கிலத்தில் கூட பழமொழி கூறுவார்கள்.

**A stitch in time saves nine**

என்று சொல்வார்கள். துணிகளில் இருக்கும் கிழிசல்களைப் போல் குழந்தை வளர்ப்பிலும் இருக்கக்கூடிய பிரச்சினைக்குரிய பகுதி எது என்று கண்டறிந்து உடனடியாக சரி செய்ய முன் வர வேண்டும். இல்லையென்றால் தீர்க்க முடியாத அளவிற்கான பெரிய பிரச்சினையாக அது மாறிவிடும்.

இதனால் எவ்வளவு பொறுமையாக இருக்கக் கூடிய பெற்றோருக்கும் சமூக கட்டமைப்பிலிருந்து வரக்கூடிய அழுத்தம் என்பது பொறுமையைக் குலைக்கக்கூடியதாக மாறிவிடுகிறது.


சமூகத்திலிருந்து வரக்கூடிய எதிர்வினைகளால் நம் அழுத்தம் கூடிக்கொண்டே செல்கிறது. நாம், நம்முடைய பிள்ளை, நம்முடைய குடும்பம் என தெளிவான வரைமுறைகளோடு வாழ்ந்தாலும் கூட மற்ற பிள்ளைகளை நம் பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய பழக்கம் எப்படியாவது ஏற்பட்டுவிடுகிறது. இந்தப் பழக்கம் தேவையற்றது என்பது உளவியல் நிபுணர்களின் கருத்து.

நமது நெருங்கிய உறவினர்களின் பிள்ளைகளோடு ஒப்பிடுவது. நமது இரத்தப்பந்த பிள்ளைகளோடு ஒப்பிடுவது. இவ்வாறு ஒப்பிடுவதால் பெற்றோர்களின் மன நிம்மதி குலைகிறது.

ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு சிறப்பம்சம் கொண்டது. அதை மற்றக் குழந்தைகளோடு ஒப்பிட்டால் அது பலஹீனம் தான் அடையுமே தவிர அந்தக் குழந்தை பலம் பெறாது.

இன் ஷா அல்லாஹ் ஆகையால் புரிந்து கொண்டு நடப்போம்.

**சல்மா நூரா - இந்தியா**



# இரண்டாம் உலகப் போரின் இறுதியில் நாசி வதை முகாமிலிருந்து அன்புள்ள ஆசிரியர்களுக்கு என பெயரிடப்பட்ட ஒரு கடிதம் கிடைத்தது

அன்புள்ள ஆசிரியர்களுக்கு,

நான் நாசி முகாமிலிருந்து உயிர்பிழைத்த ஒருவன் இங்கு சாட்சியங்கள் இல்லாத பல குற்றங்களுக்கு கண்ணால் கண்ட சாட்சியாக நான் மட்டுமே உள்ளேன்.

உயிரை கொல்லக்கூடிய எரி வாயுக்கள் அடங்கிய அறைகளும் உயர் வினைத்திறன் உடைய ஆயுதங்களும் கற்றலில் சிறந்த பொறியியலாளர்களால் உருவாக்கப்பட்டன.

திறமைமிக்க மருத்துவர்களால் சிறுவர்கள் துல்லியமாக விஷமாக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

அனைவருக்கும் சேவையை வழங்க வேண்டிய தாதியர்களால் சிசுக்கள் பல ஆதாரமின்றி அழிக்கப்பட்டனர் தங்களின் சிறப்புப் கல்வியை மிகச் சிறப்பாகக் கற்ற பட்டதாரிகளும் உயர் கல்விமான்களும் குழந்தைகளும் பெண்களும் சுட்டு எரிக்கப்பட்டனர்.

எவற்றையெல்லாம் கண்கள் பார்க்கக்கூடாதோ அவற்றையெல்லாம் கண்டுகொண்ட மனநிலையில் இன்று கல்வி மீது எனக்கு நம்பிக்கை அற்றுப் போனது ஒருவிதமான சந்தேகம் உள்ளார தோன்றுகிறது.

நான் உங்களிடம் ஒரு சிறிய கோரிக்கையை விண்ணப்பிக்கின்றேன் உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த மனிதாபிமானத்தை கற்றுக்கொடுங்கள்.

கல்வி கற்ற மனிதர்களாக உருவாக்குவதற்கு உதவுங்கள் கற்ற கொடூரர்களையும், திறமையான உளவியல் கொலையாளிகளையும், படித்த முட்டாள்களையும் உருவாக்குவதற்கு உங்கள் பொன்னான முயற்சியை விரையம் செய்யாதீர்கள்

உங்கள் ஏட்டுக் கல்வியும், கணிதமும், வாசிப்பும் ,எழுத்தும் மனிதர்களுக்கு சேவை செய்யக்கூடிய

மனிதநேயமுள்ள
மனிதர்களை உருவாக்குவதற்கு பயன்படட்டும்

**நபீஸா மின்ஹாஸ்**
**சித்த மருத்துவ மாணவி**
**புத்தளம் மதுரங்குளி**



# இலங்கையில் தேயிலைச் செய்கையின் வரலாறு

பிரித்தானியர் தமது ஆட்சியை இலங்கையில் ஸ்திரமாக்கிக் கொண்டதன் பின்னர் அதுவரை காலமும் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதார முறை நிலை மாறி வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட திறந்த பொருளாதார முறைக்கு இட்டுச் சென்றது. பல கொள்கைகளை வகுத்து பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதில் விசேட கவனம் செலுத்தினர்.

1837 தொடக்கம் ஏறக்குறைய 21ம் நூற்றாண்டு ஆரம்ப காலம் வரை இந்நாட்டில் ஏராளமான தோட்டங்களை நிறுவி தோட்டப் பயிர்ச்செய்கையை பரப்பினார்கள். அத்தோட்ட விளைபொருட்களை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து சாதனங்களை அமைத்தனர். இலங்கையில் ஆரம்பத்தில் கோப்பி, தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய தோட்டங்களையும் அதிகமாக திறந்ததால் ஏற்றுமதி பெருகியது. அவ்வேற்றுமதிகளை சிரமமின்றி குறுகிய காலத்தில் குறைந்த பணச்செலவில் செய்வதற்காக பல பாதைகளை அமைத்தார்கள். அதிக பொருட்களையும் ஆட்களையும் இடம்மாற்றுவதற்காக பின்னர் புகையிரத பாதைகளை அமைத்தனர்.

தோட்டங்களில் உழைப்பதற்காக தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்தார்கள். போக்குவரத்து சாதனங்களின் வளர்ச்சியினாலும் புதிய தொழிலாளர் குடியேற்றங்களின் விளைவாலும் புது நகரங்கள் தோற்றம் பெற்றன.

அந்தவகையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் பல பயிர்களை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தினர். கோப்பி, சிங்கோனா, கொக்கோ போன்ற பயிர்களின் வீழ்ச்சியானது தோட்டக்காரரை மட்டுமன்றி, நாட்டின் பொருளாதாரத்தையும் பலமாகப் பாதித்தது. இதனைத் தொடர்ந்து தான் தேயிலைச் செய்கையில் ஆர்வம் காட்டினர்.

**இலங்கையில் தேயிலைச் செய்கையின் விருத்திக்கு பல காரணிகள் துணை நின்றன.**

**1.தேயிலை செய்கைக்கு ஏற்ற மண் வகை காணப்பட்டது.**

மலை நாட்டு சாய்வுகளில் செம்பூரான் மண் வகை அதிகளவு பரம்பிக் காணப்பட்டது.
செம்மஞ்சள் பொட்சோலிக் மண்
செங்கபில லற்றசோல் மண்
மென் சாய்வான தரைதோற்றம்
மொறவக் கோரளை 2500 அடிக்கு குறைவான உயரமான பகுதியில் வளரும் தேயிலை

கண்டி 2500 அடிக்கு மேல் உயரமான பகுதியில் வளரும் தேயிலை

ஊவா 2800 அடிக்கு மேல் உயரமான பகுதியில் வளரும் தேயிலை

தம்புள்ளை மற்றும் டிக்கோயா 3500 அடிக்கு மேல் உயரமான பகுதியில் வளரும் தேயிலை

நுவரெலியா 6000 அடிக்கு மேல் உயரமான பகுதியில் வளரும் தேயிலை
கூடிய மழை வீழ்ச்சி
குறைந்ந வெப்பநிலை
போன்ற புவியியல் காரணிகள் வாய்ப்பாக இருந்தது.

**2. உலக சந்தையில் செங்கோனாவின் விலை வீழ்ச்சி, கொக்கோவை சில இடங்களில் மட்டுமே பயிரிடக் கூடியதாக இருந்தமை. இதனால் தோட்டக்காரரின் வருமானம் வீழ்ச்சியடைதல்.**

**3. தேயிலை பதனிடுவதிலும் தயாரிப்பதிலும் இலகுவான புதிய முறைகள் அறிமுகப்படுத்தியமை.**

**4. இந்தியாவின் அஸாமிலும் பார்க்க இலங்கையின் தேயிலை விளைச்சல் அதிகமாக இருந்தமை.**

தேயிலைச் செய்கையின் ஆரம்பத்துக்கு மேற்குறித்த காரணிகள் உதவியது.

## Camellia sinensis

இந்நிலைத்திணையின் இருசொற்பெயர் *Camellia sinensis* என்பதாகும். இங்கு *sinensis* என்பது இலத்தீன் மொழியில் சீனாவைச் சேர்ந்த என்ற பொருள்படும். *Camellia* என்பது அருட்திரு. செறொக் காமெல் (1661–1706) அருட்திரு. செறொக் காமெல் தேயிலைச் செடியைக் கண்டுபிடிக்கவோ அல்லது பெயரிடவோ இல்லை. எனினும் திணை வகையீட்டை உருவாக்கிய கரோலஸ் லீனியஸ் என அறியப்பட்ட

தாவரவியலாளரான. செரொக் காமெல் அடிகள் அறிவியல் துறைக்காற்றிய சேவையைப் பாராட்டும் வகையில் இப்பேரினத்துக்கு இப்பெயரை இட்டார்.

இலங்கையின் தேயிலை வரலாறு 1824 ஆம் வருடத்துடன் ஆரம்பமாகிறது. அந்த வருடத்தில் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தேயிலைச் செடி பேராதனை பூங்காவில் நடப்படுகிறது. 1867 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தேயிலை வளர்ப்பு கண்டியிலுள்ள லூல்கந்துரை பெருந்தோட்டம் தேயிலை வளர்ப்பிற்கான ஆர்வத்தைக் கொண்டிருந்தது. பெருந்தோட்டத்துக்கு வந்திருந்த ஸ்கொட்லாந்து நாட்டவரான ஜேம்ஸ் டெய்லர் 1867 தேயிலைப் பயிரிட்டார். மொத்தம் 19 ஏக்கர் நிலத்தில் தேயிலை பெயிரிடப்பட்டது.

வட இந்தியாவில் அஸாமில் தேயிலை வளர்ப்பு, தேயிலை உற்பத்தி போன்றவற்றில் அனுபவம் பெற்றிருந்த டெய்லர், தனது வீட்டின் முன்னரையில் உற்பத்தி தொடர்பான பல சோதனைகளைச் செய்தார். தேயிலை இலையைக் தனது கைகளால் சுருட்டி, வாடிய அத்தேயிலைகளை களிமண் அடுப்பில் கரியைப் பயன்படுத்தி சுட்டார். இவ்வாறு தயாரிக்கப்பட்ட தேயிலை இலண்டன் நகரின் ஏலத்தில் கூடிய விலையைப் பெற்றது. இது இலங்கையில் தேயிலை உற்பத்தியை ஊக்கமூட்டியது.

இலங்கையில் முக்கிய தேயிலை வளர்ப்புப் பகுதிகள்

1.காலி
2.இரத்தினபுரி
3.கண்டி
4.நுவரெலியா
5.திம்புள்ளை
6.ஊவா

தேயிலை செய்கை விருத்தியினால் உருவாகிய புதிய நகரங்கள்

1.ரத்தோட்ட 2. எலகடுவ
3. றங்காலை 4.புஸ்ல்லாவ
5.தொலஸ்பாகே 6.ருவான்வெல

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேயிலைச் செய்கை எழுச்சி அடைவதற்கும் பல காரணிகள் உதவின.

**1. தோட்ட விளை பொருட்களை துறைமுகங்களுக்கு அனுப்பும் வசதி காணப்பட்டமை.**

**வீதிகள்**
முதலாவது பெருந்தெரு பிரித்தானிய பொருளியலாளரான கப்ரன்டோசன் இன் திட்டப்படி கடுகன்னாவ ஊடாக நிறுவப்பட்ட யு1 என்ற குறியீட்டு இலக்க வீதி

ஆளுனர் ஜேம்ஸ் அன்டர்சன் – கம்பளை எட்டியாந்தோட்ட வீதி
ஆளுனர் ஹென்றி வோட் – மாத்தளை, கண்டி, கொத்மலை
ஆளுனர் ஹோர்குலிஸ் றொபின்சன் – கினிகத்தேனை அரநாயக்க வீதி, டிக்கோயா வீதி, காலி அக்குரச வீதி, கொழும்பு கும்பலவனை வீதி

ஆளுனர் வில்லியம் கிரகரி – கண்டி– யாழ் வீதி, கண்டி– திருமலை வீதி, மதவாச்சி– மன்னார் வீதி, உடப்புசல்லாவ – நுவரெலிய வீதி.

ஆளுனர் லோங்டன் – நுவரெலிய நானு ஓயாவீதி, ஹற்றன் பொகவந்தலாவ வீதி, கண்டி தெல்தெனிய வீதி

புகையிரத வீதிகள்
சேர் ஹென்றி வொட் 1865 இல் கொழும்பு அம்பேபுஸ்ஸ புகையிரத பாதை

1867 இல் கொழும்பு–கண்டி புகையிரத வீதி
1873 இல் கொழும்பு–கம்பளை புகையிரத வீதி
1880 இல் கொழும்பு–மத்தளை புகையிரத வீதி
1888 இல் கொழும்பு–ஹற்றன் புகையிரத வீதி
1893 இல் கொழும்பு–அப்புத்தளை புகையிரத வீதி
1924 இல் கொழும்பு–பதுளை புகையிரத வீதி

2.தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அதன் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டன.

3. முதலீட்டாளர்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டமை

4.தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரயாணச் சலுகைகள்

5.வசிக்கும் இடங்கள், இலவச வைத்திய வசதிகள் அளிக்கப்பட்டமையால் பெருந்தொகையான உழைப்பாளர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய முன்வந்தனர்.

இக்காரணிகள் விளைவாக 1883 முதல் 1896 வரையுள்ள காலத்தில் தேயிலைச் செய்கை வேகமாக விருத்தியடைந்தது.

1890 களில் தான் இலங்கைத் தேயிலையை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தல் ஆரம்பமாகிறது. அதன் பின்னர் உலகிலேயே சிறந்த தேயிலையை உற்பத்தி செய்யும் நாடு என்ற பெருமை இலங்கைக்குக் கிடைக்கிறது.
1890 இல் இலங்கை 22,900 தொன் தேயிலையை உற்பத்தி செய்தது இது 1873–1880 வரை உற்பத்தி செய்யப்பட்ட 12 கிலோவுடன் ஒப்பிடும் போது மிகப்பெரிய வளர்ச்சியாகும்.

1896 இன் பின்னர் தேயிலை செய்கையில் ஒரு சிறு வீழ்ச்சி ஏற்பட்டது. உற்பத்தி கேள்வியிலும் அதிகமாய் இருந்தமையால் விலை வீழ்ச்சிக்கு காரணமாகும்.

ஆயினும் 1904 ஆண்டுக்கு பின்னர் சிக்கனமாக முறைகள் பின்பற்றபட்டதுடன் பல நாடுகளில் தேயிலை நுகர்ச்சி அதிகரித்து தேயிலைக்கான கேள்வி கூடியது
பாரிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு புதிய இயந்திர சாதனங்களின் கீழ் தேயிலை உற்பத்தி புத்துயிர் பெற்றது.

1ம் உலகப் போர் காலத்தில் கப்பற் போக்குவரத்து குறைவினாலும் பசளை விலை அதிகரிப்பினால் உற்பத்தி நாடுகளின் போட்டியினாலும் தேயிலை செய்கை ஒரு மந்தநிலையை அடைந்தது.

உலகில் அதிகளவு தேயிலை உற்பத்தி செய்யும் நாடு சீனாவாகும். உலகின் தேயிலை உற்பத்தியில் 30 வீதம் சீனாவில் இருந்து கிடைக்கிறது. அடுத்ததாக அதிக அளவில் தேயிலையை உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உள்ளது. இந்த வரிசையில் மூன்றாவது இடத்தில் கென்யாவும் நான்காவது இடத்தில் இலங்கையும் உள்ளன.

வருடாந்தம் 350 மில்லியன் கிலோ தேயிலையை இலங்கை உற்பத்தி செய்கிறது. தேயிலை உற்பத்தித்துறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 20 இலட்சம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாட்டின் வருமானத்தைத் தேடித்தரும் ஐந்து முக்கிய ஏற்றுமதிப் பொருட்களில் தேயிலையும் ஒன்றாகும். ஆயினும் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் தேயிலை மூலமே கூடுதலான செலாவணி பெறப்பட்டது.

இலங்கையில் தேயிலைச் செய்கை இன்று பல்வேறு சவால்களைச் சந்திக்க வேண்டியிருப்பதாலேயே இந்த சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

**1. தொழிலாளர் பற்றாக்குறை**

இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் இந்திய வம்சாவளி தமிழர்களின் சம்பளப் பிரச்சினை நீண்டகாலமாக இருந்து வருகிறது. இதன் காரணமாக இத்தோட்டங்களில் உள்ள இளைஞர்கள், யுவதிகள் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதை விரும்பாமல் நகரங்களுக்குத் தொழில் தேடிச் செல்கின்றனர். இதனால் தோட்டங்களில் ஏற்படும் தொழிலாளர் பற்றாக்குறை தேயிலைத் தோட்டங்களின் உற்பத்திச் செயற்பாடுகளுக்கு பெரும் தடையாக உள்ளது.

**2. தேயிலை மீள்செய்கை**

தேயிலை மீள் பயிரிடலில் போதிய அக்கறை செலுத்தப்படுவதில்லை.
அதிகளவான நிலங்கள் சுரண்டப்படுவதைக் காணலாம்.

3. களைக்கொல்லி பாவனை

களைக்கொல்லிகள் விடயத்திலும் குழப்பநிலை நீடிக்கிறது.

ஆகியவை தேயிலைச் செய்கை எதிர்நோக்கும் சவால்களில் சிலவாகும். எனவே, தேயிலை தொடர்பான இழந்த பெருமையை மீட்டெடுக்க இத்துறையில் இடம்பெறும் சவால்களை வெற்றிகொள்வது அவசியமாகும்.

இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியது இப்போது அவசியமாகவும் அவசரமாகவும் உள்ளது. உலகில் ருசியான தேயிலை இலங்கைத் தேயிலைதான் என்ற பெருமையை நாம் தக்கவைத்துக் கொள்வதற்கு மேற்கூறிய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

**ஜீனா நபீஸ்**
**இலங்கையின் தென்கிழக்கு பல்கலைக்கழகம்**



# இலட்சியப் பயணம்

இன்னல்களை கண்டு
இலட்சியங்களை இழக்காதீர்கள்..

விலைக்கு வரும் ..
விமர்சனங்களை புறக்கணித்து ..
வாழ்வில் பயணி ..
இலட்சியத்தை அடைய..

அவமானம் உனை துரத்தும்..
அவமதிப்பு உனைத் மிரட்டும்..
ஏக்கங்கள் வினாத் தொடுக்கும்..
சரிவுகள் புராணம் பாடும்..

அதற்காய் கனாக்களை கலைக்காதீர்கள்..
ஏழனங்கள் காலத்தின் கோலமெனக் கடந்து
செல்லுங்கள்..

வீழ்ச்சிகள் விதியின் விளையாட்டென ஏற்றுக்
கொள்ளுங்கள்..
தோல்விகள் சதியின் சக்கரமென சுழற்றி
விடுங்கள்..

துயரங்கள் வாழ்வின் யதார்த்தமென தூக்கி
எறியுங்கள்..
ஏமாற்றங்கள் உயர்வின் படிகளென கடந்து
விடுங்கள்..

ஆயிரம் தடைகள்
தீர்வற்ற கேள்விகளாய்.. இருந்தாலும்..
ஆழ் மனதில் பதியுங்கள் நம்பிக்கை
விதையை..

இலட்சியப் பயணத்தை
இன்றே தொடருங்கள்..
வெற்றிகள் தஞ்சமடையும் தருணமது..
வெகு தூரமில்லை..

**சிம்லா ரசீம்**
**குருநாகல்**

# பகுதி ஒன்று

உன் இசைக்குள்
விழுந்த
பாடல் – நான்!

என் முகத்தால்
நீ பாடுகிறாய்

என்னை அர்த்தப்படுத்தி
நீ மறைந்திருக்கிறாய்

இரு கடல்கள்
சங்கமிக்கும்
திரைக்குள்ள தூரம்
நம் சந்திப்பு

நீ மயக்கும்
மதுக்கோப்பையோடு வந்து
என்னை நிரப்பிக்கொள்கிறாய்
மேலும்
உன் வெற்றிடத்துக்குள்
என்னை சிம்மாசனமாக்குகிறாய்

எவன் கையில்
என் புல்லாங்குழல் உள்ளதோ
அவன் உதடுகளில்
என் பாடல்
இசையாய் கரையும்

# பகுதி இரண்டு

பாடல் விழுந்த இடங்களிலெல்லாம்
இசை முளைக்கிறது

இசை விழுந்த இடங்களிலெல்லாம்
பாடலின் சத்தம்

ஒற்றென விழுவதற்கு
இங்கு
இடமுமில்லை
காலமுமில்லை
காதலைத் தவிர!

காற்று
நோன்போடு காத்திருக்கிறது
சுமந்து செல்வதற்கு!

## ஏ.எம்.எம். ஜாபீர்



# வறுமையின் அழுகை...!!

எங்கள் பசி தீர்க்க
என் தகப்பன்
வெளியில் செல்ல
மடக்கிப்பிடித்து
மண்டியிட்டு
முடக்கப்பட்டு
முழங்கால் தெரிய
வீதியில் வைத்து
விரட்டியது யார்...

ஒடுக்கப்பட்ட வறுமையால்
இப்போதும் முடக்கப்பட்டு
உள்ளோம் வீட்டில்..!!

எடுக்கப்பட்ட கொள்ளி கூட
அடுப்பங்கரை போக வில்லை..

ஏதோ விசம் ஒன்றாம்
அது
ஏழையின் வறுமைக்கு
எளிதாக வருமாம்
பட்டினி நீக்கிடாது
பழி தீர்த்துப் போகுமாம்..

எங்கிருந்து வந்த
விசத்துக்கு
இவ்வளவு இறுமாப்பா..!!

ஏழை நாங்கள்
வீட்டில் இருந்தா
உணவு கூட கிடைக்காது

அதனால் என் தகப்பன்
வெளியில் செல்ல
யாரோ பிடித்து
அடித்தவர் யாரோ..!!

ஏழைகளுக்கும்
அழுகை இருக்கிறது
இதை ஏற்றுக் கொள்ளுங்கள்
ஏளனம் செய்யாதீர்கள்..!!

வறுமையிலும்
வாழுது இன்று
வாழ்க்கைகள் பல

வீதிகள் உறங்கி
கன நாளாச்சி
வீடுகள் முடங்கி
முழு நாளாச்சி..!!

வீதி சென்று வந்த
வறுமைக்கு
இன்று வீதியோரம்
செல்ல முடியவில்லை..!!

ஏதோ ஒரு இடத்தில் இருந்து அலறல் சத்தம்
என் காதில் கேட்டது அதை நினைத்து இந்த
வரிகளை பதிக்கின்றேன்..



## கவிதை வரிகள்
## சாந்தீபுணையூர் சியான்



# மகிழ்வான நாட்கள்

"அம்மா.. நாளைக்கு முத முதலா ஸ்கூல் போறேன் பயமாருக்குமா.. எப்படி இருக்குமோ..." என்ற மகளின் வார்த்தைகளைக் கேட்ட நான் என் மகளின் ஊடாக என் பள்ளி நாட்களுக்குள் மீண்டும் மாணவி வடிவில்.

பனித் தூரல் மெல்லென தரணி தொடும் நேரம். என் யாக்கையை வருடிச் செல்லும் என் தோழி தென்றலின் வரவால் நான் துயில் நீங்கி எழுந்திடும் நாட்கள் அது. என்னை ஓரக் கண்ணால் ரசித்திட என் அறைக்குள் நுழையும் பகலவன் கதிர்களை ரசித்திட்ட நாட்களும் அதுவே தான்.

பாடசாலை பேரூந்து முச்சந்தியினால் வரும் போதே "பீப்.. பீப்.. பீப்..." என ஒலி எழுப்புகிறது. அது வேறு யாருக்குமான சமிக்ஞை இல்லை. எனக்கே எனக்கானது தான். பாவம் பேரூந்து சாரதி. கல்வியில் ஆர்வமான பிள்ளை காலையிலேயே படித்து விட்டு பாடசாலைக்கு தயாராகுவதற்கு சற்று தாமதிக்கிறது. என எண்ணிக் கொண்டு உதவியாய் தான் வருவதை சமிக்ஞை செய்கிறார்.

சோம்பேறிகளின் தலைவி நான் என்பது அவருக்கு தெரியாது. "சங்கீதா.. எழுந்திரு. அங்க ஹோர்ன் சவுன்ட் கேக்குது பாரு. எழுந்திரு.. உன்ன மாதிரி பொண்ணு யாரும் இல்ல. இவ்ளோ நேரம் தூங்கின பத்தலயா.. எழுந்து வாரியா இல்ல வந்து ரெண்டு போடட்டா? நல்லா.." என எப்போதும் போல என் அம்மாவின் கச்சேரி தொடங்கி விட்டது.

புத்தகத்தை எடுத்தாலே தூங்கிடும் தூங்கும் அழகி தான் நான் என்று கூட கூறிடலாம். இதனால் தான் பல நாட்கள் பாடசாலைப் பேரூந்தை தவற விட்டு நடையாகவே பாடசாலை செல்வேன். அதனால் தான் அம்மா எப்போதும் காலையிலேயே கச்சேரி செய்கிறார்.

"சரிம்மா.. வாரேன் வாரேன்" எனக் கூறியவாறே இன்னும் தூக்கத்தில் நான். பேரூந்தும் வீட்டு வாசல் வந்து விட்டது. என் அறையை நோக்கி வரும் அம்மாவின் காலடிச் சப்தம் என் செவிகளில் சாய்ந்திட ஓடுகிறேன் குளியலறைக்குள்.

"சங்கீதா இன்னும் நீ ரெடியாவாம பாத்ரூம் ல என்னடி பண்ணுற. பதினாறு வயசுப் பொண்ணு மாதிரியா நடந்துக்குற. இன்னக்கிம் நடந்தே போ... ஸ்கூல் ரொம்ப பக்கத்துல பாரு.." என சில ஆதங்கமும் நக்கலும் கலந்து அம்மா பேசிவிட்டு செல்கிறார். பேரூந்தும் செல்லும் சப்தம் கேட்கிறது.

எனக்கு எவ்வித கலக்கமும் இல்லை. அமைதியாக தயாராகிய நான் பாடசாலைக்கும் நடையாகவே சந்தோஷத்துடன் செல்கிறேன். இரு பக்கமும் பனியால் மூடிய வயல் வெளிகளின் அழகை இன்றும் என் கயல் விழிகளுக்கு அர்ப்பணம் செய்கிறேன். பட்சிகள் சில எனக்குத் துணையாக என்னைத் தொடர்கின்றன.

என் மனதிலும் மாசில்லை வெண் ஆடையிலும் மாசில்லை. என் பள்ளியைச் சென்றடைந்து விட்டேன். "என்னடி.. இன்னக்கிம் பஸ்ஸ விட்டுடியா..." என ஒரு ஏழனத் தொனியில் உடைத்து வைத்த தேங்காயின் வெண்மை தாங்கிய அவளின் பற்கள் தெரிய சிரிக்கிறாள் பிரியா.

எதுவும் பேசாமல் சிலையென ஒரு கனம் அவள் முன் நின்றிருந்த என் மனதிற்குள் "கல்லெடுத்து மண்டய ஒடச்சா என்னா...? வந்துடால் சிரிக்க இரிடி உனக்கு வெக்கிறேன் ஆப்பு.." என்று புலம்பிக் கொள்கிறேன். அது தெரியாத பிரியா மீண்டும் "என்ன பலத்த யோசனயோ.." என இழுக்கிறாள்.

"ஒன்னுமில்ல சும்மா தான்" என்று கூறிக் கொண்டே என் சிந்தையில் இருந்ததை எண்ணி சற்று பலமாகவே சிரிக்கிறேன். கடிகாரம் சுழல பாடத்திற்கு வகுப்பறை நோக்கி ஆசிரியர் புவனா வருகிறார். வகுப்பறையினுள் நுழைந்த மறுகனம் மாதிரிக் கணிப்பீடு என ஒரு குண்டைத் தூக்கி எல்லோர் தலையிலும் போடுகிறார்.

"ஆகா இன்னகி யாரும் படிச்சிட்டு வந்திருக்க மாட்டாங்க. எப்பவும் நான் எப்படி கணிப்பீடுகள்ட விட எழுதுவெனோ அப்டி தா எல்லோரும்" என மனதிற்குள் மகிழ்ந்து கொண்டேன். கடவுளின் கருணையில் வகுப்பறையில் படித்ததை வைத்தே பரீட்சையைக் கூட வெற்றிகரமாக எழுதிடும் திறமை இருந்தது எனக்கு. இதனாலேயே எப்போதும் அதிக புள்ளிகளைக் குவித்துக் கொள்வதும் நானே.

"அடி வயித்த கலக்குதுடி டீச்சர் சொன்னத கேட்டு" என்று புத்தகப் பூச்சி சுவாதி கூறுகிறாள். "இதுக்குத்தான் அப்பவே சொன்னேன் எப்ப பாரு புத்தகத்த கரச்சி குடிக்காதன்னு" என அவளுக்கு என் தொணியில் பதிலளிக்க வகுப்பறையே "கல கல" வெனச் சிரிக்கிறது. நேரம் ஓடிட ஆசிரியரும் வெளியே செல்கிறார். "அட்றறட்றா நாகுமுக்கா நாகுமுக்கா.." என கௌதம் தன் வாயை திறக்கிறான். வகுப்பே சந்தைக் கடையாய் மாறுகிறது. நானும் என் இரு தோழிகளும் "வாங்கடி சாப்புடலாம்." என கீதா. "ஆமா எனக்கும் பசிக்குது" என்கிறாள் மொனிகா. "ஓகே ஓகே பட் டுடே சாப்பாடு மறந்து எடுத்து வரல டி நான். பரவல்ல உங்க சாப்பாடு இருக்குல" எனக் கூறுகிறேன்.

என் தோழி இருவரும் "அடி சங்கீதா உன்ன நம்பி இருந்தா இப்படி சொல்றியே... நாங்களும் கொண்டு வரல." என சற்றே கவலையில் கூறிட "இரு சாப்பாட்டோட வாரேன்" எனக் கூறுகிறேன். மறு கனமே பிரியாவின் சாப்பாடு என் கையில். மோனிகா பயத்தில் "அடி என்ன பண்ணுற. அந்த பெசாசுக்கு தெரிஞ்சா ஒரு ஆட்டம் ஆடிடும்." எனக் கூறி முடிக்கும் முன்னரே நானும் கீதாவும் சாப்பிட்டுக் கொண்டே "அடி நூடில்ஸ் செம்ம டேஸ்டா இருக்குல்ல" என கூறுகிறோம். வேறு வழியின்றி மோனிகாவும் சாப்பிடுகிறாள்.

இடைவேளை நேரம். பிரியா சாப்பிட தன் உணவை பார்கிறாள். அதிர்ச்சியில் "என்ட நூடில்ஸ்ஸ காணும்.." என கத்துகிறாள். என் வாய்த் துடிப்பு "ஆஆ.. காக்கா தூக்கி போயிடுச்சி.. வடய காணும் நூடில்ஸ்ஸ காணும்ணு வந்துட்டா.. போய் போலிஸ் டேஷன்ல கம்ப்லேன் பண்ணு" என நக்கலும் நையாண்டியுமாய் கூறி சிரிக்கிறேன். என் தோழிகளோ பயத்தில் தவிக்கிறார்கள்.

மோனிகாவின் காதலன் வகுப்பறைக்குள்ளே இருக்கும் சகபாடி அர்ஜுன் மோனிகாவை அழைக்கிறான். "எதுக்கு இப்போ அவள கூப்பிடுற" என காரசாரமாய் நான் கேட்க "உன்ன கூப்பிடல பிசாசு. நா மோனிய கூபிட்டது புரியல" எனக் கேட்கிறான் அந்த ஆணதிகாரம் பிடித்த மூதேவி. அவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. காதலன் என்ற முகமூடி போட்டு மோனிகாவை

அதிகாரம் செய்வதும் பிடிக்க வில்லை. இதனாலேயே காதலையும் வெறுக்கிறேன்.

மோனிகாவிடம் அர்ஜுன் "ஹேய் அந்த பிசாசு கூட சேர்ந்து பிரியா சாப்பாட்ட எடுத்தியா? எனக்கு சங்கீதா தான் இத பண்ணதுன்னு தெரியும். நீயும். ஆ.. சொல்லு" என அதட்டினான். அவளோ பாவம் அப்பாவி பேசாமல் நிற்க அவன் கோபத்தில் அவளை அடிக்கிறான். "பலா..ர்" என்ற சப்தம் என் காதுகளில் விழுந்த மறு கனம் அவன் கன்னதை என் கைகளும் சற்றும் சிந்திக்காமலேயே பதம் பார்க்கிறது.

அவமானத்தில் யாரிடமும் நடந்ததை அவன் கூறிட வில்லை. மோனிகா அந்த நொடியே அவனை மறக்கிறாள். இவ்வாறு என் வாழ்கை என் விருப்பப் படி இன்பத்தில் நகர்கிறது அதில் எவ்வித அச்சமும் இல்லை. வேடிக்கைக்கும் குறைவில்லை.

பள்ளியின் முன் ஒரு மாந்தோப்பு கண்ணைக் கவர்ந்திலுக்கிறது தினம் தினம். அதையும் இன்று சுவைத்திட வகுப்பறைத் தோழிகள் சேர்ந்து மெல்ல பள்ளி நேரத்திலேயே தோப்பினுள் நுழைகிறோம். இதைக் கவனித்த அதிபர் பள்ளிக்குள் வந்த மறு கனம் எம்மை நோக்கி "கள்ள மாங்கா டேஸ்டா இருக்கா.. அட வான்டுகளா.. இப்பவே பிச்ச மாங்காயெல்லாத்துக்கும் பணத்த தோட்டத்து சொந்தக்காரருக்கு கொடுக்கனும். இல்ல.. இருந்த மரத்துகல்டயே ஒட்டனும். என்ன பன்ன போறீங்க" என சிங்கத்தைப் போல கர்ச்சிக்கிறார்.

அர்ஜுனுக்கு இன்பம் முகத்தில் பரவி இருக்கிறது. காரணம் எல்லா சேட்டைகளுக்கும் சொந்தக்காரி நான் தானே. இப்போது முதல் தடவையாக மாட்டிக் கொள்ளப் போகிறேன். என்ற இன்பம் அவனுக்கு. என் மனதிற்குள் "மரத்துல ஏறி மாங்கா பறிச்சப்போவே சாப்புட்டுட்டேனே. பின்ன எப்படி மாங்காய ஒட்ட" என எண்ணுகையில் என் இதழ்கள் மெல்ல புன்னகைக்கிறது.

இவ்வாறு தினம் தினம் சேட்டைகளே செய்து எல்லோருடனும் செல்லச் சண்டைகள் போட்டு அம்மாவின் அன்பான பேச்சுடன் ஏச்சும் கலந்த காலையை அனுபவித்து இடையே பெண்ணுரிமை நட்பு என துணிந்து கரம் தூக்கிய நாட்கள் மின்னலாய் மறைந்து பள்ளியின் கடைசி நாளில் கால் பதிக்கிறேன்.

"என்னமா எப்பவும் கல கலன்னு இருப்ப இப்ப இப்படி கண்கலங்கி ஒரு இடத்துல உக்கார்ந்துட" என அன்பான வார்த்தைகளோடு என் அருகில் அமர்கிறார் புவனா ஆசிரியர். "இவ்ளோ நாள் புரியல எல்லாம் ஜோக்கா இருந்துது இப்போ எல்லாரயும் பிரியுரத நெனச்சா முடியல எல்லார் கிட்டயும் மன்னிப்பு கேக்கனும் நா நெரய பேர கஸ்டப் படுத்திடேன்" என கண்ணீர் வடிக்கிறேன்.

"அம்மா..அம்மா.. என்ன யொசிக்கிற" என என் மகள் கன்னத்தை செல்லமாக தட்டிட அனைத்தும் கடந்த காலம் என்று உணர்கிறேன்.

அன்றைய பாடசாலை நாட்கள் கண் முன்னே என்றும் மகிழ்வான நாட்களாக நிகழ்காலத்திலேயே என் மனதில் என்றும் நிலைத்திருக்கிறது. அவ்வாறு தான் பலர் வாழ்கையிலும் அதுவே மகிழ்வான நாட்களாய் அமைந்தது.

"அன்பு மகளே! உன்ட வாழ்கைல நாளைக்கு தொடங்கும் இனிய ஸ்கூல் வாழ்க்க மகிழ்வான நாட்களாய் அமையும்."

**வரித் துளிர்களின் சொந்தக்காரி**
**றபீஉல் - நேகம (அநுராதபுரம்)**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**



# யாவும் நான் கேட்பேன்...!!!

இதயம் வேண்டும் வரங்கள்
யாவும் இறைவனிடம் யான் கேட்பேன்...!!!
வேசமில்லா நேசம் கேட்பேன்
மாசு இல்லா உறவுகள் கேட்பேன்

ஆசையில்லா உலகம் கேட்பேன்
எதிர்ப்பார்ப்பில்லா வாழ்வு கேட்பேன்
சோகமில்லா தனிமை கேட்பேன்
நீடிக்கும் ஆயுளைக் கேட்பேன்

தோழ் கொடுக்கும் நட்பு கேட்பேன்
தோல்விகளில்லா வெற்றிகள் கேட்பேன்
புன்னகைக்கும் உதடுகள் கேட்பேன்
கண்ணீரில்லா விழிகள் கேட்பேன்

தூக்கிவிடும் கரங்கள் கேட்பேன்
என்றும் மாறா இளமை கேட்பேன்
சாரல் மழையில் நனையக் கேட்பேன்
வானவில்லின் கோலம் கேட்பேன்

மதிமயக்கும் மதியைக் கேட்பேன்
தொட்டுச் செல்லும் தென்றல் கேட்பேன்
இன்னிசை குயிலின் இசையைக் கேட்பேன்
மணக்கும் மல்லிகை வாசம் கேட்பேன்

வியக்கும் இயற்கை மடியைக் கேட்பேன்
எனக்காய் விடியும் நாளைக் கேட்பேன்
எழுத்துலகில் என் கவிகளும் வலம்வரக் கேட்பேன்

**றிஸ்லா ரஸீம்**
**குருநாகல்**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**




# கொஞ்சம் திருந்துங்கள்

நியாஸ் பரீட் (சிராஜி )

மலையாள மொழி திரைப்படமான இது இம்மாதம் 15ஆம் தேதி வெளியானது. இயக்குநர் ஜோ பேபி இயக்கியிருக்கும் இந்த சினிமாவானது Neestream தளத்தில் வெளியாகியிருக்கிறது.

இதற்கு ஒளிப்பதிவு செய்திருக்கிறார் சலு கே தாமஸ். 100 நிமிடங்கள் மட்டுமே ஓடக் கூடிய இந்த சினிமா இந்தியப் பெண்களின் நூற்றாண்டுகால வலியை பேசுகிறது. சூரஜ் வெஞ்சரமுடு, நிமிஷா சஜயன் ஆகியோர் நடித்திருக்கும் இத்திரைப்படம் தற்போது சமூக வலைதளங்களில் மிகப்பெரிய விவாதத்தை உருவாக்கியுள்ளது

தாத்தா பாட்டியை அதிகாரம் செய்தார். தனக்கு வேலை செய்யும் அடிமை போல நடத்தினார். அப்பா தன் தாயிடம் அதுபோலவே நடந்து கொண்டார். இவற்றை பார்த்து வளரும் அடுத்த தலைமுறையும் அதனை பின் தொடர்கிறது. இந்திய ஆண்களைப் பொறுத்தவரை அவர்கள் திருமணம் செய்து கொள்வதென்பது தன் உள்ளாடையை துவைக்க ஒரு ஆள் தேவை என்பதற்காகவே என்பது போலொரு பார்வையை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போலச் சொல்லியிருக்கிறது தி கிரேட் இண்டியன் கிச்சன்.

இந்த சினிமாவைப் பார்க்கும் ஒவ்வொரு இந்திய ஆணும் ஏதோ ஒரு இடத்தில் குற்ற உணர்ச்சிக்கு ஆட்படுவார். தன் வீட்டுப் பெண்களை இது வரை பார்த்து வந்த அவர்களின் கோணமே மாறும்.

நிமிஷாவின் மாமனாராக வரும் பெரியவர் இந்தியாவின் அசல் ஆணாதிக்க முகம். ‘குக்கர்ல சோறு வச்சா பிடிக்காது. வாஷிங் மெசின்ல துவச்சா துணி கெட்டுப் போகும். மாத விலக்கு காலங்களில் பெண்கள் இப்படித்தான் நடக்கனும்’ என நிமிஷாவுக்கு உளவியல் நெருக்கடி தரும் அந்தப் பெரியவர் தினம்தினம் பெண்கள் சந்திக்கும் அனைத்து பிரச்னைகளின் உதாரண முகம்.

““நாங்களும் சமைக்கிறோம், வீட்டு வேலைகள் செய்கிறோம், குழந்தைக்கு டயப்பர் மாட்டுகிறோம், ஷாப்பிங்கில் ஹேண்ட்பேக்கை சுமக்கிறோம், இவ்வளவு உதவிகள்(?!) செய்தும் இந்த பெண்களுக்கு நன்றியே இல்லையே!” என்று ஆண்களை புலம்பவிட்டிருக்கிறது தற்போது ட்ரெண்டிங்கில் இருக்கும் மலையாள திரைப்படம் 'The Great Indian Kitchen'.

The Great Indian Kitchen-ல் படம் முழுக்க பெண்கள் சமைத்துக்கொண்டே இருக்கிறார்கள். சமையல், வீட்டு வேலைகள், கலவி என வீட்டுக்குள் பெண்கள் கேட்கும் சத்தத்தையும் அவர்கள் உணரும் மணத்தையும் திரைமொழியாகக் கொண்டு மிக அழுத்தமாக உருவாக்கப்பட்டிருக்கும் படம் இது. உணவை முக்கியமாக கருதும் நம்மூரில், சமையலை ஒரு வேலையாக, தொழிலாக அல்லாமல் உணர்வுகளுடன் கலந்து ரொமான்ட்டிசைஸ் செய்வது பெண்களை உணர்வுப்பூர்வமாக அடிமையாக்கி கொண்டிருக்கிறது என்பதை முக்கிய கருவாகப் பேசுகிறது படம்.
ஆயு படித்திருக்கும் மாமியார் தன் கணவருக்கு பிரஷ்ஷில் பேஸ்ட் வைத்துக் கொடுப்பதிலிருந்து, வெளியில் போகும்போது செருப்பு எடுத்துக் கொடுக்கும்வரை “பணிவிடைகள்” செய்கிறார். புது மருமகளும் அதே வேலைகளை செய்யவேண்டும் என்பதை இயல்பாக அந்த குடும்பம் அப்பெண்ணின் மேல் திணிக்கிறது. ஆரம்பத்தில் நம்முடைய குடும்பம்தானே என்றெண்ணி வேலைகளை செய்யத் தொடங்கும் அவள் ஒருகட்டத்தில் தான் அக்குடும்பத்தில் ஒரு பணியாளாக மட்டுமே இருப்பதையும், தன்னுடைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரம் பறிக்கப்பட்டிருப்பதையும் உணர்கிறாள். அவள் மேற்கொண்டு என்ன செய்கிறாள் என்பதுதான் படத்தின் முடிவு. தினசரி வீட்டில் பெண்கள் செய்யும் வேலைகளும், ஆண்களின் பங்கு என்ன என்பதும்தான் காட்சிகள்.

படத்தை பார்த்ததும் சொல்லி வைத்தாற்போல் அவ்வளவு ஆண்களும் இது 1980-களின் படம், தமிழ்ச்சமூகம் இப்படி இல்லை, இப்படிப்பட்ட குடும்பங்கள் இந்த கிரகத்திலேயே கிடையாது, இது விசு காலத்து சினிமா, #NotAllMen என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். விசு காலத்தை விடுங்கள். 2018-ல் வேலைக்குச் செல்லும் மனைவி,

வீட்டையும் குழந்தைகளையும் கவனித்து கொள்ளும் 'ஹவுஸ் ஹவுஸ்பண்ட்' என்பதை கருவாக வைத்து 'ஆண் தேவதை' என்றொரு படம் வந்தது. ட்ரெய்லரே பெரிய சலசலப்புகள் ஏற்படுத்தியது. இந்த ஒரே படத்தில் தமிழ்ச்சமூகமே மாறிவிடும் என காத்திருந்தோம். ஆனால் படம் ஆண்தான் சம்பாதிக்க வேண்டும், பெண்ணுக்கு குடும்பத் தலைவராகும் தகுதி இல்லை என்ற தீர்ப்போடு முடியும் வழக்கமான Cringe ஆக இருந்தது. ஆண் தேவதை போன்ற க்ளீஷேக்களை கொண்டாடிய தமிழ்ச்சமுகத்தினால் 'The Great Indian Kitchen' போன்று அசலான திரைப்படங்களை எதிர்கொள்ள முடியுமா என்பதே கேள்வி!

ஒரு உரையாடலை தொடங்குவதற்கு முன்னால் முன்முடிவுகளுடன் அந்த விஷயத்தை அணுகுவது ஆண்களுக்கே உரிய குணமா என சந்தேகம் கொள்ளும் அளவு விமர்சனங்களையும், கேலிகளையும் பெற்றிருக்கிறது The Great Indian Kitchen. இவர்களுக்கு கொஞ்சமும் சளைக்காமல் "ஆமாஞ்சாமி" போடும் பெண்களையும் காண முடிவது காலக்கொடுமை! அது மட்டுமல்ல இந்த பெண்ணடிமைத்தனத்தை பாரம்பரியம் என்று வேறு சொல்லி நம்மை அசரடிக்கிறார்கள். "சில" வீடுகளில் ஆண்கள் வேலைகளை பகிர்ந்து கொள்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. இங்கே விதிவிலக்காக இருப்பவர்களுக்கு வாழ்த்துகளை சொல்லிவிட்டு பெரும்பான்மையினரின் பிரச்னையைப்பற்றி கொஞ்சம் பேசலாம்.

பெண்களுக்கென்று தனிப்பட்ட ஆசைகள், வாழ்க்கை முடிவுகள் இருக்கக்கூடாது. ஆண் பெண்ணைவிட உயர்ந்தவன் என்பதால் அவனுக்கு பணிவிடைகள் செய்வது, வீட்டை கவனிப்பது, குழந்தை வளர்ப்பது எல்லாம் பெண்களின் பொறுப்பு எனும் பாரபட்சமான விதியை பாரம்பரியமாக கொண்டதுதான் இந்திய குடும்ப அமைப்பு. ஆனால், ஆண், பெண், திருநர் என யாராக இருந்தாலும் சுயமரியாதையை விட்டுக்கொடுத்து அன்பின் பெயரால் அடுத்தவர் தேவைக்காக உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகக்கூடாது என்பதுதான் படம் சொல்லும் செய்தி. அம்மா அம்மியில் அரைத்ததையும் மனைவி மிக்ஸியில் அரைப்பதையும் ஒப்புமைப்படுத்தி, "இன்றைய பெண்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறோமே, இன்னும் என்ன?" என்கிறார்கள் ஆண்கள்.

எதில் அரைப்பது என்பதில் இருந்து சமைப்பதா, வேண்டாமா என்பதுவரை அந்த பெண்களே தீர்மானிப்பதுதான் குடும்பத்திற்குள் சம உரிமை. ஆனால் அதைப்பற்றிய உரையாடல்கள்கூட நம் குடும்பங்களில் சாத்தியம் இல்லை என்பதைத்தான் படம் பேசுகிறது. தம் வீட்டு பெண்களுக்கு தாம் சுதந்திரம் கொடுத்திருப்பதாக ஆண்கள் சொல்லுவதே வேடிக்கையாக இருக்கிறது. பெரும்பாலும் எல்லோருமே "நானும் வீட்டு வேலைகளில் உதவுகிறேன்" என்கிறார்கள். ஐயா, அது உதவுதல் அல்ல, வேலைகளைப் பகிர்தல்!

இவர்களிடம் எஸ்கேப் ஆனாலும், அடுத்து "பெண்கள் தங்கள் மகன்களை சரியாக வளர்க்கவேண்டும்" என்று பெண்கள் தலையில் Additional Baggage ஏற்றும் குரூப்பிடம் சிக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மீண்டும் பிள்ளை வளர்ப்பு பெண்களுக்கு மட்டுமேயான பொறுப்பு என்பதைதான் குறிப்பிடுகிறார்கள். குடும்பத்தினுள் எல்லோருக்கும் சமமான உரிமையும், மரியாதையும் இருந்தால் குழந்தைகள் தாமாகவே அதை கற்றுக் கொள்ள மாட்டார்களா?
அதே சமயம் பெண்களின் கையில் சமையலறை அதிகாரம் உள்ள வீடுகளில் "வலியது வாழும்" கோட்பாட்டினால் ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகளிடத்தில் (இரண்டுமே ஆண் குழந்தைகளாக இருந்தாலும்கூட) உணவுப் பாகுபாடுகள் காட்டும் பெண்களும் நம்மிடையே உண்டு.

இது இந்திய சமையல் அறைகளை பற்றிய பதிவாக இருந்தாலும் பெண் இனத்தின் சுதந்திரம் பெண் அடக்குமுறை எங்கு போனாலும் அது இந்தியாக இருந்தாலும் சரி இலங்கையாக இருந்தாலும் சரி எந்த மதமாக இருந்தாலும் சரி பெண் என்பவள் அவளின் உரிமைகள் மறுக்கப்பட்டே வருகிறாள்.

குடும்பங்களுக்கு சேவை செய்யும் ஒரு இயந்திரமாகவும் சமூக கட்டமைக்குள் தன்னை உரு மாற்றிக்கொண்ட ஒரு சுய சிந்தனை அற்ற பொருளாக அவள் வாழ்கிறாள்.ஆனால் அவளை சமூகமும் மதத்தின் பெயரால் குள்ளா அணிந்து தன்னை மத காப்பாளர்களாக காட்டிக்கொள்ளும் மத தலைவர்களும் அவளுக்கான உரிமைகளை கொடுப்பதில் முட்டுக்கட்டையாக உள்ளனர்.

அவளது கலவித் தேவைகளைக்கூட கேட்டு பெற்றுகொள்ள முடியாது தவிக்கிறாள் அவ்வாறு அவள் மனம் திறந்து கேட்டுவிட்டால் அவள் கெட்டவளாகவும் ,அசிங்கபடுத்தப் பட்டவளாகவும் நிக்கிறாள்.

ஃபேஸ்புக்கில் ஜெசிந்தா ஆர்டனையும், ஷைலஜா டீச்சரையும் பார்த்து "Women should rule the World" எனப் புல்லரித்து Transitional period-I கொண்டாடும் அத்தைகளும், சித்திகளும் சொந்த வாழ்வில் ஐம்பது வயதை தொட்டதும், "கடைசி காலத்துல யார் பார்த்துக்குவாங்க" என அச்சப்பட்டு மகன்களை சார்ந்திருக்க ஆரம்பிக்கின்றனர். ஒரு ஆணை சார்ந்து வாழ்வதே பெண்ணுக்கு சமூகத்தில் மரியாதையும், பாதுகாப்பும் கொடுக்கும் என்கிற அபத்தமான புரிதல் நன்கு படித்த, சுய சம்பாத்யம் உள்ள பெண்களிடையேகூட உண்டு.

பேரிடர்கள், போராட்டங்களின் போது உருவாகும் கம்யூனிட்டி கிச்சன்களைப் பார்த்து பொது சமயலறை முறைக்கான சாத்தியக்கூறுகள் பற்றி அலசி ஆராய்கிறோம். பின் நடைமுறைக்கு ஒத்துவராது என்கிற வாதத்தோடு அது முடிவுக்கு வந்துவிடுகிறது.

'தி கிரேட் இண்டியன் கிச்சன்' படம் பார்த்த பிறகு நீங்கள் அலுவலகத்துக்கு தினமும் எடுத்துவரும் டிபன் பாக்ஸை குறைந்தபட்சம் கழுவி சுத்தம் செய்துவிட்டு வீட்டுக்கு எடுத்துச் சென்றால் அதுவே இப்படத்துக்கு கிடைக்கும் குறைந்தபட்ச வெற்றி. ஆனால் ரொம்ப நாள்களுக்கு நாம் குறைந்தபட்ச வெற்றி எனும் புள்ளியில் நின்று கொண்டிருக்காமல் முழுமையாக மனிதத் தன்மையுடன் மாறுவது முக்கியம். ஆணாதிக்க சிந்தனையில் இருந்து விடுபடுவது அவசியம்



# மகரந்தமேந்தா மலர்

கடுகு தாளித்துக் கொட்டிய பின்
தனியாக வெங்காயம், தக்காளி...
அதுவும் சின்ன வெங்காயம்
இல்லையெனில் இரவுணவு வரை

இடித்துக்காட்டிக் கொண்டே இருப்பர்...
ஞாயிற்றுக் கிழமை வேறு...
சிக்கன் வறுத்துக் கொட்டாவிட்டால்
என்னை வறுத்தெடுத்துக்

குழம்புச் சட்டிக்குள்
குப்புறக் கவிழ்த்து விடுவார்கள்...
நான் இவ்வீட்டின் வேலைக்காரி
என்றுதானே நினைக்கிறீர்கள்...

அதுதான் இல்லை, மூன்று பெண்களில்
மூத்தவள் நான்... அண்ணா இருவர்...
அம்மாவின் உடல்நலம்
முழுதாய்க் குன்றிய பின்

தோன்றியது என் சமையல்காரி
வகிபாகம்...
யாரையும் குறை சொல்வதற்கில்லை...
கடையிற் தின்றவர்களின்

முகச் சுளிப்பைப் பார்த்து
நானாகத் தேர்வு செய்து
கொண்டதுதான்...
சுயநலமும் இல்லாமலில்லை...

விரும்பியதை சமைத்துத் தின்றால்தான்
என் குடல் அடங்கும் உடல் உறங்கும்...
கடையிற் தின்ற காலங்களில்
இரவிரவாக வயிற்றுக்குள்

சிறுகுடலும் பெருங்குடலும்
தீப்பந்தமேந்தி கண்ட இடங்களில்
தீவைத்துத் திரிந்திருக்குமோ என்னவோ...

மேனி முழுதும் ஒவ்வாமைக் கொப்புளங்கள்...

கல்லூரி கிடைத்தும் போகவில்லை...
புகுந்த வீடு புகும் வரை
அடுக்களை புகுந்திருப்போம்
என்றெண்ணி ஆரம்பித்தது...

அதுவே கல்லூரியும் ஆனது...
சமையற்கலையில் பட்டமும்
பெற்றாகி விட்டது...
என்கூடப் பிறந்தவர்களுக்குத்தானே

வடித்துக் கொட்டுகிறோம் என்பதில்
ஆறுதல் இருந்தது...
அண்ணன் இருவரும்
கைப்பிடித்துக்

கொண்டுவரும் வரை...
வேலை செல்லும் பெண்களாம்
காலையுணவு மாத்திரம் செய்து கொடு
என்றாரம்பித்து நாலு மணிப் பலகாரம்

இதுதான் வேண்டுமெனக் கட்டளையிட்டுச்
சொல்லும் அளவுக்கு அதிகாரம்
கைமீறிச் சென்று விட்டது...
இட்லி தோசைக்குத்தான் இல்லை...

இஞ்சி பூண்டு உரிப்பதற்குமா
பணி செல்லும் பெண்கள் பிணி பீடித்துக்
கிடக்கின்றனர்...
மூவேளை உணவு மூவேறு

விதங்களில்... அத்தனை பேரும் உண்டு
கழித்தால்தான் எனக்குச் சோறு...
இல்லையேல் தொண்டைக்குழி
நடுவில் சோற்று உருண்டையும் கையில்

குழம்பும் சாம்பாருமாக
அடுக்களைக்கும் அவர்கள் தட்டுக்குமாக
அலைய வேண்டியதுதான்...
பரவாயில்லை

பழகிப் போனதுதான்...
கட்டிலே கல்லறையென்றாகிப் போன
தாயின் சகலதும் பார்த்தாக வேண்டும்...
அதில் குறையேதும் சொல்வதற்கில்லை...

அறப்பணி பட்டியலில் அவை சேரும்...
"பணி செல்லும் பெண்கள்" அடைமொழியில்
அடைகாக்கும் கோழியென
மடிக்கணனியில் நொடிக்கொருமுறை

தட்டித் தட்டிக் கட்டிலே
கதியெனக் கிடந்து கட்டளையிடும்
அண்ணிகள் மீதுதான்
அத்தனை கோபமும்...

"பள்ளி செல்லும் தங்கைகளையாவது
விட்டுவிடலாம்... இவளையாவது
கட்டிக் கொடுத்து விட்டு
நீ கட்டி இருக்கலாம்"

தூரத்து உறவினர்... பொழுதுபோகவில்லை
போலும் விசாரிக்கிறார்...
ஆஹா நம் தலைப்பு வருகிறது
எனச் செவி தீட்டி நிற்கிறேன்...

"பார்க்காமல் இல்லை...
பருமனும் தோற்றமும் பத்துப் பிள்ளை
பெற்றவள் போல இருக்கிறாள்...
அதுதான் வரன் ஏதும் தேறுவதாயில்லை ..."

அண்ணனின் "பொறுப்பான பேச்சு"...
அவன் சொல்வதிலும் உண்மை
இல்லாமலில்லை...
"முகம் லட்சணமாக இருக்கிறது...
உடம்புதான் ..."

என்று மென்று விழுங்கியவர்கள்தான்
அதிகம்...
அவர்களுக்காகத் தலையைத்
தனியாகத் துண்டித்து
"இந்தா... குடும்பம் நடத்து..."

என்றா கொடுக்க முடியும்...
முடிந்தளவு வயிற்றுக்குக் கடிவாளம்
போட்டும் பார்த்தாயிற்று

மண் தின்னும் உடலில் குடல் புண்

வந்ததுதான் மிச்சம்...
பரம்பரையலகு, நிறமூர்த்தம்... என
பாழாய் போனவர்கள்
படித்துத் தொலையுங்களேன்...

மெல்லிய தேகம் கொண்ட
ஆண்கள் சற்றுத் தள்ளிப் போகலாம்...
தொந்தியும் தொப்பையுமாக திரியும்
மனித உருப் பசுக்களே

உங்களுக்குமா என்னைப்
பிடிக்காது போய்விட்டது...?
மெல்லிய பெண் கேட்டு
நிற்கிறீர்களே...

நசுங்கித் தொலையப்
போகிறார்கள்...
"வீட்டைப் பார்த்துக் கொள்ளவும்
அம்மாவைப் பார்த்துக் கொள்ளவும்

சமையலைப் பார்த்துக் கொள்ளவும்
யார்தான் இருக்கின்றனர்?
அதுதான் அவசரமாகக்
கட்டிக் கொண்டேன்..."

அண்ணனின் "அரசியல்" பேச்சு...
ஹ்ம்ம்... மனது எப்போதோ
மரத்துப் போய்விட்டது...
இதைக் கேட்டு கண்ணீர் மடையைத்

திறந்துவிட அது தயாரில்லை போலும்...
வெற்றுச் சிரிப்பை உதிர்த்து விட்டு
தீட்டிய செவிகளை
மழுங்க வைத்துக் கொண்டேன்...

'நாலு மணியாச்சு... இன்னுமா டீ போடல...?"
"இதோ போடுறேன் அண்ணி..."
அண்ணி கோபக்காரி... நேரத்திற்குத்
தேநீர் இல்லையென்றால்

தேடிவந்து திட்டு விழும்...
கொஞ்சம் இருங்கள்
இதோ வருகிறேன்...

**கீதா மோகன்**
**திருநெல்வேலி - தமிழ்நாடு**



# பக்குவம்

பசி மயக்கத்தின் தவிப்பில் இருக்கும் மனிதர்களின் தவிப்பினை போக்கும் மனித நேயம் என்றும் உயர்வானது கையில் உள்ளதை பையில் இல்லதோருக்கு கொடுத்து உதவும் பக்குவம் எல்லோருக்கும் வந்துவிடாது

வாழ்வில் நாம் செய்யும் சிறு கொடை கூட பேராபத்தில் இருந்து மீட்டு எடுக்கும் வல்லமை கொண்டது. இருப்பதை கொடுப்பதால் என்றும் குறைந்து விடப் போவதில்லை நம் உள்ளம் கொடுப்பதில்தான் ஆத்மார்த்தமான மகிழ்ச்சி உண்டு என்பதை ஒரு கனம் சிந்தித்தாலே போதும் வாழ்க்கை அர்த்தம் உள்ளதாக மாறிவிடும்.

பசியினில் வாடும் மனிதர்களின் சந்தோஷங்களை நம்மால் பெற்றுக் கொடுக்க முடியும் எனின் சிறிது தயக்கம் இன்றி கொடுத்து உதவுதல் எதிர்காலத்திலும் நம் பெயர் நிலைத்து இருக்கச் செய்யும்

தர்மம் செய்வது தானம் வழங்குவது என்றும் மங்கி விடப் போவதில்லை உம் வாழ்வில் ஒளி வீச செய்திடும் என்பதனை உணர்ந்தாலே போதும் வெளிச்சத்தினை எட்டிப் பிடித்து விடலாம் மனிதர்களிடம் மாற்றத்தினையும் ஏற்படுத்திவிடலாம் இருப்பதை கொடுத்து உதவுங்கள் அதனுள் சந்தோஷங்களை பெற்றுக் கொள்ளுங்கள்...

இடை விடாமல் வறுமையில் வாடும் மனிதர்களின் முகத்தில் சந்தோசத்தை பாருங்கள் அதைவிட வேறு என்ன மகிழ்ச்சி இருக்க போகின்றது

வாழ்கை உமக்கு தந்தவற்றை இல்லாத ஏழை மக்களுக்கு கொடுக்கும் பக்குவம் வந்துவிட்டாலே


நீங்கள் உமது வாழ்கை எனும் பயணத்தை பூரணத்துவம் அடைந்து விட்டீர்கள் என்பதில் எந்த வித ஐயமுமில்லை

நாம் இப்போது இருக்கும் சூழ்நிலையில்
கொடுத்து உதவும் பக்குவம் இன்றியமையாத ஒன்று

இருப்பதை கொடுங்கள் எல்லோருடனும் சந்தோஷமாக வாழப் பழகுங்கள் வாழ்க்கை உன்னதமானது என்பதை புரிந்துகொள்வீர்கள்



**முபீத்**
**சாய்ந்தமருது**



# மாற்றுதிறனாளிகள்

இறைவன் படைப்பில் நாங்களும் மனிதர்கள்
இழிவின்றி வையகமே எங்களையும் பாருங்கள்
இருள் சூடியும் இன்பங்கள் நிறைந்த இதயங்கள்

இறக்கமின்றியும் இனிவாய் சிரித்திடும் இதழ்கள்
நித்தம் யுத்தம்
எங்கள் வாழ்வில்

பெரும் கத்தும் சத்தம்
எங்கள் வழியில்
வற்றும் வற்றும்
கண்ணீர் விழியில்

சித்தம்(மனம்) சித்தம்(மனம்)–அது
தெளிவான சுத்தம்
பித்தம் பித்தம்–அது
யார்செய்த குற்றம்

அரவணைக்கும் கரங்கள் யாவும்
அடைக்கலம் தருவதில்லை
அன்புள்ள மனங்கள் யாவும்
அரணாய் இருப்பதில்லை

ஆயிரம் தேவைகள் அகிலத்தில் இருக்கும்
ஆயினும் அவர்கள்மேல் தவறில்லை
தூக்கிவிட யாருமில்லை–ஆனால்
துவண்டுபோவது நாங்களுமில்லை

கண்டுகொள்ள யாருமில்லை–
ஆயினும் தொலைந்து போவது நாங்கள் இல்லை

உறுதி இல்லாதது உள்ளம் இல்லை
உதவி இல்லாமல் உலகம் இல்லை
உதவாத உயிர்கள் என்று உலகில் இல்லை–
இதை உணர்ந்து வாழ்ந்தால் உறவில் கலகம் இல்லை

**அப்துல் ஹாஸிர்**




# தொழில்-வர்த்தகத்துக்கு ஆங்கிலம் ஏன் இன்றியமையாததாகிறது?

**ஊடகவியலாளர் - எம். பௌசுல் அலீம்**

ஐந்தாம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஆக்கிரமித்த மூன்று ஜெர்மானிய பழங்குடியினரில் ஒருவரான ஆங்கிள்ஸின் பேச்சான ஆங்கிலிஸ் என்பதிலிருந்து "ஆங்கிலம்" என்ற சொல் உருவானது. ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, லண்டன் மற்றும் அதன் பல முன்னணி காலனிகள், மற்றும் அமெரிக்கா உட்பட பல நாடுகளின் முதன்மை மொழியாக ஆங்கில மொழி உள்ளது, மேலும் இலங்கை, சிங்கப்பூர், உட்பட பல பன்மொழி நாடுகளில் இரண்டாவது மொழியாக உள்ளது. ஆனால் நைஜீரியா மற்றும் தென்னாப்பிரிக்கா போன்ற பல ஆபிரிக்க நாடுகளிலும் ஒரு உத்தியோகபூர்வ மொழியாகும் கருதுகின்றனர்.

இன்று உலகில் பேசப்படும் 6 500 மொழிகளில், ஏன் ஆங்கிலம் கற்கத் தேர்வு செய்ய வேண்டும்? உலகில் பரவலாக பேசப்படும் இரண்டாவது மொழியாக, ஆங்கிலம் 118 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவலாக பேசப்பட்டு கற்பிக்கப்படுகிறது, 10.1 வீதம் பிரிட்டிஷ் காலனித்துவத்தில் ஆங்கிலம் மட்டுமே ஆதிக்கம் செலுத்துகிறது. கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் ஆங்கில மொழி பேசப்பட்டு வருகிறது, மேலும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், அமெரிக்க சக்தியின் உலகளாவிய ரீதியான அணுகலுடன் இது இன்னும் அதிகமாகிவிட்டது. "

உலகெங்கிலும் பாடசாலைகள் உள்ள குழந்தைகளால் வெளிநாட்டு மொழியாகக் கற்றுக் கொள்ளப்படுகிறது, மேலும் இது பெரும்பாலும் ஒரு பொதுவான வகுப்பாக மாறுகிறது. பயணம் செய்யும் போது, வியாபாரம் செய்யும் போது அல்லது பிற சூழல்களில் சந்திக்கும் போது வெவ்வேறு தேசிய இன மக்களை ஒற்றுமைப் படுத்துகிறது.

பல்வேறு நாடுகளில் செயல்படும் நிறுவனத்தின் நிர்வாக வசதிக்காகப் பொது மொழி ஒன்று இருப்பது பணித் திறனை வெகுவாக மேம்படுத்தும். உலகம் எங்கும் பரவலாக அறியப்பட்டதான ஆங்கிலத்தைப் பொது மொழியாகத் தேர்ந்தெடுப்பது உலக அளவில் இயங்க உதவியாகவே இருக்கிறது. இப்போது டிஜிட்டல் உலகமாகிவருகிறது. ஆங்கிலத்துக்கு இப்போதுள்ள முக்கியத்துவம் இதே நிலையில் நீடிக்குமா அல்லது மாறிவிடுமா?

உலகிலேயே அதிகம் பேசப்படும் மொழி ஆங்கிலம் இல்லை என்றாலும், 400 கோடிப் பேரால் ஆங்கிலம் பேசப்படுகிறது என்கிறது விக்கிப்பீடியா. பிரிட்டிஷ் கவுன்சிலின் கூற்றுப்படி, 2021 ஆம் ஆண்டில் உலகில் சுமார் இரண்டு பில்லியன் மக்கள் ஆங்கிலம் கற்பார்கள்.
இதில் ஆங்கிலம் பேசும் நாட்டில் வசிப்போர் எண்ணிக்கை வெறும் 20%. வர்த்தகம், கணினி உலகம், இணையதளம் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தும் ஒரே மொழி ஆங்கிலம் மட்டுமாக இருக்கின்றது.

உலகம் முழுவதிலுமோ அல்லது உலகின் பல்வேறு நாடுகளிலோ செயல்பட விரும்பும் நிறுவனங்கள் ஆங்கிலத்தைப் பொது மொழியாகக் கொள்ள விரும்புகின்றன. அவை வேறு மொழி பேசும் நாட்டில் தொடங்கப்பட்டிருந்தாலும், வேறு மொழியில் நிர்வாகத்தைத் தொடங்கியிருந்தாலும் ஆங்கிலத்துக்கு மாற விரும்புகின்றன. சீனர்களுக்குச் சொந்தமான லெனோவா, சுவிஸ்–ஸ்வீடன் பொறியியல் நிறுவனம் ஆசியா பிரௌன்போவரி உட்பட பல நிறுவனங்கள் உள் தகவல்தொடர்புக்கு ஆங்கிலத்தைத்தான் பயன்படுத்துகின்றன.

### ராகுடென்னின் அனுபவம்

சமீபத்திய உதாரணம் ராகுடென். இந்த ஜப்பானிய நிறுவனம் 1997–ல் மின் வணிகத்தில் ஈடுபட்டது. பிறகு, தன் நிறுவனத்தை வெவ்வேறு துறைகளில் விரிவுபடுத்தியது. 2010–ல் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ஹிரோஷி மிகிடானி நிறுவனத்தின் பொது மொழியாக ஆங்கிலத்தை அறிமுகப்படுத்த முடிவெடுத்தார். உலகத் தகவல்தொடர்புக்கு உதவியாக நிறுவனத்துக்குள் முதலில் பொது மொழி இருக்க வேண்டும் என்று மிகிடானி நினைத்தார். ஜப்பானின் அதிகாரப் படிநிலை சார்ந்த நிர்வாகக் கலாச்சாரத்திலிருந்து விலக அவர் விரும்பினார். ராகுடென்னின் 10,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்களில் பேர் ஜப்பானியர். அவர்களுக்கு ஆங்கிலம் கொஞ்சமும் தெரியாது. ஊழியர்கள் ஜப்பானிய மொழிப் பயன்பாட்டிலிருந்து ஆங்கிலத்துக்கு மாற அவர் இரண்டு ஆண்டுகள் என்று இலக்கு நிர்ணயித்தார். ஊழியர்கள் தாங்களாகவே ஆங்கிலத்தைக் கற்கும் ஏற்பாட்டைச் செய்துகொள்ள நேர்ந்தது. எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறாவிட்டால் பதவியிறக்கம்கூட நடைபெறும் என்று எச்சரிக்கப்பட்டனர். இதனால், அவர்களுக்கு எவ்வளவு பெரிய மனச்சுமை ஏற்பட்டிருக்கும் என்று நினைத்துப்பாருங்கள்.

இந்த ஏற்பாடு பலன் தரவில்லை என்று உணர்ந்ததும் மிகிடானி அவராகவே மனிதாபிமானத்துடன் மாற்று ஏற்பாடுசெய்தார்.

அலுவலகத்திலேயே ஊழியர்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள ஆசிரியர்களை நியமித்தார். இதை நிர்வகிக்கும் பொறுப்பை நிறுவனத்தின் இடைநிலை நிர்வாகிகளிடம் ஒப்படைத்தார். இதற்குப் பிறகு, ஊழியர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறத் தொடங்கினர். ஹார்வர்டு மேலாண்மையியல் கல்விப் பிரிவு பேராசிரியர் செடால் நீலி 'தி லாங்வேஜ் ஆஃப் குளோபல் சக்சஸ்' என்ற தன்னுடைய நூலில் ஆங்கிலத்தைப் பொது மொழியாக்க நிறுவனம் எடுத்துக்கொண்ட முயற்சிகளை விவரித்திருக்கிறார். ஜப்பானிய நிர்வாக பாணியையும் கலாச்சார விழுமியங்களையும் அப்படியே தொடர்வது என்று நிறுவன நிர்வாகம் தீர்மானித்தது.

இதனால், ஊழியர்களில் பெரும்பான்மையானவர்களுக்குத் தங்களுடைய அடையாளம் மறைந்துவிடவில்லை என்ற நிம்மதியும் நம்பிக்கையும் ஏற்பட்டது. இந்த நடைமுறைக்கு நம்முடைய பங்களிப்பு அவசியம் என்பதை அவர்கள் உணரவும் இந்த ஏற்பாடு உதவியது. நிறுவனம் இப்போது மேலும் பல நிறுவனங்களை விலைக்கு வாங்கித் தனது குழுமத்தில் சேர்த்துக்கொண்டுவருகிறது. அத்துடன் புதிய நிறுவனங்களையும் தொடங்குகிறது. 27 நாடுகளில் இப்போது செயல்படுகிறது. ஆங்கிலத்தைப் பொது மொழியாக ஏற்றதால் நிறுவனம் வளர்ந்தது மட்டுமல்லாமல், ஆற்றல்மிக்க பலரை அடையாளம் கண்டு சேர்த்துக்கொள்ளவும் முடிந்தது என்று அது மகிழ்ச்சியடைந்திருக்கிறது.

**மொழி ஆதிக்கம்**

உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான டொயாடோ, நின்டென்டோ ஆகியவற்றுக்கு மொழி ஒரு பிரச்சினையே இல்லை. டிஜிட்டல் தொழில்நுட்பமும் சேவைகளும் விரிவடைந்துவரும் இந்தத் தருணத்தில், மொழி முக்கியத்துவம் பெறுகிறது. இவ்விரு நிறுவனங்களுக்கும் இது பொருந்தும். ராகுடென் நிறுவனத்தின் அனுபவம் ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபேவுக்கு ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தியிருக்கிறது. ஜப்பானுக்குள்ள 'தீவு நாடு' என்ற தாழ்வு மனநிலை மாற ஆங்கிலத்தை விரிவாகப் பயன்படுத்துவது உதவும் என்று கருதுகிறார். ஜப்பானில் ஆங்கிலம் கற்றுத்தரப்படுகிறது. ஆனால், வகுப்பறையோடு சரி, பெரும்பாலும் அதைப் பயன்படுத்துவதில்லை. எனவே, ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக்க வேண்டிய புரட்சிக்குக் கல்வித் துறை தயாராவது அவசியம் என்று கருதுகின்றனர்.

பல நாடுகளிலிருந்து செயல்படும் நிறுவனத்துக்குள் பொது மொழி இருப்பது அதன் திறமைகளை வளர்க்கும் என்பதில் சந்தேகமே இல்லை. கடிதப் பரிமாற்றங்கள் தவறாகப் புரிந்துகொள்ளப்பட வழியில்லை, முடிவுகளை விரைவாக எடுக்க இது பெரிதும் உதவுகிறது. ஆங்கிலத்தின் வீச்சானது அதற்கேயுள்ள பல சாதகங்களுடன் மேலும் பலன் அளிக்கிறது. இவ்வளவு இருந்தாலும் பொது மொழி அவசியமா? என்ற கேள்வி எழாமல் இல்லை. வெவ்வேறு மொழி பேசும் இருவர் வேகமாக உரையாடும் அளவுக்கு அவரவர் மொழியில் மொழிபெயர்க்கும் தொழில்நுட்பம் நாள்தோறும் வளர்ச்சியடைந்து வருகிறது. இதற்கான மென்பொருள் நவீனமடைந்துவருகிறது என்பதேயாகும்.



# தனித்துவப் பாதையின் பரிணாமம்

நண்பர்களே நாம் அடுத்தவர்கள் செல்லும் பாதையில் பயணங்களை மேற்கொள்கின்றோம்.

எமக்கான பாதை இது அல்ல என்பதை உணராமல் பயனற்ற பாதையில் பயணிக்கின்றோம்

அதனால் நாம் செல்ல விரும்பும் இடத்திற்கு சென்றடைய முடியாமல் இடை நடுவில் நின்று விடுகின்றோம்

இதனால் நேரமும் வீணடிக்கப்படும் எம் நிம்மதியும் இழக்கப்படும்.

ஒவ்வொரு மனிதர்களும் தனித்துவமானவர்கள். அவர்களிடம் காணப்படும் ஆற்றலும் அவ்வாறே

வாழ்க்கை எமக்கு புதிய பாதையை அமைத்து கொள்ளுமாறு வாய்ப்பு வழங்குகின்து

வெற்றியின் பாதையில் வலம் வருவதற்கு அந்த வாய்பினை நாம் எம் செயலின் மூலம் இழந்து விடக் கூடாது

முன்னேர முயற்சிக்கும் நாம் அடுத்தவரை பின் தொடர்ந்து செல்லக் கூடாது

எதற்கு எமக்கு மற்றவர்களின் பாதை அதில் இருந்து எம்மால் எதையும் கற்றுக் கொள்ளவும் முடியாது.
கற்றுத் தரவும் முடியாது.

அனுபவம் என்பதே எம்மை எம் இலக்கு நோக்கி கூட்டிச் செல்லும்.

அனுதினம் வரும் அவமானம் எமக்கு அரிய பல அற்புதங்களை பறைசாற்றும். அந்த இனிமையை நாம் ஏன் இழக்க வேண்டும்.

எவ்வாறானாலும் மரணம் என்ற ஒன்று எம்மை வந்தே சேரும் அதற்கு முன் எம் மகிமை பற்றி அனைவரும் அறிந்திருக்க வேண்டும்

எனவே எமக்கான பாதை ஒன்றை அமைத்து அதில் உள்ள அனுபவங்களை சுவைத்துக்கொண்டே பயணிப்போம்

அதில் ஏற்படும் அவமானம் தோல்வி இரண்டும் எம் அடையாளத்திற்கான அங்கீகாரங்கள்

கற்றுத்தர காலம் காத்திருக்கும் போது பெற்றுக் கொள்ள நாம் ஏன் தயங்க வேண்டும்.

**பா. அர்சிதா**
**காவத்தமுனை**



# இஸ்லாமிய திருமணமும் சம்மதமும்

படைப்புக்கள் அனைத்தும் தங்களது துணைகொண்டு இணைகளாக இருக்க வேண்டும் என்பது இறைவனின் பொது நியதிகளில் ஒன்றாகும். இதில் மனிதர்கள் மாத்திரமின்றி விலங்குகளும் இந்நியதிகளுக்கு உட்படுகின்றது.

அல் குர்ஆனில் (51:49) "நாம் ஒவ்வொன்றையும் இணைகளாக படைத்திருக்கின்றோம். நீங்கள் இதிலிருந்து படிப்பினை பெறக்கூடும்." என இறைவன் பறைசாற்றுகிறான்.

இரு மனங்கள் இணைந்து உலக வாழ்க்கையில் இன்பம் பெறவும், ஒழுக்கக்கோப்பில் வாழ்ந்து வாரிசுகளை உருவாக்கவும் இறைவன் ஏற்படுத்திய ஹலாலான வழிமுறையே திருமணமாகும். இஸ்லாமிய திருமணம் என்பது ஆண், பெண் ஆகிய இருவருக்கும் இடையே ஏற்படுத்தப்படும் ஓர் வாழ்க்கை ஒப்பந்தமாகும். இதை ஆங்கிலத்தில் "அக்ரிமென்ட்" என அழைக்கப்படுகிறது. "அக்ரி" என்பதற்கு தமிழில் உடன்படுதல் என்று அர்த்தம்.

இதை திருக்குர்ஆனில் (4:21) "சந்தேகமின்றி நீங்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து இன்பம் துய்த்திருக்கிறீர்கள், மேலும் அந்த மனைவியர் உங்களிடம் இருந்து உறுதியான ஒப்பந்தத்தையும் பெற்றிருக்கிறீர்களே!" என்று இறைவன் கூறுகிறான்.
ஒவ்வொரு மனித வாழ்விலும் திருமணம் எவ்வளவு அவசியம் என்பதை திருக்குர்ஆனும் நபிமொழியும் எமக்கு வலியுருத்துகிறது.

"ஆணாயினும், பெண்ணாயினும் உங்களில் எவருக்கும் வாழ்க்கைத்துணை இல்லாவிட்டால் அவர்களுக்கும் விதவைகளுக்கும் திருமணம் செய்துவிடுங்கள்" என இறைவன் திருமறையில் (24:32) கூறுகிறான்.
"திருமணம் என்பது எனது வழிமுறை, இதைப் புறக்கணிப்போர் என்னைச் சார்ந்தவர் அல்லர்"
"இளைஞர்களே! உங்களில் திருமணத்தின் பொறுப்பை சுமக்கும் சக்தி பெற்றவர் மணம் புரிந்து கொள்ளட்டும்."
மேற்கண்ட நபிமொழிகள் திருமணத்தை வலியுறுத்தி பறைசாற்றுகிறது. அத்தோடு திருமணம் ஏன் செய்ய வேண்டும் என்பதையும் கீழுள்ள நபிமொழி எமக்கு தெளிவூட்டுகிறது.

"திருமணம் என்பது (தீய பார்வைகளை விட்டும்) பார்வையை தடுக்கிறது, (தீய தொடர்புகள், விபச்சாரம் போன்றவற்றிலிருந்து) கற்பை பாதுகாக்கிறது."
(புஹாரி, முஸ்லிம்)

**திருமணம் முழுமை அடைவதற்கு இஸ்லாமிய மார்க்கத்தில் பின்வரும் விடயங்கள் காணப்பட வேண்டும்.**
01.பொறுப்பாளர் (வலி)
02.முழுமையான சம்மதம் (ஈஜாப் கபூல்)
03.நீதமுள்ள சாட்சிகள் (ஷாஹித்கள்)
04.மணமகளுக்கான உரிமை (மஹர்)
(அபுதாவூத் திர்மிதி)

பெண் திருமணம் முடித்துக்கொடுக்கப்படும் போது அவர் சார்பில் ஒரு வலி இருப்பது அவசியமாகும். ஒரு பெண் யாருடைய பொறுப்பில் இருக்கின்றாரோ அவரே வலி எனப்படுவார். வலி (பொறுப்பாளர்) அந்தப் பெண்ணின் பெற்றோராகவும் இருக்கலாம் அல்லது பெற்றோர் இல்லாத பட்சத்தில் அவர்களை பொறுப்பெடுத்து வளர்க்கும் உறவினராகவும் இருக்க முடியும். வலியின் (பொறுப்பாளர்) அனுமதியுடனே திருமணங்கள் நடைபெற வேண்டும். இதுதான் பெரும்பாலான மார்க்க அறிஞர்களின் நிலைப்பாடாகும்.

வேறு சிலரே ஒரு பெண் தானாகவே திருமணம் செய்து கொள்ளலாம் என்ற கருத்தில் உள்ளனர். இந்தக் கருத்து வலுகுன்றியது "ஷாத்" (அரிதானது). வலியின் (பொறுப்பாளர்) அனுமதி திருமணத்தில் அவசியம் என்பதை கீழ்வரும் குர்ஆன் வசனமும் நபிமொழிகளும் எடுத்துரைக்கின்றது.

"அவ்வாறே இணைவைக்கும் ஆண்களுக்கு அவர்கள் நம்பிக்கை கொள்ளும் வரை (மூஃமினான பெண்களுடன்) நீங்கள் திருமணம் செய்து வைக்காதீர்கள்..."(2:221)

மேற்கண்ட அல்குர்ஆன் வசனத்தில் இணைவைக்கும் ஆண்களை திருமணம் செய்யாதீர்கள் என்று கூறாமல் இணை கற்பிக்கும் ஆண்களுக்கு உங்கள் பெண்களை மணமுடித்துக் கொடுக்காதீர்கள் என்று ஆண்களை பார்த்து கூறப்படுகிறது.

"எந்தப் பெண்ணாவது தனது பொறுப்பாளரின் அனுமதியின்றி திருமணம் செய்து கொண்டால் அவளது திருமணம் செல்லாது, அவளது திருமணம் செல்லாது, அவளது திருமணம் செல்லாது.." என்று மூன்று முறை நபி(ஸல்) கூறினார்கள். (அபுதாவூத் திர்மிதி அஹமத்)
"வலி (பெறுப்பாளர்) மூலமாக தவிர எந்த திருமணமும் இல்லை." (அபுதாவூத் திர்மிதி அஹமத்)

பெண்ணின் திருமணத்திற்கு பொருப்பாளரை ஏற்படுத்தியது பெண்கள் ஏமாற்றப்படாமல் தவிர்ப்பதற்கும், அவர்களின் பாதுகாப்பிற்குமே. ஆனால் சில வலிமார்கள் (பெறுப்பாளர்) எல்லா அதிகாரத்தையும் தன்னிடமே வைத்துக் கொண்டு மணமகளின் அனுமதியின்றி தான் விரும்பியவருக்கே மணமுடித்து வைக்கின்றனர்.

பெண் விரும்பாத ஒருவருக்கு மணமுடித்துக் கொடுக்க இஸ்லாத்தில் அனுமதியில்லை. பெண்ணின் அனுமதியின்றி திருமணம் செல்லாது. அதற்க்கான ஆதாரம் பின்வரும் நபிமொழிகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

விதவையின் அனுமதி பெறாமல் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கலாகாது. கன்னிப் பெண்ணையும் அவளது சம்மதம் பெறாமல் திருமணம் செய்து வைக்கலாகாது. மௌனமே அவளது சம்மதமாகும்.
(புஹாரி¸ முஸ்லிம்¸ திர்மிதி)

மற்றொரு ஹதிஸீல் நபி(ஸல்) அவர்களிடம் ஒரு கன்னிப் பெண் வந்து "என்னுடைய தந்தை எனது விருப்பமின்றியே என் திருமணத்தை நடத்தி விட்டார்" என கூறினார்.

அப்பொழுது நபி(ஸல்) அவர்கள் அப்பெண் அத்திருமணத்தை முறித்து விடலாம் அல்லது தொடரலாம் என்ற இரண்டில் ஒன்றை தேர்ந்தெடுக்க உரிமையளித்து விட்டார்கள். (அபுதாவூத் இப்னுமாஜா அஹமத்) முஸ்லிமான ஆண் முஸ்லிமான பெண்ணை மணக்க விரும்பினால் அல்லது முஸ்லிமான பெண் முஸ்லிமான ஆணை மணக்க விரும்பினால் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பது பெற்றோர்களின் கடமையாகும். பணம்¸ பதவி¸ அந்தஸ்த்து¸ குலம் போன்ற எந்தக் காரணத்தையும் கூறி விருப்பத்தை நிராகரிப்பது குற்றமாகும்.

"பெண்களை விவாகரத்து செய்த பின் அவர்கள் தமது காலக்கெடுவை நிறைவு செய்துவிட்டால் அவர்கள் (தனக்கு பிடித்த) கணவர்களை விருப்பப்பட்டு நல்ல முறையில் மணந்து கொள்வதை தடுக்காதீர்கள்!

உங்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புவோருக்கு இவ்வாறு அறிவுரை கூறப்படுகிறது.." என அல்குர்ஆன் (2:232) எமக்கு பறைசாற்றுகிறது.
ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் தமது வாழ்க்கைத் துணைகளை தேர்வு செய்யும் உரிமை உடையவர்கள் என்பதை மேற்கண்ட குர்ஆன் வசனம் தெளிவு படுத்துகிறது. ஆனாலும் திருமணங்கள் வலியின் (பொறுப்பாளர்)

மூலமாகத்தான் நடந்திட வேண்டும் என இஸ்லாம் எமக்கு வழிகாட்டுகிறது.

**Ishthiyaq Samurutheen**
**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்**



# பலஸ்தீனமே!

பலஸ்தீனே பூமியே நீ கவலை கொள்ளாதே
உன் சிறப்பை வார்த்தைகளால் சொல்லிவிட முடியுமா?
அவ்வளவு சிறப்பை தாங்கியவன் நீ.

எங்கள் நபி அவர்கள் உன் பூமியில் அல்லவா இஸ்ரா
பயணம் மேற்கொண்டார்கள்.

முஸ்லிம்களின் முதலாவது கிப்லாவும் உன் புனித
மண்ணில் அல்லவா உள்ளது.

அருல் செய்யப்பட்ட பூமியல்லவா நீ

பூமியில் இரண்டாவதாகக் கட்டப்பட்ட மஸ்ஜித் உன்
மண்ணில் அல்லவா உள்ளது.

இஸ்ரேல் எதிர் பார்த்துக் கொண்டு இருக்கும்
உலகத்தையே குழப்பத்தில் ஆழ்த்த கூடிய
கொடுங்கோலான அவர்களின் தலைவன் தஜ்ஜால்
நுழையத் தடை செய்யப்பட்ட புனிதமான பூமியல்லவா நீ.

எங்கள் நபி அவர்கள் கூறிய மஹ்சர் நடைபெறும்
பூமியும் நீ அல்லவா.

அவர்கள் இன்று உன்னை நவீன ஆயுதங்களால்
தாக்குவது எல்லாம் ஈஸா நபி அவர்கள் இறங்கும்
வரைதானே .

உன்னை அழிக்கத் திட்டமிடுபவர்கள் நினைக்கலாம்
அவர்கள் இன்று உன்னை அழித்து வெற்றியடைந்து
விட்டார்கள் என்று ஆனால் அந்த வெற்றியே
அவர்களுக்கான அழிவுக் காலம் நெருங்கி விட்டது என்று
அவர்கள் அறியவில்லை. பலஸ்தீன பூமியே நீ கவலை
கொள்ளாதே

ஸுலைய்மான் நபி
எனக்குப் பின்னால் வழங்கப்படாத ஆட்சி இந்த பூமிக்கு
வழங்கப்பட வேண்டும் என்று உனக்கல்லவா
பிரார்த்தித்து இருக்கிறார்கள். இந்த பிரார்த்தனைக்கான
நாள் நெருங்கி விட்டது நீ கலங்காதே பலஸ்தீன
பூமியே.

பொறுமையோடு இரு உன் வெற்றிக்கான அந்த நாள்
நெருங்கி விட்டது. நீ கலங்காதே பலஸ்தீன பூமியே!!!

**ஜஸ்ரா ஜலீல்**
**அறக்கியாள**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜூன் 2021



# மங்கைப் பெண்

அகிலம் போற்றிடும்
பெண்ணின் பெருமையை...
ஆனால்
அகிலம் அறிந்திடாது

அவள் பொறுமையின் உச்சத்தை..
பிறப்பால் பெண்ணாகி
சுதந்திரங்கள் இழந்து

நான்கு சுவருக்குள்
சுருங்கிப் போனது
அவள் ஆளுமைகள்..
ஆனாலும்

அவளின் பொறுமை இழக்கவில்லை..
இன்பங்கள் எதுவென்று அறியாமலே
துன்பங்களையும் இன்பமாக
ஏற்றிடும் போது கூட

அவள் பொறுமை இழக்கவில்லை..
கணவனுக்காக கற்பையும் இழந்து
அவன் ஆண்மையின் அடையாளத்தை
கருவாய் சுகமாய் சுமந்து

பிரசவிக்கும் போது கூட
அவள் பொறுமை இழக்கவில்லை..
மங்கை பெண்ணின் பொறுமை

மாபெரும் பெருமையே!!

**விடியலைத் தேடி.**
**சாதிக் சுது**
**உலப்பனை**



# எதையும் கற்றுக் கொள்வதில் குழந்தையாய் இரு

குழந்தை எப்போதும் எதையும் எளிதாகச் செய்து முடிக்கமாட்டாது.

குழந்தை எழுந்து நிற்பதற்கும் பல தடவைகள் விழுந்து அடிபட்டு தான் எழுந்து நிற்கின்றது..

ஒவ்வொரு தடவையும் விழும்போது உடம்பில் காயம் ஏற்பட்டு குழந்தை அழுகின்றது.

அவ்வாறிருந்தும் குழந்தை எழும்பி நிற்பதற்கான முயற்சிகளை கைவிடுவதில்லை .


அதுபோல் தான் மனித வாழ்கையிலும்.. நம்முடைய இலக்குகளை அடைய பல தோல்விகளை சந்திப்போம்.

பல தடவைகள் கஷ்டங்கள் ஏற்படும் போது கண்ணீர் வடிப்போம்.

சில சமயம் நமக்கு யாரும் உதவ இல்லை என்று கவலைப்படுவோம்.

அந்நேரத்திலும் கூட விடா முயற்சியோடு செய்தால் எதிலும் வெற்றியடையலாம்.

**பஹ்ரியா பாயிஸ்**



# நிஜமாகிடும் நொடிகள்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

இரவின் வருகை மொத்தமாய் ஊரெங்கும் படர்ந்திருக்க, அதனைத் தவிர்க்கும் விதமாக விதமான மின் விளக்குகள் அந்த வீதியின் ஒவ்வொரு வீடுகளிலும் எரிந்து கொண்டிருந்தன...
வாசலிலே நின்ற வேப்ப மரத்தினூடாக வீசிய இளந்தென்றலானது திறந்து வைக்கப்பட்ட ஜன்னலினூடாக உள்ளே நுழைய,
என்ன தான் செயற்கைக் காற்றை மின் விசிறி அளித்தாலும் இயற்கைக்கு முன்னால் அவை வெறும் தூசு என்பதனை உணர்ந்தவாறே அமைதியாக கதிரையின் ஒரு ஓரத்தை மட்டும் இருக்கையாக்கி அடிக்கடி இம்சை செய்த தன் கூந்தலை இணைத்து மொத்தமாய் கட்டிக் கொண்டாள் அம்னா.
இதழ்கள் எதையோ உச்சரிக்க அதனை காதுகள் செவிமடுத்து இதயத்திடம் ஒப்புவிக்க
அவளது விரல்கள் அதனை கொப்பியின் வெண்ணிறத் தாளிலே பதிவிட்டன...

தான் எழுதியவற்றையே மீண்டும் வாசிப்பதும் அதனை பார்த்து இதழ்களை குவித்து சிரிப்பதுமாக உட்கார்ந்திருந்தவளுக்கு நேரம் போனதே தெரியவில்லை..

விடிந்ததிலிருந்து மொத்த வீட்டு வேலைகள் உட்பட அனைத்தையுமே இழுத்துப் போட்டு செய்து விட்டு களைப்பில் உறங்கிப் போயிருந்த அம்னாவின் தாய் ஆதிரா திடீரென்று ஏற்பட்ட விழிப்பில் அப்படியே எழுந்து உட்கார்ந்து, "அம்னா..அம்னா" என்றார்.
அருகிலே மகளைக் காணாதவராக...

தாயாரின் அழைப்பிற்கு,
"ஓ உம்மா" என்றவள் தன் எழுத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு அவற்றை தன் தொலைபேசியில் டைப் செய்ய ஆயத்தமானாள்...

அதற்குள்,
"வழமையாக நேரத்தோடு தூங்குவிங்களே.. இன்னக்கி என்ன ஆச்சு?"
கேட்டவாறே தாய் உள்ளே நுழைய,
வாய்ஸ் ரெகோடிங் மூலம் தன் எழுத்துக்களை பதிவிட்டுக் கொண்டிருந்த அம்னா,
தாயின் சத்தம் கேட்டு அதனை நிறுத்தினாள்..

"யாரோட இந்த நேரம் பேசிட்டு இருந்த?"
புருவம் சுருக்கி வினவிய
தாயின் கேள்வியில் அடக்க முடியாமல் சிரித்தவளைப் பார்த்த தாய்,
"என்னமோ இந்த நேரம் போஃன் வெச்சிட்டு இருக்கிறது எனக்கு சரியாப் படலமா"
கூறி விட்டுச் செல்ல,

உம்மா சொல்றதும் சரி தான் என நினைத்தவள்
மீதியை அடுத்த நாள் செய்யலாம் என நினைத்தவாறு உறங்கிப் போனாள்...

மறு நாளைய விடியலின் வருகை தூக்கத்திலிருந்தோரை விழிக்கச் செய்ய,
வழமை போலே அன்றைய நாளும் புலர்ந்தது...

"புள்ள ஆதிரா....புள்ள...."

பக்கத்து வீட்டு சல்மா ஆன்டியின் அழைப்பில் காலையுணவு தயாரித்துக் கொண்டிருந்த
ஆதிரா தோசைக் கரண்டியுடன் வெளியே வர...

"என்ன ஆதிரா
சத்தமே இல்ல ஆக்கள்ட?"
என்றவர் தானாகவே ஒரு கதிரையை போட்டு அமர்ந்து கொண்டார்...

"எங்க புள்ள அம்னா?"
என்றவரிடம்,

"அவ உள்ளுக்கு."
என்ற ஆதிரா அடுப்பிலிருந்த தோசையைப் பார்க்க உள்ளே செல்ல...
தான் காதால் கேட்டவற்றை அடுத்தோரிடம் அவிழ்த்து விடும் வரை அமைதியின்றி தவித்த சல்மா ஆன்டியை நோக்கி தட்டில் தோசை ,
கோழிக் கறியுடன் வந்தார் ஆதிரா.

"என்ன புள்ள இது?
நான் எப்ப வந்தாலும் என்னை சும்மா அனுப்பவே மாட்டீங்க"
என்றவாறே உண்ண ஆரம்பித்த சல்மா ஆன்டி இடைக்கிடையே ஆதிராவையும் பார்த்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில்,

"அது சரி ஆதிரா....
அம்னாக்கும் வயசு போகுது... கல்யாணத்த பண்ணலாமே இனி..." என்றார்.

"ம்ம்...அது தான் ஆன்டி..."
என்றவள் வேறு ஏதும் பேசாதிருக்க,

"அது சரி ஆதிரா.
இந்த அம்னா ஒரே அந்த ஃபேஸ் புக்ல தான் இருக்கிறாம் என்டு கேள்விப் பட்டன்."

கூறி விட்டு சாதாரணமாக அவர் இருந்ததனைப் பார்த்து "திக்" என்றது ஆதிராவுக்கு...

"யா...யாரு சொன்ன?..."

"அதெல்லாம் வேணா புள்ள..ஆனா இந்தக் காலத்துப் புள்ளகள் மேல் கொஞ்சம் கவனம் செலுத்தத் தான் வேணும். ஏதோ நல்லதுக்குத்தான் சொன்னேன். அம்னா என்ட புள்ளய போல தான்....

வழித்தெடுத்த தோசைத்தட்டை ஆதிராவிடம் கொடுத்து விட்டு நகர்ந்தார் சல்மா...

அவர் கூறிச் சென்ற விடயமும்
இரவு நேரம் பிந்திய பின்னரும் அம்னா தொலைபேசியுடன் இருந்ததும் ஆதிராவுக்கு எங்கேயோ இடிக்க,
இதனை இப்படியே விட்டு வைத்தால் சரி வராது என நினைத்தவள் மகளது அறை நோக்கி நகர அவளோ யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள்...

"ஆய்ஷா.க்ஷ நைட் நான் என்ட கவிதைய வொய்ஸ் டைப்பிங் பண்ணிட்டு இருந்தப்ப உம்மா வந்து...."
சிரிப்பிலே மூழ்கினாள் அம்னா...

"சரிடி... உம்மா கண்டா இவளோ நேரம்
ஃபோன் வெச்சிக்கிறதுக்கு ஏசுவாங்க...
அந்த கவிதைப் போட்டிக்காக இப்ப கொஞ்ச நாளா ஃபேஸ் புக்லயே காலம் போயிட்டு" என்றவளது பேச்சுக்கள் ஒவ்வொன்றாய் ஆதிராவின் காதுகளில் விழ...

எல்லோரையும் போல தன் மகளையும் தவறாக நினைத்து விட்டோமே என நொந்தவளிடம்...

"உம்மா ஒங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ்...."
என்றவள் தொலைபேசியை தாயை நோக்கி நீட்ட அதிலே முகநூலில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதலிடத்தைத் தட்டியுள்ள அம்னாவுக்கு ஐயாயிரம் ரூபாய் பணப் பரிசில் வழங்கப் படுகிறது எனப் பொறித்திருந்தது.

உம்மா உம்மா... இரீங்க நான் வாப்பாட்ட சொல்லிட்டு வாரேன் என்றவாறு நகர்ந்தவளைப் பார்த்துக் கொண்டிருந்த ஆதிராவுக்கு, எதுவொன்றையும் சரியாகப் பயன்படுத்தப் படும் வரை தப்பில்லை என்ற உண்மை தெளிவாகப் புரிந்தது......

முற்றும்..

# பொட்டல் காட்டில் விழுந்த விதை

இந்த பொட்டல் காட்டில் தான் என் விதை விதைக்க பட வேண்டுமா??
வேறு எதும்
வீடு தனில் அல்லது
ரோடுதனில்

விழுந்து இருந்தால்
முளைத்து பலருக்கும்
நிழலை கொடுத்திருப்பேனே ..!
எனக்கு நீரை

யாரேனும்
உமிழ் நீரிலோ...
சிறு நீரிலோ....
மழை நீரிலோ

வீட்டின் அழுக்குப் படிந்த
நீரிலோ...
வளர்ந்திருப்பேனே...
இப்போது ஒரு துளி நீர் கூட

விதைக்கு உணவாய்
படைக்க முடியா
மொட்டை மரமாய்
நிற்கிறேனே...

மழையும் பெய்ய வாய்ப்பில்லை
இப்படி காடுகளை அழித்து
வீடுகளையும்
தொழிற் கூடங்களையும்...
அமைத்ததால் என்ன தான் செய்யவோ...????

தினம் தினம்
அழுகிறேன்...
என் கண்ணீரின் நீரிலாவது
வளர்வேனா என

ஆனால் அதுவும்
நடக்கவில்லை...
இனி என்ன செய்ய என
மெல்ல
மெல்ல
மடிகிறேன் யாரும் அறியாமல்...

**பைரோஸ் ரஹீம்**
**கோயம்புத்தூர் - இந்தியா**



# இன்றைய நாளில் நம்மில் பல பேர் தொலைத்துவிட்டுத் தேடும் ஒரு மிகப்பெரும் செல்வமே இந்தப் புன்னகை..

சிறுவயதில் கள்ளம் கபடம் இல்லாத பிஞ்சுகள் என்பார்கள் உண்மைதான் நமது சிறுவயதில் நாமும் இப்படி சிரித்துக்கொண்டு, ஆடிப்பாடி,ஓடி விளையாடி நண்பர்களுடன் செலவழித்த நினைவுகள் இன்று நம் குழந்தைகளால் மீட்டிப்பார்கிறோம்.

நாம் கடந்து வந்த காலமும்,நேரமும்,வயதும், நாட்களும் எத்தனை கோடான கோடி செலவழித்தாலும் கிடைக்காது என்பதே உண்மை.

இன்று நமக்கு இருக்கும் கவலைகள், கஷ்டங்கள்,நோய்கள்,வேலைப்பளுக்கள்,தொழில் பிரச்சனைகள், குடும்ப குழப்பங்கள், ஆசைகள், பேராசைகள்,எதிர்பார்ப்புகள்,தேவைகள் என்ற பல்வேறு காரணங்களால் இந்த புன்னகை எனும் விலை மதிப்பில்லா செல்வத்தை இன்று தொலைத்துவிட்டு வாழ்கிறோம்..

**எமது தனிப்பட்ட வாழ்வில் சில சுய மாற்றங்களை ஏற்படுத்தும் போது புன்னகை எனும் செல்வத்தை அடைந்து கொள்ள முடியும். அதாவது**

நம்மை விட உயரத்தில் இருப்பவர்களை பார்த்து பொறாமை கொள்வதை விட எமக்கு கீழ் உள்ளவர்களை பார்த்து பொருந்திகொண்டால் உனக்கு பேராசை, பொறாமை ஏற்படாது. புன்னகையோடு வாழலாம்.

அடிப்படை தேவைக்கு முன்னுரிமை கொடுத்து அநாவசிய தேவையை தவிர்த்தலும் , ஆடம்பரத்திற்காய் செலவு செய்யாமல் அடுத்தவருக்கு உதவுதல் மூலம் புன்னகை மட்டுமல்ல இறை திருப்தியையும் பெறலாம்.
தொழிலுக்காகவும் சொத்து சேர்ப்பதற்காகவும் செல்வழிக்கும் நேரத்தில் தனது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருக்கவும் நேரம் ஒதுக்குங்கள்.

மனைவிக்கு நீங்கள் வாங்கிக்கொடுக்கும் பெறுமதியான நகைகள் தொலைந்து போகும் ஆனால் அவளுடன் நகைச்சுவையாக பேசி மகிழ்வித்த நினைவுகள் தொலைந்து போகாது.

பிள்ளைகளுக்காக சொத்து சேர்க்க வேண்டும் என்பதற்காக முழுமையாக உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் என்றாவது சிந்தித்தது உண்டா நம் பிள்ளைகளுக்கு தேவை சொத்து அல்ல என்று அவர்களோடு சேர்ந்து விளையாடுங்கள்,அவர்களது உலகத்தினுல் நீங்களும் நுழையுங்கள் அதுவே அவர்களுக்கு பெரும் சொத்து அதில் கிடைக்கும் இன்பம் உங்களுக்கு உண்டான துன்பம்,கவலை அனைத்தையும் புதைத்துவிடும்..

முடிந்தவரை அடுத்தவர் முகத்தை புன்னகையில் மலரச் செய்யுங்கள் உங்கள் முகம் புன்னகையில் பிரகாசிக்கும்.

சிரித்து வாழ்வோம் பிறரை சிரிக்க வைத்து வாழ்வோம்..



**எம்.பஹ்த் ஜுனைட்**
**ஊடகவியலாளர்**
**காத்தான்குடி**



# அப்பா

நான் பிறந்த அக்கனமே
என் அப்பாவுக்கு
நான் இரண்டாவது தாயானேன்

நான் பேச முனையும்
போது அப்பா....
என்ற
வார்த்தைக்கு இந்த
உலகில் ஈடு ஏது...

நான் தத்தித் தத்தி
நடக்க முனையும்போது
என் அப்பாவின்
கால்தான் என்
மிதிவண்டியாய் இருந்தது

தாயை புகழ்ந்த கவி
அப்பாவை புகழ்ந்த
கவியைப்பார்க்க
குறைந்தாலும்
உண்மையில் அப்பாவை
புகழ்ந்த கவி தான் மேலானது

அன்னையவள் பத்து மாதம்
சுமந்தாலும்
அப்பாவின் இதயத்தில்
நாம் வாழும் வரை
சுமப்பவன்

அப்பாவுக்கு ஒவ்வொரு
மகளும் தன் வீட்டு
மஹாராணி
இந்த அப்பாக்களுக்கு
தான் நபிகளார் சொன்ன
ஆறுதல் வார்த்தைகள்

நீ இரு மகள்களைப்
பெற்றெடுத்தாள்
அதை நல்லொழுக்கம்
உடன் வளர்த்தெடுத்தாள்
நானும் நீயும்
சொர்க்கத்தில் இப்படி
இருப்போமே

என்றார் நம் தூதர்
மகள்களைப் பெற்ற எம்
பெற்றோருக்கு

அன்பான மனைவியை
விட அப்பாக்களுக்கு
மகள்களின் பாசம்
ஒருபடி மேல் அல்லவா

மகளுக்கு சிறந்த
தோழன் அவள் அப்பா

அப்பாவுக்கு சிறந்த
தோழி அவன் மகள்

களைப்போடு வரும்
அப்பாவின்
முகம் பார்த்து
தன் அன்பாலே
முகம் துடைக்கும்

தன்மகள் பார்த்து
அம்மாவும் பொறாமைப்படுவாள்..

அப்பாக்களின் அதிர்ஷ்ட
தேவதை மகளல்லவா

காலம் முழுக்க
தன்னுடன் வைத்திருக்க முடியவில்லை
என்று தெரிந்திருந்தும்

பாசத்தைக் கொட்டித்
தீர்க்கும் அப்பாக்கள் ஆயிரம்

தான் பட்ட கஷ்டம்
தன் மகள் படக்கூடாது
என்று மகளுக்காக
நல்ல வரம் தேடித் திரிகின்றான்
மகள்களைப் பெற்ற அப்பாக்கள்

நல்ல வரம் கிடைத்ததும்
தன்னை விட்டுப் பிரியப்
போகிறாள் என்ற
கவலையை தன்
இதயத்தில் பூட்டி விட்டு
மகளைப் பார்த்து
சமாளிக்கும் அப்பாக்களுக்கு
இது சமர்ப்பணம்.

**உம்மு அப்துர் ரஹ்மான்**
**கிருளப்பன**
**கொழும்பு**



# வேண்டாம் நண்பா சீதனம்

பத்தும் செய்யும்
பணமென்று
நிஜத்தில் கூறும்
என் நண்பா../

மாற்றான் சொத்தை
கொய்யும் கனவொன்று../

இரத்தத்தில் ஊறுது
அது நன்றோ../

பித்தம் வேண்டாம்
சீதனத்தில்../

சத்துள்ள மனது
உனக்குண்டு../

நித்தம் தேவை
சுத்தமது../

காத்து வந்த நற்
பெயருக்கு வேண்டாம்
நண்பா சீதனம்../

**கவி மன்னன்**
**கலேவெல ஆதிப்**



# இன்றைய இளைய தலைமுறை!

தெருவோரக் குட்டிச்சுவர்கள்
யாருமின்றி
வெறிச்சோடிக் கிடக்கின்றன
வீட்டுச்சுவர் மூலையில்
முடங்கியவாறு
இன்றைய
இளைய தலைமுறை
தனிமையில்
யாரையோ பப்ஜியில்
சுட்டுக் கொண்டிருக்கிறது

சீந்துவார் எவருமின்றி
மண்ணோடு மண்ணாக
புதைந்திருக்கின்றன
இளவட்டக்கற்கள்!
எரிவாயு உருளையைக்கூட
தூக்கமுடியாமல்
உருளையாய் இளவட்டங்கள்!

வாழ்த்தட்டைகளுக்கும்
ரோஜாப்பூக்களுக்கும்
“பழம்“ என்ற விளியோடு
என்றோ மலர்வளையம்
வைக்கப்பட்டநிலையில்
டின்டரில் சாட் செய்து
பெஸ்டியுடன் ஊர்சுற்றி
ஓயோவில் ஒத்திகை பார்ப்பதே
இன்றைய ட்ரெண்டிங்!

சத்தான ஆகாரம் தின்று
உடலை முறுக்கேற்றியது
வழக்கொழிந்து
உணவுப் பக்கெட்டுக்குள்
தலை நுழைத்ததில்
எதேட்சதிகாரத்திற்கு
எதிராக வாய் திறக்கமுடியாமல்
இளைய தலைமுறையின்
வாயிலை
அடைத்துக் கொண்டுள்ளன
பர்கரும், பிட்சாவும்!

மொழிப்போரில் உயிர்நீத்த
வரலாறு மறந்து
கல்லூரிப் பாடத்தில்
மொழியெதற்கு என
தாய்மொழி பற்றின்றி
பிறமொழிக்கு பல்லக்குத்
தூக்கும் மொழியரசியல்
புரியாத புதிய தலைமுறை!

வாராத தலைமுடி
மழிக்காத தாடி
கிழிந்த ஆடை
எப்பொழுதும் அலைபேசி தடவல்
தலைகுனிவு வாழ்க்கை!

இவையெல்லாம்–
இளமைத் திருவிழாவில்
வாழ்வைத் தொலைத்த
இளைய சமுதாயத்தின்
சோக முகவரிகள்!

வாழ்வில் வெற்றி பெற்ற
இளைய தலைமுறையால்
வாசிக்கப்படாத
வாழ்க்கைப் பக்கங்கள்!

**-பா.சிவகுமார்**



# மீளாத விடியல்

வானத்து மேகங்கள் சோகத்தின் வாடலை
புகையாய் மண்டலம் வீச....
தாரகைகள் தன் மதி மறந்து உறக்கம்
கொள்ள....எந்தன் உறக்கம் தொலைக்க–இவ்
இரவும் நீளுதே!
எந்தன் உயிரை வதைத்து விடும்
இராட்சதமாய்...

அகிலமே உறங்கும் நொடியினிலே..
நான் மட்டும் ஏனோ???
விடியா இரவின் சாசனத்திலே.
அடிமை விளக்காய் எரிகிறேன்.
இராட்சதமே!!!
நீ எழுதிய–இரவின் நீளலால்...
என்னை தொலைத்து, ஏழையாய்
அலைகிறேன்.

கொஞ்சம் கொஞ்சமாய் கனவென்னும்
பகைதனில் –நினைவென்னும்
சேமிப்பை–உயிரினுள்ளே உயிராய்
விதைத்து விட்டாயே!நானும் உன்னோடு
சிறைவாசம் கொள்ள..

குளிருக்குள்ளும் ,புயலாக எழும்
மழையினுள்ளும் நீளும்...
உந்தன் மௌனம்...
என்னை, தொட்டுத் தொட்டு–சோகமாய்
உறைகிறதே!
இந்த வசியம் சூழும் உன்னிடத்தில்
குற்றமறியாத எனக்குள்–எதையோ
துலைத்து...சிதற விட்டாயே!!

என் இமைகள் இரண்டும்...
மேலும் கீழாக...எட்டி எட்டிச் செல்கையில். ..
புரியாத மொழியை–எந்தன் நெஞ்சினுள்ளே..
இராட்சதமாய்...
அலைபாய்வதன் ரகசியம் தான் என்னவோ??

உன் மையம் கொள்ளலில் நானோ அமைதி இழந்து வருடுகிறேன்.
விடியலைத் தேடி புலம்புகிறேன்.

**இன்னவள்**
**அ.ஹ.பா.ஸாஜிதா ஷிரின்**

# இறுதிப்பதிப்பு



மருதூர் மகன்

சில வரலாறுகளை நாம் எவ்வளவு சுவாரஸ்யமாக ரசிப்போம், இறுதிப்பதிப்பும் கூட ஒரு சுவாரஸ்ய வரலாறுதான் என்றால் என்ன செய்வீர்கள்? ம்ம்... இது கதை அல்ல ஒரு உண்மைக் காதல் வரலாறு.

புலரும் ஒவ்வொரு பொழுதும் அழகானது, என்றாவது உங்களுக்கு பேரழகாக புலர்ந்த பொழுதைப் பற்றி கற்பனை செய்து கொள்ளுங்கள், மகிழ்ச்சியின் உச்சகட்டமது. "எட்டரை மணிக்கு எழுப்பிவிடச் சொல்லிட்டு பெரண்டு பெரண்டு படுக்கான், தம்பி எழும்பு, ஒம்பது மணியாப்போது" என்ற அந்த தாயின் குரல் ஒரு கம்பீரமான கடிகார ஓசை. இலங்கையின் கிழக்கில் மகனை தம்பி என்று அழைப்பது ஒரு மரபு, நான் அறிந்தவகையில் கடந்த மூன்று தசாப்தங்களில் அந்த மரபு இன்னும் மாற்றமடையவில்லை.

எழுந்திருக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் சுருட்டி வாரிக்கொண்டு எழுந்த அவன், இடுப்பில் கட்டிய சாரன் முதுகுப் பக்கமாக எப்படி திரும்பியது என்று யோசித்துக் கொண்டே அதனை சரி செய்தான். "உனெக்கென்ன பிளேன்டி ஆ? டீ ஆ? என்ற தாயின் குசுனிக் கேள்விக்கு" பிளேன்டீ என்ற பதில். சாரன் என்பது இலங்கையில் பாரம்பரியமான ஒரு ஆடை. வேட்டியைப் போன்றது. வெள்ளைச் சாரன் என்றால் கிழக்கிழங்கை சோனகர்களிடம் ஒரு தனி மவுசு, இன்றும் கடைகளில் "ஒரிஜினல் கிப்ஸி வெள்ளச்சாரன் இரிக்கா? " என்று கேட்கும் அறுபதுகளின் ஹீரோக்களும் எழுபதுகளின் ஹீரோக்களும் என் கண்ணில் பட்டுள்ளார்கள்.

"பிளேன்டீ" என்று சொன்ன அவனுக்கு டீ வந்து சேர்ந்ததோடு "காலைல மனிசன் பிளேன்டீ ஆ குடிக்கிற டீய குடி" என்ற தாயாரின் வார்த்தை ஒரு பேரன்பின் வெளிப்பாடு என்றாலும், "நான் பிளேன்டிலாம்மா கேட்ட இத என்னத்துக்கு ஊத்தின, இது டீ என்ன மாவு மொதல்? இத குடிச்சா மனிசன் எங்க உசிரோட இரிக்கிர?" என்ற அவனது கேள்விக்கு,

"டேய் அந்த மாவு இல்லடா இது, இஞ்ச பாரு நீ நம்ப மாட்டாய்னு பொட்டியயும் அப்படியே வெச்சிருக்கன்" என்ற தாயின் வாக்குமூலத்தில் சமாதானமான அவனுக்கு, நேரம் ஒரு தந்தி அடிக்கிறது.

நேரத்தின் தந்திக்கு......(அது கொஞ்சம் இருக்கட்டும்), டீக்கும் பிளேன்டிக்கும் ஏன் இப்படி ஒரு கதை வசனம் என்றால் உண்மையில் இலங்கையில் பால்மா நஞ்சூட்டப்பட்டுள்ளது என்ற ஒரு பிரச்சினை நான்கு வருடங்களுக்கு ஒரு முறை பூதாகாரம் எடுக்கும். அதன் பிறகு பால்மாவை பரலோக மாவாகப் பார்க்கும் ஒரு வர்க்கப் பிரிவு உண்டாகும். அந்த வர்க்கத்தினரில் இவனும் ஒருவன் என்று நினைக்க வேண்டாம், உலகில் நீண்ட காலம் நன்றாக வாழ வேண்டும் என்ற ஒரு சுயநலம்தான் டீ வேண்டாம் என்றதற்குக் காரணம். அப்படி என்றால் அந்த பால்மாப் பிரச்சினை? ஹா! ஹா! ஹா! அதனை பேசிய அரசியல்வாதிகள் அரை மணிநேரத்தில் மறந்து விடுவார்கள் பாவம் மக்கள் அவர்கள் கால் மணி நேரத்தில் மறந்து விடுவார்கள்.

சரி, நேரத்தின் தந்திக்கு விழிசாய்த்த அவன், 09 மணிக்கு இன்னம் 10 நிமிடங்கள் உள்ளது என்றதை உணர்ந்தான். அவ்வளவுதான், அந்த வாசணை சவர்க்காரம் பல்துலக்குவதற்கு ஒரு தூரிகை மற்றும் பற்பசை உடன் வீட்டின் சமயலறையின் பின்புறம் உள்ள திறந்த குளிப்பிடத்திற்குச் சென்றான். இரண்டு நிமிட குளியல் (ஆண்களுக்கு உள்ள விஷேட திறமைகளில் ஒன்று அது),

"உடுப்பு ஐம்பன்னலியாஹா?" என்றான். "இரிக்கிர வேலைக்கு உடுப்பு ஐன் பன்னதான் நேரம், ஆல்மார்ரா டேய் தேவண்டா ஐன் பண்ணி போட்டுட்டு போ" என்ற தாயின் பதில் எத்தனை எரிச்சலூட்டியிருக்க வேண்டும். நேரம் காலை 09.58 விரைவாக ஒரு டீ சேர்ட் மற்றும் நேற்று அணிந்து கழட்டிப்போட்ட அந்த கருப்புக் காற்சட்டை அந்த பழைய சப்பாத்து வெளியில் கொடியில் காய்ந்து கொண்டிருக்கும் அதற்குரிய காலணி என்று, வேகத்தை மிஞ்சுமளவிற்கு அவன் தயாராகிய விதம் பெரும்பாண்மையாக ஆண் மக்களின் நாளாந்த செயற்பாடு என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

என்னிடமும் அவசரத்திற்கு அணிந்து கொள்ள ஒரு கருப்பு காற்சட்டை, ஒரு சோடிச் செருப்பு இரண்டு வர்ணங்களில் டீ சேர்ட்டுக்கள் கைவசம் உள்ளது.

ஒரு அவசர விடுகையில் "நேரத்தோட எழுப்பி விட சொன்னா எழுப்புறையும் இல்ல, எத்தன தரம் சொல்ற எழுப்ப சொல்லி"என்ற அவனுக்கு பலஸ்தீனிய ஏவுகணை போல "எத்தனாரம் எழுப்புற ஒன்ன, எழுப்ப எழுப்ப மத்தப்பக்கம் மாறி குப்புற படுத்துப்போட்டு கத்தாம ஆள் மார்ரா டேய்" தாயாரின் தாக்குதளுக்கு எதிர்வினையாற்றாமல் வேகமாக வெளியேறும் போது "பறந்து போகாம மெதுவா போ, மோட்டசைக்கள்ல சாதியா பறக்குற நீ " என்ற தாய் அன்பின் வெளிப்பாடும் ஒரு வகை காதல்தான். அந்த கறுப்புக் கேட்டை திறந்து கொண்டு இருசக்கர வாகனத்தை உருட்டிய அவனுக்கு வீட்டின் மேல் இருந்து "மோட்டர் ரவிக் நிப்பான் லைசன் எல்லாம் எடுத்தியா?" என்ற அந்த வழியனுப்பும் வார்த்தையில் ஒரு தடவை மீள் பரிசீலனை செய்து கொண்டான் அவற்றை எல்லாம்.

"பறந்து போகாம" என்பது வேகமாகச் செல்ல வேண்டாம் என்பதை குறிக்குக்கும் கிழக்கிலங்கைப் பேச்சுவழக்கு. "நடுச் சென்டர் ஆல போகம சைட் ஓரத்தால போகனும் " மகன் என்று கூறி வாசணைப்பவுடர் பூசிய முகத்தை துடைத்து தனது பிள்ளைக்கு ஒரு ஆசை முத்தம் கொடுத்து வழியனுப்பி வைப்பது கிழக்கிலங்கை அம்மாக்களின் ஒரு இயல்பு நிலை. தமிழ்ச் சொல் நடுவும் ஆங்கிலச் சொல் சென்டரும் (Centre) ஒருமித்து நடுச்சென்டர் என்ற சொல் உருப்பெற்றது எங்கள் கிழக்கிலங்கையில்தான். அப்படி என்றால், சைட் (Side) ஓரம் என்பது??

அந்த ஜப்பான் தயாரிப்பு சுப்பர் கப் 50 மேட்டார் சைக்கிளில் இப்போது அவனது பயணம் தொடங்குகிறது. எங்கு செல்கின்றான்?

**அடுத்த பதிப்பில்.....**

துணிங்கதழ்
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 10 | 20 ஜூன் 2021



# வாலிபமும், கையாளும் முறைகளும்

## Young Age & Dealing Mathods

நிதானமாக வாசித்தால், நிரந்தரமான இன்பங்களை தக்க வைத்து கொள்ள முடியும். இன்றைய உலகின் மட்டுமல்ல, ஆதி காலம் தொட்டே "வாலிபர்கள்" என்றால், சமுதாயமே நடு நடுங்கியது.. ஆனால், இந்த காலத்தில் அது தலைகீழாக மாறிவிட்டது.. காரணம் என்ன? இதற்கு தீர்வுகள்தான் என்ன? என்பதை மார்க்கம், உளவியல் இரண்டையும் இணைத்து ஆழமாக இல்லா விட்டாலும், எமக்கு புரியும் அளவுக்கு உற்று நோக்குவோம்..

வாலிபர்களை நெறிப்படுத்துவதில் முக்கிய பங்களிப்பு அந்தந்த குடும்ப உறுப்பினர்களுக்கே அதிக உரிமையுண்டு என்பது எமக்கு நன்றாகவே தெரியும்.. ஆனால், இதன் போது பல பிரச்சினைகள் சமகாலத்தில் உருவாகி வருகின்றமைய கண்ணூடாக கண்டமையினால் இந்த அழகிய வழிமுறைகள்..

ஒவ்வொரு பிரச்சினையுடனும், அதற்குரிய தீர்வை பதிவிடுகிறேன்..

**பிரச்சினை 01:**
"படி படி" என்று தன் பிள்ளைகளிடம் சொல்வது..
இது தவறல்ல ஆனாலும் முறை பிழை..

**தீர்வு:** "இந்த நேரத்தில் கட்டாயமாக படிங்க எனதருமை மக்களே..! இவ்வாறு இவ்வாறு படிக்கலாமே..!" என்று அன்பாக, பண்பாக கருத்துக்களை சொல்லுதல்.. ஏனென்றால், எல்லோரும் படிங்க என்று சொல்வது பொதுவான விடயம் எவ்வாறு படிப்பது என்று எத்தனையோ மாணவர்களுக்கு வழிகாட்டப்படவில்லை என்பதே யதார்த்தம்..

**பிரச்சினை 02:**
தன் பிள்ளைகளுக்கு முன்னே "நம்முட பிள்ளைகள் எங்கே படிக்க போகுது" என்று அசால்டா சொல்வது..

**தீர்வு:**
இந்த இடத்தில் உள்ளத்தை இரு வகையாக உளவியலாளர்கள் பிரிக்கின்றார்கள்..

01– எந்த கேலியையும் உடைத்து செல்லும் தைரியமான உள்ளம்.

02– தான் செய்யாத ஒன்றுக்காக வலியை அனுபவிக்கும் போது, நொறுங்கி விடும் உள்ளம்.

உண்மையிலேயே உங்கள் பிள்ளை படிக்கவில்லை என்று எந்த ஆதாரத்தை வைத்து கூறுகிறீர்கள்..? சில நேரம் நீங்கள் உறங்கி கொண்டிருக்கும் வேளையில், உஜாராக தன் உறக்கத்தை உதறி விட்டு படிக்கும் பிள்ளைகளாக இருக்கலாமே..!

சரி, உண்மையாகத்தான் படிக்கவில்லை என்றாலும், தனிப்பட்ட முறையில் படிப்பதற்கு எது மகன் ஃ மகள் உனக்கு தடையாக இருக்கிறது? என்பதை பண்பாக கேட்டு விளக்கலாமே..!

எல்லோர் முன்னாலும் அவமானப்படுத்துவது என்பது, சிலவேளை தற்கொலைக்கு கூட தயக்கமின்றி செய்யலாம். அந்த மனோபக்குவம் கொண்டவர்களே வாலிபர்கள்.. செய்த வரலாறுகளும் ஏராளம்..
(அல்லாஹ் எம்மை பாதுகாப்பானாக..!)
ஒரு முஸ்லிமின் மானம் கஃபாவை உடைப்பதை விட பெரிய பாவம்.." (ஹதீஸ்)

**பிரச்சினை 03:**
"படி படி" என்று சொல்லாதீர்கள்.. இது வரையிலும்..

**தீர்வு:** படிக்க சொல்லும் சில பெற்றோர்கள் குறைந்தது படிப்பதற்கான ஓர் அமைதியான, ஆர்வம் தரக்கூடிய இடத்தை அமைத்து கொடுப்பதில்லை..
"ஆய்வு இடம் என்பது நீங்கள் படிப்பு அல்லது வேலைக்காக மட்டுமே அர்ப்பணிக்கும் ஒரு பகுதி. நீங்கள் சரியான படிப்பு இடத்தை உருவாக்க வேண்டும். இப்போது இதற்கு மேசை இல்லா விட்டாலும், இதுதான் படிப்பதற்கான இடம் என்றாவது ஒதுக்கி, களத்தை அமைத்து கொடுக்க வேண்டும்..

**பிரச்சினை 04:**
சிரித்துப் பேசுவதே கிடையாது. இதெல்லாம் அவசியமா? என்று கேட்கும் சில பெற்றோர்கள் கூட..

**தீர்வு:**
புன்முறுவல் கூட சதகா (ஹதீஸ்)
உளவியலாளர்கள் கூறுகிறார்கள்: சிரிப்பதால் மூளைக்கு செல்கின்ற சில நரம்புகள் புத்துணர்ச்சி அடைகின்றன..

சில பெற்றோர் கூட தன் மூத்த மகன் வளர்ந்து விட்டால் சிரிப்பதும் இல்லை, பேசுவதற்கு ஒரு மாதிரியான கூச்சம்.. இது ஏன்?

வாலிப வயது என்பது அன்பை மட்டுமே ஏங்கும் வயது.
"நீங்கள் அன்பை கொடுக்கவில்லை என்றால், வேறு பக்கம் அன்பை தேடி பாவத்தில் வீழ்கிறார்கள்" (நிறைய வாலிப, யுவதிகளின் வட்ஸப் ஸ்டேடஸ் இவ்வாறு டுழஎந சார்ந்து அமைந்ததற்கு பெற்றோர்களே மிக பிரதானமான காரணம்..) காலம் கடந்து விட்ட பின், நீங்கள் எவ்வளவு பாசம் காட்டினாலும், அது வெறும் வேஷமாகவே வாலிப, யுவதி நெஞ்சங்களுக்கு தெரியும்..

சிறு வயதிலிருந்து முறையான, அளவான அன்பை கொட்டி வளர்த்து வாருங்கள்..

**பிரச்சினை 05:**
தன் பிள்ளைகளின் குறைகளை வெளியில் சொல்லித் திரிதல்.. சில வேளை அது உண்மையில் குறையாக கூட இருக்காது..

**தீர்வு:**
உளவியலாளர், அறிஞர் மாஸ்லோ 1954 யில் மனித தேவைகள் குறித்த மரபு ஒன்றினை உருவாக்கி தமது நூலில் தமது சித்தாந்தங்களை விபரித்துள்ளார். அதில் அவர் குறிப்பிடும் மிக முக்கியமான விடயமாவது:
"சிறுவர்களுக்கும், வளர்ந்தோருக்கும் மதிப்பு மற்றும் புகழுக்கான தேவை மிக முக்கியமானது எனவும் அது உண்மையான சுய மதிப்புக்கும், கௌரவத்திற்கும் முன்செல்கிறது எனவும் மாஸ்லோ தெரிவிக்கிறார். மேலும், மதிப்புத் தேவையை இரு வகையாக பிரிக்கின்றார்:

01– ஒருவருக்கான மதிப்பு (கௌரவம், சாதனை, நிபுணத்துவம் சுதந்திரம்)

02– கீர்த்தி பெற விரும்புதல் அல்லது மற்றவர்களிடமிருந்து முறையான மதிப்பை எதிர்பார்த்தல்.

சுருக்கமாக சொல்ல போனால்..
என்ன பிரச்சினையாக இருந்தாலும், பிரச்சினையுள்ள இடத்தில் மட்டும் நிறுத்தி கொள்ள வேண்டும். இல்லையென்றால், மாணவர்கள் தமது இலக்கை நோக்கிய பாதையை நிறுத்தி, நீங்கள் மற்றவர்களிடம் பேசிய வார்த்தைகளையே எண்ணி, மனை உளைச்சலுக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளது

"ஆய்வு செய்வதும் ஓர் ஆளுமையே..! ஆய்வு செய்து ஆரோக்கியமாக வாழ்வோம்..!"

இதன் அடுத்த பகுதியுடன் மிக விரைவில் உங்களை அடுத்த சஞ்சிகையினூடாக சந்திக்கும் வரை நான்,




**றஜா முஹம்மத் அப்துல் றஸாக்**
(Little Writer. Founder and Community Lecture of Pena Thulihal)

# என் இரட்சகனே!

சலிப்பூட்டும் புவி வாழ்வில்
இதயத்தில் முள்ளாய்
உறுத்துகின்ற கேள்விகள் ஏராளம்
கேட்பதற்கு அனுமதி தருவாயா...?

இரட்சகனே சொல்...
சர்வ உலகங்களையும்
ஆள்பவன் நீ என்றால்
இன்றைய அரசசபைகளில்
நடப்பது யாரின் ஆட்சி...?

இரட்சகனே சொல்...
மனிதரில் எத்தனை பேருக்கு
இதயத்தை வைத்துப் படைத்திருக்கிறாய்...?
எத்தனை இதயங்கள்
உன் நம்பிக்கைத் தீயால்
சூடேற்றப்பட்டிருக்கிறன...?

உன்னை
வணங்குவதற்காக படைக்கப்பட்ட
மனிதனை
உனக்கு மாறு செய்யத்
துணியைச் செய்தது எது...?
அவன் துணியக் காரணம்தான்
என்ன...?

இதில் தோற்றுப் போனது
ஆதாமின் மகனா...?
வெற்றி பெற்றது சாத்தானா..?
இதன் சூட்சுமம்தான் என்ன...?

காலச் சுழற்சியின் வேகத்தினால்
காலத்தின் விநோதங்கள்
மாறத் தொடங்கிவிட்டன

போதகர்கள் புதுவகை மதுவால்
போதையூட்டப்பட்டுள்ளனர்
வேதவசனங்கள் புதுப்புது அர்த்தத்துடன்
வியாக்கியானம் செய்யப்படுகின்றன
வணக்கங்கள் வெறும்
சடங்குகளாகி விட்டன

இளையோரின் இதயங்களில்
அவிசுவாசம் விதைக்கப்படுகின்றது
அவர்களின் குருதியில் புதுவித
நஞ்சும் கலக்கப்படுகின்றது

நரைத்துப்போன வயோதிபத்தின்
அனுபவங்கள் இவ் இளைஞர்
உலகில் செல்லாக்காசுகளாகி விட்டன

எதிரும் புதிருமாய்
வாலிபமும் வயோதிபமும்
முட்டி மோதிப் பயணிக்கின்றன

பெருகிவரும் ஈனச்செயல்களை
தடுத்து நிறுத்த தாமதிப்பதன்
நோக்கம்தான் என்ன...?
இவற்றால் நீ நாடுவதுதான் என்ன...?
இரட்சகனே சொல்லு

நயவஞ்சகர்களின் கபடங்கள்
கசியத் தொடங்கி
ஐயத்தை தோற்றிவிட்டுள்ளன
நதிக்கரை நாகரீகங்கள் மறைந்து
கடற்கரை நாகரீகங்கள்
தோற்றம் பெறுகின்றன

பசியும் பிணியும் பயமும்
நோய்களும் நோக்காடு தருபவைகளும்
மிகைத்து விட்டதினால்
வேடதாரிகளின் அரசியல்
உலகெங்கும் நாறத் தொடங்கி விட்டன
உசாராகி விட்டது சீனா
இனி ஏமாளிகளின் தேசமெங்கும்
பறக்கப்போகிறது சிவப்புக் கொடி

அடிமைத்தனம் அண்ட முடியாதபடி
சிந்தைகள் சுதந்திரமுறட்டும்
வாலிபம் சத்தியத்தை
கற்றுத் தெளியட்டும்
வாழ்வு வணக்கமாக மாறட்டும்

என் இரட்சகனே!
உன் நம்பிக்கையாளன்
இழக்கக் கூடாததையெல்லாம்
இழந்தவண்ணம் இருக்கின்றான்
ஆனால் பொறுமையெனும்
கூர் வாளைத் தவிர
அது நம்பிக்கை எனும்
உறையினுள் ஓய்வெடுக்கிறது

என் உள்ளக் குமுறல்களை
வேண்டுதலாக ஏற்றுக்கொண்டு
அச்சமெனும் சிறையை உடைத்து
சுதந்திரமான ஆன்மாக்களை
விடுதலை செய்...

**இம்தியாஸ்**



# போதை வஸ்துக்கள்

நவீனமயம் எங்கும் பரவல் அடைந்துள்ளது அதனோடு சேர்ந்து குடி குடியைக் கெடுக்கும் அளவு பரவலாக போதை வஸ்துக்கள் பாவனையும் பரவல் அடைந்துள்ளன. மனித வாழ்வை சீரழித்து நடுத்தெருவில் குடும்பம் நிற்கும் அளவுக்கு கொண்டு வந்து விடும்.

எவ்வளவுதான் தடை செய்தாலும் ஒளித்து ஒளித்து இறக்குமதி செய்கின்றனர் வாழ்வே அளிக்கும் வாலிபத்தை அளிக்கும் கேரளா கஞ்சா போன்ற போதைவஸ்துக்களை அனைத்தையும் தடுக்க காவற்படை, அரசாங்கம் என்ன தடை உத்தரவு வழங்கினாலும் ஒரு கதவை மூடி மதுபானசாலை கதவை திறந்து வைத்துள்ளனர். மேலும் "யார் தடுத்தாலும் நிறுத்த முடியாது தானாக திருந்தும் வரையில் . தானாக யோசிக்கவேண்டும். "நான் இதை அருந்துவதால் என்ன எனக்குப் பலன் அல்லது யாருக்காவது பலன் உண்டா " என்று சற்று சிந்தித்தால் முற்று வைக்க விடை கிடைக்கும்.

நோயை விரும்பி சுகத்துக்கு என்ற பெயரில் மது அருந்தினால் மன அமைதி கிடைக்கின்றது. என்று அதற்கு அடிமையாகி பணத்தை வாரி வழங்கும் சமூகம் மேலும் இது நாளாந்தம் பாடுபடும் வறியவரின் உடல் களைப்புக்கு பயன்படுத்துகின்றோம்.

என்று அவர்கள் கூறினாலும் இதையே பொழுதுபோக்காக இது ஒரு நாகரீகம் என பணக்கார வீட்டிலும் போதைவஸ்து பாவனை மலிந்து விட்டது. தவறுகள் ஆயிரம் கண்ணில் படுவது ஒரு சில அவையும் வக்கற்று மனிதன் தண்டனை பட்டு நோயையும் பரிசாக பெற்றுக் கொள்கின்றான். இன்று பல குடும்ப பிள்ளைகள் சிறு வயதிலேயே படிப்பை விட்டு ஆண்பிள்ளை என்றால் ஐநூறுக்கும், ஆயிரத்திற்கும் வேலை என்று அரிசாலை நாடுகின்றனர். பெண்பிள்ளை என்றால் 15 வயது 18 வயதை தாண்டி படித்தது போதும் களவு முறையில் வயதைக் கூட்டி வெளிநாட்டுப் பயணம் அனைத்துக்கும் பின்புலம் என்னவென்று பார்த்தால் புரிகிறது. தந்தை போதைவஸ்து மதுவுக்கு அடிமை இதனால் பிள்ளைகளை காப்பாற்ற முடியாது.

தனியாக தாய்ப்பால் மட்டுமே குடும்பத்தைக் காப்பாற்ற முடியாதுஎன்று வெளிநாட்டுப் பயணம் எத்தனை சுமை, துக்கம் அவலம் நிறைந்தது இந்த மதுபான சாலைகளும் போதவில்லை கொடுக்கும் இன்பம் குடும்பமே சீரழிந்து போகும் அளவு மோசமான நிலை ஆனால் அறிந்தும் அதை வழங்கும் அரசாங்கமும் தான் என்ன புகை பெட்டியில் அருந்துவதால் உடல் உபாதை ஏற்படும் என்று கூறிவிட்டு சிறுவர்களை கையில் வழங்கக்கூடாது பெரியவர்களுக்கு மட்டும் வழங்க வேண்டும் சட்டம் கடைபிடிக்கப்படுகிறதாம்....?

எத்தனை அழகான சட்டம் கடைபிடிக்கப்படுகிறது பார்த்தீர்களா !!! தடை செய்தால் தடை இதனால் நோய் என்றால் சுகாதார செலவு அதிகம் குடும்பத்திற்கும் பின் எத்தனை எதிர்கால சந்ததியின் நன்னடத்தைஇல்லம் நாடுகின்றனர் அப் பிள்ளையின் எதிர்காலம் என்ன ஆகின்றது சரியாக சட்டம் கடைப்பிடித்தால் இவை நடைபெறாது சட்டத்துக்கு இன்று கலப்படம் தளர்வு செய்யப்பட்டுள்ளது. முதலில் இவை சரிசெய்து போதை ஊட்டும் வில்லை இவைகளை தடை செய்ய வேண்டும்..

நாடு வளம்பெறும் வீடு செழிக்கும் இன்பம் பெருகும்

**சாகியா சபிக்**
**பொலன்னறுவை**



Friendship Union for Social Services
சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியம்
සමාජ සේවා සඳහා සුහද සංගමය

# சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியத்தினால் கோதுமை மா வழங்கும் தேசிய வேலை திட்டம்..!

இலங்கை நாட்டில் சமூக சேவையை நோக்கமாகக் கொண்டு இயங்கும் "சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியம்" எனும் தொண்டுசார் அமைப்பின் தேசிய வேலைத்திட்டமாக வசதி குறைந்த குடும்பங்கள் தமக்குத் தேவையான காலை, மாலை, இரவு உணவுகளை வீட்டிலேயே செய்து உண்பதற்காக ஒரு குடும்பத்திற்கு 5 கிலோகிராம் பெறுமதியான கோதுமை மா பொதிகளை வழங்கி வருகின்றது.

கொரோனா தொற்று பரம்பல் நெருக்கடி காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து உள்ள மக்களுக்கு கோதுமை மா வழங்குகின்ற தேசிய வேலை திட்டத்தை மனித நேய செயற்பாட்டாளர்களின் நிதி பங்களிப்புடன் ஒன்றியம் முன்னெடுத்து வருகின்றது.

இவ் அமைப்பின் பொது தலைவர் றொஸான் முஹம்மட் அவர்களின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றுவரும் இவ் வேலைத்திட்டங்களை அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்தி இவ்வமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஸாக்கீர் அஹமட் அவர்கள் முன்னெடுத்து வருகின்றார்.

இவ்வமைப்பானது மாவட்ட ரீதியிலும், பிரதேச ரீதியிலும் அமைப்பாளர்களை கொண்டு பல சமூக செயற்திட்டங்களை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு:

**fus.srilanka@gmail.com**

**0761619184**















# அனைத்து பதிப்புகளும் டிஜிட்டல்
## தொழில்நுட்பத்தில் உங்கள் கைகளில்...




sky தமிழ் NEWS

தனித்துவமே நமது அடையாளம்

www.news.skymediasl.com

இணையதளத்திற்கு

பிரவேசியுங்கள்

@skytamil.lk

**துணிந்தெழு இதழில் உங்கள்**

**விளம்பரங்களைப் பிரசுரிக்க**

**தொடர்புகளுக்கு**

**077 639 11 88**

**077 247 1464**

9 772792 102002

DESIGN: BASITH JM